தர்மசக்கரம்



சித்தார்த்தி ஆூ கார்த்திகை மீ சக்கரம் 28 ஆரம் 11

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா.

Chandra arts

அந்தர்யோக விவரங்கள்

தென்ஆற்காடு ஜில்லா—அவலூர்ப்பேட்டையில் 25—11—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அரசினர் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—அம்பாசமுத்திரத்தில் 25—11—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அகஸ்தியர் கோயில்
நேரம்: காலை 9-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

திருச்சி ஜில்லா—கரூரில் 2—12—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பசுபதிபாளையம் விவேகானந்த கல்விநிலையம்
நேரம்: மாலை 5-00 மணிமுதல் 7-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 9—12—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: நேரில் பகல் உணவிற்கு ரூ. 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்தி சிட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

திருச்சி ஜில்லா—துறையூரில் 9—12—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: செங்குந்தர் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—உசிலம்பட்டியில் 9—12—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: நாடார் சரஸ்வதி மேல்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

கோவைஜில்லா—குமரன்குன்று ஆலயத்தில் 16—12—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு ஸ்ரீ கல்யாண சுப்பிரமணிய சுவாமி ஆலயம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—செட்டிமேடு, டோனாவூரில் 16—12—79 ஞாயிற்றுக்கிழமை

இடம்: செட்டிமேடு
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும் தாய்மார்களும் அந்தர்யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும் பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 28 | சித்தார்த்தி ௵ கார்த்திகை ௴ | ஆரம் 11

பொருளடக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரப் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தாச் செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். தாங்கள் டிபாஸிட் செய்யும் தொகையைப் பேங்கில் இருப்பாக வைத்து அதினின்று கிடைக்கும் வட்டி சந்தாவுக்காக எடுத்துக்கொள்ளப் படுகிறது. இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 12 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பன்னிரண்டு செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் எட்டு அனுப்பலாம். பாக்கி ரூபாய் நான்கையும் பாண்டிச்சேரி S. விசுவநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி' யினின்று ஈடுசெய்து கொள்கிறோம்.

இலவச சந்தா: தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் அரசாங்கத்தால் 1496 பொது நூலகங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. அவை அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர் களின் உதவியால் தொடர்ந்து இனமாக அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் 1-25. வெளிநாடு வருட சந்தா ரூ. 25-00

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணி

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் திருப்பணிக்குத் தொகை சுமார் ஆறு இலட்சம் ரூபாய் தேவை என மதிப்பிடப்பட்டிருக்கிறது. 1979 அக்டோபர் மாத நன்கொடை விவரம் வருமாறு:

தேதி	விலாசம்		ரூபாய்
	செப்டம்பர் மாதம் முடிய நன்கொடை வசூல்		3 90 251
1–10–79	ஸ்ரீ P.M. மாரிமுத்து முதலியார்	துறையூர்	500
	,, N. சுப்பிரமணியம் செட்டியார்	சப்ஜெயில்ரோடு, திருச்சி	250
	,, L. மணிவேல் பிள்ளை	,, ,,	101
3–10–79	ஸ்ரீமதி S. காந்திமதி	சாத்தூர்	156
5–10–79	,, D. குப்பம்மாள்	வாசுதேவபுரம், ஸ்ரீரங்கம்	500
	ஸ்ரீ M. பாலகுரு	குகை, சேலம்	101
6–10–79	,, P.K. சுப்பாராஜா	இராஜபாளையம்	101
8–10–79	,, R.N. வெங்கிடாசலபதி	மதுரை	105
9–10–79	,, S. மாரியப்பன்	பெரியபுத்தூர், சேலம்	101
10–10–79	,, K.N. குப்புசாமி அய்யர்,	அக்ரகாரம், குழுமணி, திருச்சி	501
	,, N. ரெங்கர் முத்துராஜா	அயிலாப்பேட்டை, ,,	501
	,, A ஆறுமுகம் முத்துராஜா	,, ,,	501
	,, S. நடேசன்	எட்டரை, ,,	501
11–10–79	Dr. C. சின்னசாமி	சென்னை	101
17–10–79	ஸ்ரீ P. செல்வராஜன்	தண்டையார்பேட்டை, ,,	100
	அமரர் தங்கம்மாள்	பாளையம்பட்டி	100
	ஸ்ரீ V. சின்னதம்பி	புல்கிரீக், பெர்த், மேற்கு ஆஸ்திரேலியா	100
18–10–79	,, V.V.L.P. பாஸ்கரன் & பிரதர்ஸ்	அரியமங்கலம், திருச்சி	2 001
	,, A.R. மாணிக்கம்	அயிலாப்பேட்டை ,,	251
	,, விநயகா பிலிம்ஸ்	பாபுரோடு, ,,	250
20–10–79	ஓர் அன்பர்	மதுரை	950
21–10–79	ஸ்ரீ A. ராஜமாணிக்கம்	வடிவேல்கரை ,,	160
22–10–79	டாக்டர் K. ராமலிங்கம்	வெளிப்பட்டணம், இராமநாதபுரம்	101
24–10–79	ஸ்ரீ A.R. ராமசாமி செட்டியார்	பள்ளத்தூர் ,,	251
	,, K.R,M. முத்துராமன் செட்டியார்	ஆவணிப்பட்டி ,,	251
	,, P.S.P. பழனியாண்டி அம்பலம்	பள்ளத்தூர் ,,	201
	,, செ. லெ. முத்துச்செல்லப்ப செட்டியார்	அரிமளம், இராமநாதபுரம்	201
	,, K.AR.PL. அருணாசலம் செட்டியார்	ஆத்தங்குடி ,,	201
	,, P.S.V. சேவுகன் செட்டியார்	சண்முகநாதபுரம், ,,	201
	,, பெ. சி. த. லெ. லெக்ஷ்மண செட்டியார்	,, ,,	151
	,, சு. ப. அழகப்ப செட்டியார்	பெருந்துறை, பெரியார் மாவட்டம்	151
	,, மு. வீர. முத்தையா ஆச்சாரி & பிரதர்	பள்ளத்தூர், இராமநாதபுரம்	101
29–10–79	,, A.N. ஸ்ரீநிவாச குப்தா	கும்பகோணம் சில்வர் ஷாப், சேலம்	101
	M/s. சித்ரா டெக்ஸ்டைல்ஸ்	பஜார் தெரு ,,	101
31–10–79	ஸ்ரீ V.S. சிவலிங்க செட்டியார்	V.S.S.V. டிரஸ்ட், மைலாப்பூர்	2 000
	,, மு. நாகப்ப செட்டியார்	திருவெற்றியூர் நெடுஞ்சாலை, சென்னை	501
	M/s. கிருஷ்ண சில்க் எம்போரியம்	ஆற்காடு ரோடு, வடபழனி	251
	ஸ்ரீ R.K.K. நாகப்ப செட்டியார்	ஜலகண்டபுரம், சேலம்	250

[தொடர்ச்சி அட்டை 4ஆம் பக்கம் பார்க்க]

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 28	சித்தார்த்தி ஹூ கார்த்திகை மீ	ஆரம் 11

பிரார்த்தனை

गिरीशं गणेशं गले नीलवर्णं गवेन्द्राधिरूढं गुणातीतरूपम् ।
भवं भास्वरं भस्मना भूषिताङ्गं भवानीकलत्रं भजे पञ्चवक्त्रम् ॥

கிரீசம் கணேசம் கலே நீலவர்ணம்
கவேந்த்ராதிரூடம் குணாதீதரூபம்
பவம் பாஸ்வரம் பஸ்மனா பூஷிதாங்கம்
பவானீ கலத்ரம் பஜே பஞ்சவக்த்ரம்

மலையரசனை, கணேசனை, கண்டத்தின் நீல வர்ணனை, காளை வாகனனை, குண அதீதனை, மூலகாரணனை, நீறு பூசியவனை, பவானி சமேதனை, ஐந்து முகத்தனைப் போற்றுகிறேன்.

கருவுற்ற நாள்முத லாகஉன் பாதமே காண்பதற்கு
உருகிற்(று) என் உள்ளமும் நானுங்கிடந்தழிந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றியூரா திருவால வாயா திருவா ரூரா
ஒரு பற்(று) இலாமையுங் கண்(டு) இரங்காய் கச்சியேகம்பனே.

— *திருநாவுக்கரசர்*

அருள் விருந்து

அறம் உலகை ஆளுகிறது.

உண்டி சுருக்கமே ஒப்பற்ற மருந்து.

கசப்புச் சொல் சம்வாதத்துக்கு உதவாது.

பரத்தை அடைதற்கு நிகரான பேறு இல்லை.

ஏகாந்தம் மனதுக்கு நல்லுணவு ஊட்டுகிறது.

மனதிற்கப்பாலிருப்பதை அறிதற்கு மனதை ஒதுக்குக.

மேலாம் எண்ணங்களே மேலாம் பாங்கை வளர்க்கின்றன.

யாண்டும் ஆற்றலும், அறிவும் படைத்தவனாகவிருப்பேனாக.

அருளில் நம்பிக்கை வைக்காதவன் அச்சத்துக்கு ஆளாகிறான்.

உலகுக்குத் தேவையாயிருப்பது ஒரு மதமன்று, மதங்களின் ஒற்றுமையாம்.

தந்திரி ஒருவன் சேனையைச் சமாளிக்கிறான்; தன்னையே சமாளிப்பவன் வேந்தனாகிறான்.

சிந்தையில் துன்புறுத்தாது இருப்பவனே செயலிலும் துன்புறுத்தாது இருக்கிறான்.

செயல், சொல், சிந்தை ஆகிய மூன்றிலும் சாந்தி நிலவுக; அது பிரார்த்தனைக்கு நிகர்.

எனக்கு உரியவைகள் என நான் இறுமாந்திருப்பவை யாவும் இறைவனுக்குரியவைகளாம்.

சிலருடைய நலனல்ல, பலருடைய நலனல்ல, எல்லாருடைய நலனையே பக்தனொருவன் நாடுகிறான்.

சந்தனத்தின் நறுமணம் அதை அணிகிறவனுக்கு மட்டும் உள்ளது. சீலத்தின் நறுமணமோ சொர்க்கத்தை எட்டுகிறது.

எப்பொழுதெல்லாம் இறைவனுடைய பெரும் திட்டத்தினின்று மானுடன் பிசகுகின்றானோ அப்பொழுதெல்லாம்அவன் துன்பத்துக்காளாகிறான்.

ஓட்டைப் பாத்திரத்தில் நீர் நிற்காது. ஐம்பொறிகள் என்னும் ஓட்டைகள் வாயிலாக உன் ஆற்றல் அழிந்துபட்டுப் போகாது பார்த்துக்கொள்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

1884ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ஆம் தேதி சனிக்கிழமை. ஆதார் என்பவர் பரமஹம்ச தேவருடைய ஆழ்ந்த பக்தர்களுள் ஒருவர் ஆவார். கல்கத்தாவின் வடபகுதியிலே ஷோபா பஜார் என்னும் ஊர்ப்பிரிவினுள் அவர் வசித்து வந்தார். அரசாங்கத்தின் கீழ் அவர் உத்தியோகம் வகித்து வந்தார். தமது கடமைகளை அவர் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தார். நாள்தோறும் உத்தியோகப் பணிவிடைகளை முறையாக முடித்துவிட்டு மாலை நேரம் வீட்டுக்கு வருவார். அதன் பிறகு அவர் பரமஹம்சதேவரைத் தரிசிக்க வாடகைக்கு வண்டி அமர்த்திச் செல்லுவது வழக்கம். பரமஹம்ச தேவரைத் தரிசிப்பதில் அவர் அடைந்த ஆனந்தம் அளப்பரியதாம். அப்படியிருந்தும் பரமஹம்சர் நிகழ்த்திய சம்பாஷணைகளில் அவர் கருத்தைச் செலுத்துவதில்லை. பரமஹம்ச தேவரை நேரில் பார்த்து வணங்குவார். பிறகு தக்ஷிணேசுவர ஆலயத்திலுள்ள சிவன், சக்தி, விஷ்ணு ஆகிய தெய்வங்களின் சந்நிதிகளுக்குச் சென்று சேவிப்பார். பிறகு தரையில் ஓரிடத்தில் பாயை விரித்து அதன்மீது படுத்து அயர்ந்து தூங்குவார். இந்தத் திட்டம் பரமஹம்சதேவருக்கும் சம்மதம். இரவு மணி ஒன்பது அல்லது பத்து ஆகும்பொழுது வீட்டிற்குத் திரும்பிப் போதல் பொருட்டு அவர் தட்டி எழுப்பப்படுவார். நாள்தோறும் தக்ஷிணேசுவர ஆலயத்திற்குச் சென்று பரமஹம்சதேவரைத் தரிசிப்பது ஒன்றே அவருக்குப் போதுமானது. அத்தகைய தரிசனத்தின் வாயிலாகத் தாம் பாக்யவான் ஆனதாக அவர் கருதி வந்தார். அந்த ஆதாருடைய வேண்டுதலுக்கு இணங்கிப் பரமஹம்சதேவர் அந்தப் பக்தருடைய இல்லத்திற்கு அடிக்கடி எழுந்தருளுவது உண்டு. எப்பொழுதெல்லாம் அன்னவர் இல்லத்திற்குப் பரமஹம்சர் எழுந்தருளினரோ அப்பொழுதெல்லாம் ஆங்கு விழாக்கள் கொண்டாடப்படும். அவைகளில் பக்தர்கள் பலர் வந்து கலந்துகொள்வார்கள். அங்ஙனம் குழுமிய அன்பர்கள் எல்லார்க்கும் அன்புடன் அமுது படைப்பது ஆதாருடைய அருஞ்செயலாயிருந்து வந்தது. ஒருநாள் வழக்கத்துக்கு ஒப்பப் பரமஹம்ச தேவர் அவருடைய வீட்டிற்குச் சென்றிருந்தார். அவ்வேளையில் ஆதார் இயம்பியதாவது: "ஐயனே தாங்கள் நெடுநாளாக என் வீட்டிற்கு எழுந்தருளவில்லை. அதை முன்னிட்டு அறைகள் யாவும் இருள் சூழ்ந்தவைகள் ஆயின. வேண்டப்படாத துர்நாற்றமும் அவ் அறைகளில் வீசுவதாயிற்று. ஆனால் இன்றைக்கோ இல்லம் முழுதும் இன்பத்தில் திளைத்திருக்கிறது. தங்கள் சாந்நித்தியத்தினின்று ஒளிர்கிற தெய்விக இன்பம் அக்கம் பக்கம் எங்குமே நிறைந்துள்ளது. இன்று நான் உள்ளன்போடு கடவுளிடத்துப் பிரார்த்தனை பண்ணினேன். அப்படிப் பிரார்த்தனை பண்ணிய பொழுது என்னையறியாது நான் கண்ணீர் சொட்டவும் செய்தேன்." சிஷ்யரிடம் கருணாகர முகங் கொண்டு கருத்தைச் செலுத்துதற்கிடையில் அப்படியா? என்று அவர் அன்புடன் விசாரித்தார்.

தம்முடைய சிஷ்யர்களுடன் சூழப்பெற்றவராகப் பரமஹம்சதேவர் ஆதாருடைய இல்லத்துக்கு எழுந்தருளினர். குழுமியிருந்த அனைவரும் மகிழ்வுற்றிருந்தனர். வந்திருந்தவர்களுக்கெல்லாம் அறுசுவையுடன் விருந்தோம்புதற்கேற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வேற்றூர்களும் பலர் ஆங்கு வந்திருந்தனர். ஆதாருடைய அழைப்புக்கு இணங்கி அவருடைய ஸ்தானத்துக்கு அடுத்தப்படியிலிருந்த ஏனைய நியாயாதிபதிகள் பலர் ஆங்கு வந்திருந்தனர். பரமஹம்சதேவருடைய பரவசநிலையைப் பார்க்கவேண்டுமென்று அன்னவர்கள் அவாவுற்றிருந்தனர். நியாயாதிபதிகளாகிய அவர்கள் பரமஹம்சரிடமிருந்த தெய்விகப் பண்பையும் மதிப்பிடும் நோக்கத்திலிருந்தனர். அக்கூட்டத்தார்க்கிடையில் பங்கிம் சந்திர சட்டர்ஜியும் ஒருவராகத்திகழ்ந்திருந்தார். 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே வங்காளத்திலே தோன்றிய பண்டிதர்களுள் இவர் முதன்மை வகித்தார் என்று மொழியலாம். நவீன வங்

காள மொழியைச் சிருஷ்டித்தவர்களுள் பங்கிம் சந்திர சட்டர்ஜி ஒருவராவார். சமுதாய சம்பந்தமாகவும் தெய்வீக சம்பந்தமாகவும் நூல்கள் பலவற்றை அவர் இயற்றியுள்ளார். ஆட்சித் துறையில் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இணக்கம் ஏற்பட்டிருந்தது. அந்த இணக்கத்தின் விளைவாக இரண்டு நாடுகளின் பண்புகளிலே ஊறி வளர்ந்திருந்த மக்கள் பலர் இருந்தனர். அன்னவர்களில் ஒருவர் பங்கிம் சந்திர சட்டர்ஜி. ஹிந்துமத சாஸ்திரங்களுக்கு இக்காலத்திய கொள்கைகளுக்கு ஒப்ப அவர் வியாக்யானங்கள் பண்ணினார். சமுதாய அமைப்பில் சீர்திருத்தங்கள் பல வந்தமைந்தாக வேண்டும் என்பது அவருடைய உறுதியான கொள்கையாகும்.

ஆங்குக் குழுமியிருந்த பக்தர்களுள் பலரைப் பரமஹம்சதேவர் முன்பு சந்தித்ததுகிடையாது. அத்தகையவர்களை ஒருவர்பின் ஒருவராக ஆதார் பரமஹம்சதேவரிடம் அறிமுகப்படுத்தி வைத்தார். பரமஹம்சதேவரும் அப்பிரமுகர்களோடு மகிழ்வுடன் உரையாடிக்கொண்டிருந்தார். பங்கிம் சந்திர சட்டர்ஜியை ஆதார் இங்ஙனம் பரமஹம்சதேவரிடம் அறிமுகப் படுத்திவைத்தார் :

"ஐயனே இவர் ஒரு மகாபண்டிதர். இவர் நூல்கள் பலவற்றை இயற்றியிருக்கிறார். தங்களைத் தரிசிக்க இவர் இங்கே வந்திருக்கிறார். இவருடைய பெயர் பங்கிம்."

பரமஹம்சதேவர் (புன்னகை பூத்தவராக): "பங்கிம் என்றால் வளைந்தவன் என்பதாகிறது. அப்படியானால் உன்னை வளைத்தது யாதோ?"

பங்கிம் (புன்னகை பூத்தவராக): "ஐயனே, அதை ஏன்கேட்கின்றீர்கள்? செருப்படி வாங்குபவன் வளைகிறான். நம்மை ஆண்டு வருகிற வெள்ளைக்கார பிரபுக்களிடம் செருப்படி பட்டு என் சரீரம் வளைந்து போயிருக்கிறது."

பரமஹம்சதேவர் : "அன்பனே, அதுவன்று விஷயம். பங்கிம் என்னும் பெயர் கிருஷ்ணனுக்கு வந்தது. அப்பெயர் கிருஷ்ணனுக்கு வந்ததற்குக் காரணம்உண்டு. பாரமார்த்திகப் பேரன்பில் கிருஷ்ணன் மூழ்கியிருந்தான். அந்த அன்பின் விளைவாக அவன் மேனி வளைந்தது. பக்தியில் ஆழ்ந்துள்ளமேனிகள் மூன்று வளைவுகளைப் பெறுகின்றன. சிற்ப சாஸ்திரப்படி அம்பிகையின் உடல் மூன்று வளைவுகளைப் பெறுவதால் திரிபங்கம் உடைய மேனிபடைத்தவள் என அம்பிகை போற்றப்பெறுகிறாள். ஸ்ரீ கிருஷ்ணனே ராதையினுடைய பேரன்புக்கு இலக்கானான் ஆதலால் அவனுக்குத் திரிபங்கம் அமைவதாயிற்று. ஸ்ரீ கிருஷ்ணனைப் பங்கிம் (வளைந்தவன்) என்று கூறுதற்குக் காரணம் இது என்று சிலர் எடுத்து விளக்குகின்றனர். ஸ்ரீ கிருஷ்ணனுக்கு அமைந்திருப்பது ஆழ்ந்த நீலமேனி.நீலநிறம் அவனுக்கு எப்படி வாய்த்தது என்பது உனக்குத் தெரியுமா? அவன் கையைக்கொண்டே அளந்தால் அவன் மூன்றரை முழம் உயரம் உள்ள உடலைப் படைத்தவன்.அத்தகையவனைக் குள்ளன் என்று நாம் கூறுகிறோம். அப்படிக் கூறுதற்குக் காரணம் என்ன வென்று தெரியுமா? நாம் தூரத்தில் இருந்து பார்க்கிறபொழுது கடவுள் குள்ளனாகவும் கார்நீலம் மேனிபடைத்தவனாகவும் தென்படுகிறான். தூரத்திலிருந்து பார்த்தால் கடல் நீரும் நீல நிறமாகத் தென்படுகிறது. ஆனால் கடலுக்கு அருகில் சென்று கையில் கொஞ்சம் சமுத்திர ஜலத்தை எடுத்துப் பார்த்தால் அதில் நீல நிறம் தென்படுவதில்லை. அது நிறமற்றுத் தெளிந்த ஸ்படிகம்போன்று இருக்கும். இன்னும் சூரியனைப் பார்த்தால் அது ஒரு சிறிய தட்டுப்போன்று தென்படுகிறது. வெகுதூரத்தில் இருப்பதே அதற்குக் காரணமாகிறது. அருகில் சென்றுபார்த்தால் அது சிறியபொருள் அன்று என்பது தெளிவாகும். மானுடன் ஒருவன் கடவுளின் சொரூபத்தை உள்ளபடி அறிகிறபொழுது அப்பரவஸ்து நீலநிறம் உடையதுமன்று, சிறிய பொருளுமன்று என்பது தெளிவாகும். ஆனால் அத்தெளிந்த நிலை எல்லார்க்கும் வாய்ப்பதன்று. அனுபூதியில் சமாதியை அடையப்பெற்றாலொழிய பரவஸ்துவின் நிஜநிலை ஒருவனுக்கு எட்டாது. 'நான்' என்பதும் 'நீ' என்பதும் இருக்கும் வரையில் நாமமும் ரூபமும் இருக்கத்தான் செய்யும். இவையாவும் ஈசனுடைய லீலை. திருவிளையாடலில் திளைத்திருப்பது ஈசனுடைய பாங்கு. மானுடன் ஒருவனுக்கு 'நான்' என்றும் 'நீ' என்றும் பேத புத்தி இருக்கும் வரையில் பரவஸ்து பலப்பல வடிவங்கள் எடுத்து விளையாடிக் கொண்டிருக்கும் காட்சியே மனிதனுக்

குக் கிட்டுகிறது.

"ஸ்ரீ கிருஷ்ணன் புருஷ தத்துவம். ஸ்ரீமதி ராதை பிரகிருதி தத்துவம். மூலப்பிரகிருதியாயிருப்பது பரவஸ்துவின் சக்தியாம். புருஷன் பிரகிருதி என்னும் இரண்டு தத்துவங்கள் மானுடனுடைய காட்சிக்கு எட்டுகின்றன. ஸ்ரீமதி ராதையும், ஸ்ரீ கிருஷ்ணனும் பக்கம் பக்கம் நின்று கொண்டு பரஸ்பரம் அன்பு பூண்டவர்களாகத் தென்படுகின்றனர். அப்படி அமைந்திருப்பதை யுகள மூர்த்தி என்று இயம்புகிறோம். யுகள மூர்த்தியின் பொருள் யாது என்று உனக்குத் தெரியுமா ? புருஷனும், பிரகிருதியும் தோற்றத்தளவில் இரண்டு வியக்திகளாகத் தென்படினும் அம்மூர்த்திகள் ஒன்றினின்று மற்றொன்று வேறு பட்டவையல்ல. அம்மூர்த்திகள் இருவர்களுக்கிடையில் வித்தியாசம் இல்லை. புருஷனைப் பிரிந்து பிரகிருதி இல்லை, பிரகிருதியைப் பிரிந்து புருஷனும் இல்லை. ஒரு மூர்த்தியைப் பற்றிப் பேசும்பொழுது அடுத்த மூர்த்தியும் அதில் அடங்கியிருக்கிறது. தீயும், அதனுடைய சுடுகிற தன்மையும் எப்படி ஒன்றோடொன்று இணைந்திருக்கின்றனவோ, அதே விதத்தில் பிரகிருதி தத்துவமும் புருஷதத்துவமும் ஒன்றோடொன்று இணைந்து இருக்கின்றன. தீயினுடைய சாந்நித்தியமில்லாது சுடும் தன்மையைத் தனித்தெடுத்து நாம் அறிந்துகொள்ள முடியாது. இக்கோட்பாட்டை விளக்குதற்கே ராதாகிருஷ்ண வடிவங்கள் சேர்ந்து அமைக்கப் பெற்று இருக்கின்றன. கிருஷ்ணனுடைய கண்பார்வை ராதையின் மீது நாட்டப்பெற்று இருக்கிறது. அதேவிதத்தில் ராதையின் கண்பார்வை கிருஷ்ணன்மீதுநாட்டப் பெற்றிருக்கிறது. ஸ்ரீமதி ராதை பொன்னர் மேனியள். மின்னலுக்கு ஒப்பானவள் அவள். ஆதலால் கிருஷ்ணன் மஞ்சள் நிற உடை அணிந்திருக்கிறான். கிருஷ்ணனுடைய மேனியோ கார்மேகம் போன்று கருநீலநிறம் படைத்திருக்கிறது. அதை முன்னிட்டு ராதை அணிந்திருப்பது நீலநிறஆடையாம். நீல நிறம் படைத்துள்ள ரத்தினங்களையும் அவள் பூண்டிருக்கிறாள். ஸ்ரீமதி ராதை தன்னுடைய கால்களில் சதங்கையைப் பூண்டிருக்கிறாள். அதேவிதத்தில்கிருஷ்ணனும் சதங்கையைப் பூண்டிருக்கிறான். இந்த இரண்டு மூர்த்திகளும் இங்ஙனம் அமைந்திருப்பதில் அடிப்படைக் கோட்பாடு ஒன்று உண்டு. புருஷனுக்கும் பிரகிருதிக்குமிடையில் அகத்திலும் புறத்திலும் ஒருமைப்பாடே உள்ளது என்பது அக்கோட்பாடாம்." இங்ஙனம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் இயம்பி முடித்தவுடன் பங்கிமும் அவருடைய நண்பர்களும் ஆங்கில மொழியில் ஏதோ முணுமுணுக்க ஆரம்பித்தனர்.

பரமஹம்சதேவர் (புன்னகை பூத்தவராக) "பெருமக்களே மிகவும் நன்று. ஆங்கில மொழியில் நீங்கள் இயம்பிக்கொண்டிருப்பது யாதோ ?"

ஆதார்: "கிருஷ்ண தத்துவத்தைத் தாங்கள் விளக்கியருளியதைக் குறித்து நாங்கள் விமரிசனம் பண்ணிக்கொண்டிருக்கிறோம்."

பரமஹம்சதேவர் (புன்னகை பூத்தவராக): "உங்களுடைய செயல் ஒரு வேடிக்கையான கதையை எனக்கு ஞாபக மூட்டுகிறது. சிரிக்கும்படியும் அது என்னைத் தூண்டுகிறது. அம்பட்டன் ஒருவன் ஒரு தடவை மேன்மகன் ஒருவனுக்கு க்ஷவரம் பண்ணிக்கொண்டிருந்தான். க்ஷவரக் கத்தியோ அந்த மேன்மகன் முகத்தில் ஒரு சிறிய காயத்தை உண்டுபண்ணிற்று. 'Dam!' என்று அம்மனிதன் கூறினன். அந்தச் சொல்லின் பொருள் அம்பட்டனுக்கு விளங்கவில்லை. க்ஷவரக் கத்தியையும் ஏனைய கருவிகளையும் அவன் ஒதுக்கிவைத்தான். அதன் பிறகு அவன் இயம்பியதாவது: "Dam என்று சொன்னீர்களே அதன்பொருள் யாது?" அதற்கு அந்த மேன்மகன் "அதைப்பற்றிக் கவலைப்படாதே. உன்னுடைய காரியத்தைப் பார். அச்சொல்லில் விசேஷக் கருத்து ஒன்றும் இல்லை. ஆயினும் நீ மட்டும் கொஞ்சம் ஜாக்ரதையாக க்ஷவரம் பண்ணு." அம்பட்டனே அந்த விளக்கத்தில் திருப்தியடையவில்லை. அம்பட்டன் சொன்னதாவது: "நீங்கள் பகர்ந்துள்ள Dam நல்லதாயிருந்தால் நான் Damஎன் தந்தை Dam என்னுடைய முன்னேர்கள் Dam. ஆனல் அந்த வார்த்தையில் பொருந்தாத பொருள் இருந்தால் நீங்கள் Dam, உங்கள் தந்தை Dam, உங்களுடைய முன்னேர்கள் அனைவரும் Dam. அவர்கள் எல்லாரும் Dam மட்டுமல்ல, அவர்கள் எல்லாரும் Dam, Dam, Dam, Dam." (எல்லாரும் உரக்கச் சிரிக்கிறார்கள்).

மலைவளர் காதலி

(தாயுமானவர் இயற்றியது)

பூதமொடு பழகிவள ரிந்திரிய மாம்பேய்கள்
புந்திமுத லானபேய்கள்
போராடு கோபாதி ராட்சசப் பேய்களென்
போதத்தை யூடழித்து
வேதனை வளர்த்திடச் சதுர்வேத வஞ்சன்
விதித்தானிவ் வல்லலெல்லாம்
வீழும் படிக்குனது மௌனமந் த்ராதிக்ய
வித்தையை வியந்தருள்வையோ
நாதவடி வாகிய மஹாமந்த்ர ரூபியே
நாதாந்த வெட்டவெளியே
நற்சமய மானபயிர் தழையவரு மேகமே
ஞானவா னந்தமயிலே
வாதமிடு பரசமயம் யாவுக்கும் உணர்வரிய
மகிமைபெறு பெரியபொருளே
வரைரா சனுக்கிருகண் மணியாய் உதித்த
[மலை
வளர்காத லிப்பெண்உமையே.

குறும்பு நிறைந்த சிறுவனொருவன் தொந்தரவுகளையும், தொல்லைகளையும் ஓயாதுகொடுத்துக் கொண்டிருப்பானாகில் அவனைப் பேய் என்று பகருவது வழக்கம். பேய் எனக் கருதப்படுகிற தனி வியக்தி ஏதுமில்லை. பொருந்தாத செயல்களை யாராவது திரும்பத் திரும்பச் செய்து கொண்டிருப்பார்களானால் அவர்களைப் பேய்கள் என்று பொதுமக்கள் பகருகின்றனர். பொருந்தாத பாங்கை அடிப்படையாகக் கொண்டு பேய் என்னும் பெயர் வந்துள்ளது. ஆத்மசாதகனொருவன் பண்பாட்டில் மேலோங்கி வரக் கடமைப்பட்டிருக்கிறான். அதன்பொருட்டு அவனுடைய கருவி கரணங்களையெல்லாம் அடக்கியாளவும் அவைகளை நல் வழியில் செலுத்தவும் அவன் பழகவேண்டும். அதற்கு மாறான பாங்குகள் சில இங்கு விளக்கப்பெறுகின்றன. பிரபஞ்ச அமைப்பு பஞ்சபூதங்களைக் கொண்டது. அவைகள் முறையே ஆகாசம், வாயு, அக்னி, அப்பு, பிருதுவி எனப் பகரப் பெறுகின்றன. இந்த ஐம்பூதங்களுக்கும் ஐந்து தன்மாத்திரைகள் உண்டு. ஆகாசத்தின் தன்மாத்திரை நாதம். வாயுவின் தன்மாத்திரை ஸ்பரிசம், அக்னியின் தன்மாத்திரை ரூபம். நீரின் தன்மாத்திரை சுவை. நிலத்தின் தன்மாத்திரை மணம். ஐந்து தன்மாத்திரைகளையும் நுகர்வதற்கு ஐந்து இந்திரியங்கள் இருக்கின்றன. ஓசையைக் காது கேட்கிறது. ஸ்பரிசம் அல்லது ஊறு அதனை உடல் முழுதும் உணருகிறது. உருவத்தைக் கண் பார்க்கிறது. சுவையை நா அறிகிறது. நாற்றத்தை மூக்கு முகர்ந்து பார்க்கிறது. இந்த ஐந்து பூதங்கள் மானுட அமைப்பில் ஒழுங்குப்பாடில்லாதிருந்தால் அந்தப் பூதங்களிடத்துப் பேய்க்கோலத்தைக் காண்கின்றோம். இந்திரியங்கள் ஐந்தும் கட்டில் அடங்கியவைகளாக இருக்கவேண்டும். அதற்கு மாறாக விஷயாதிகளில் பொருந்தாத போக்கில் இந்திரியங்கள் உலவிக்கொண்டிருக்குமாகில் அந்த இந்திரியங்களுடைய போக்கும் பேய்த்தன்மையாம். சான்று ஒன்று எடுத்துக் கொள்ளுவோம். சுவைப்பதற்கு வேண்டியவாறு தின்பண்டம் அகப்படுகிறது. காலவரையறையில்லாது மானுடன் ஒருவன் ஓயாது ஏதாவது பண்டங்களை அருந்திக்கொண்டே இருப்பானாகில் நா என்னும் அவனுடைய இந்திரியம் பேய்த்தன்மைப் படைத்ததாகிறது. சுவைப்பதற்கு உறுதுணையாயிருக்கின்ற நீரும் பேயின் பாங்கு படைத்ததாகிறது. இக்கோட்பாடுகளைத் தொகுத்து 'பூதமொடு பழகி வளர் இந்திரியமாம் பேய்கள்' என்று தாயுமானவர் கூறுகிறார். புந்தி என்னும் சொல் அறிவைக் குறிக்கிறது. அறியும் தன்மை மக்கள் எல்லார்க்கும் ஒரே விதத்தில் அமைவதில்லை.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு" என்பது கோட்பாடு. ஆனால் மெய்ப்பொருளைக் காண்பாரைக் காண்பதுதான் அரிதிலும் அரிது. இவ்வுலகம் நல்லதா? அல்லது கெட்டதா? என்னும் கேள்வியைக் கிளப்பினால் அறிஞர்கள் பலர் தக்க ஆதரவுடன் பலப்பல பாங்குகளில் இவ்வுலகின் அமைப்பை விளக்கிக் கூறுவார்கள். ஒருவன் கூறுகிற கருத்து மற்றொருவனுடைய கருத்தோடு ஒத்திராது. ஆதலால் அறிவின் போக்கை விளக்க வந்த அடிகளார் 'புந்தி முதலான பேய்கள்' என்று பகருகிறார். பிறர்க்கு

ஓயாது தீங்குகளே செய்து கொண்டிருக்கின்ற பிரகிருதிகள் ராக்ஷசர்கள் என அழைக்கப்படுகின்றார்கள். அப்பெயர் தாங்கியுள்ள தனி இனம் ஒன்று உலகில் இல்லே. மக்களுக்கிடையில் ராக்ஷசர்களிருக்கிருர்கள். விலங்கு, பறவை, புழு, பூச்சி ஆகியவைகளுக்கிடையில் ராக்ஷசக் கூட்டத்திற்குப் பொதுநிலே ஒன்று உண்டு. தொட்டதற்கெல்லாம் சினந்துகொள்ளும் இயல்பு ராக்ஷச இயல்பு ஆகும். கோபம் பொல்லாதது. கோபம் பூண்டுள்ள மனிதன் தாற்காலிகமாகப் பைத்தியக்காரன் போன்று நடந்துகொள்கிருன். அவனுடைய மேனி முழுவதும் அப்பொழுது விஷமாக வடிவெடுக்கிறது. வினேவை எண்ணிப்பார்க்காது கைச்சண்டை, வாய்ச்சண்டை ஆகிய இரண்டிலும் தலே சிறந்தவனுக முன்கோபி ஒருவன் மிளிர்வான். இக்கோட்பாட்டை 'போராடு கோபாதி ராக்ஷசப் பேய்கள்' என அண்ணல் இயம்புகின்ருர்.

போதம் என்பது நல்லறிவு. ஆத்ம சாதகர்கள் யாண்டும் போதத்தில் திளேத்திருக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். ஆனல் சில வேளேகளில் அவிவேகம் படையெடுத்து வந்து நல்லறிஞனேயும் மயக்க வல்லதாகிறது. நல்லவை கெட்டவை ஆகிய அனேத்தும் அடங்கப் பெற்றிருப்பது பிரபஞ்சம். இந்தப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டி பண்ணியவன் சதுர்முக பிரம்ம தேவன். பிரம்ம தேவனுக்குச் சுயம்பு அல்லது தானுகத் தோன்றியவன் என்பது மற்ருெரு பெயர். சுயம்பு என்னும் சொல் ஜீவாத்மனேக் குறிக்கிறது. ஜீவாத்மாக்களின் தொகையே பிரம்மதேவன் என அழைக்கப்படுகிருன். வியஷ்டியாயிருப்பது ஜீவாத்மா. சமஷ்டியாயிருப்பது பிரம்மதேவன். இதற்கு மற்ருெரு சான்று கூறுவது அவசியம். கடலிலுள்ள தனி அலே ஜீவாத்மனுக்கு நிகர். அலேகளின் தொகையாகிய கடலின் மேல்பரப்பு முழுதும் பிரம்ம தேவனுக்கு நிகர். ஏமாற்றுபவன், வஞ்சகன் எனக் கூறப்படுகிருன். ஏமாற்றும் தன்மை தனி ஜீவனுக்குமுண்டு, தொகுப்பாயிருக்கும் பிரம்மதேவனுக்குமுண்டு. தானே தனக்குச் சுற்றமும், தானே தனக்கு விதிவகையும் என்பது கோட்பாடு. நல்ல மனமுடையவன் நல்லறிவு படைத்தவனுக நல்வழியில் செல்கிருன். கெட்ட மனம் படைத்தவன் கேடுடையனுகத் தீய வழியில் செல்லும் வஞ்சகனுகின்ருன். இக்கோட்பாட்டை 'என் போதத்தை ஊடழித்து வேதனே வளர்த்திடச் சதுர் வேத வஞ்சன் விதித்தான்' எனத் தாயுமானவர் கூறுகிருர். வேதனே என்னும் சொல் துன்பம் எனப் பொருள்படுகிறது. விதித்தல் என்பது இயற்கையின் நியதி. நல்லதின் விளேவு இன்பம். தீயதின் விளேவு துன்பம். இன்பதுன்பமயமாகப் பிரகிருதி சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. விதி என்னும் சொல் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்ம தேவனேக் குறிக்கிறது. வினேக்கேற்ற விளேவு என்பது இயற்கையின் விதி. விதியைக் குறித்து யாரும் அஞ்சவேண்டியதில்லே. விதி என்பது நியமம் என்றும் இயற்கையின் நடைமுறை என்றும் காரணத்துக்கேற்ற காரியம் என்றும் பொருள்படுகிறது. மானுடனெருவன் துன்பப்படுவானுனல் அறிவு கெட்ட பாங்கில் அவன் நடந்து கொண்டதே அதற்குக் காரணமாகும். இக்கருத்துக்களே யெல்லாம் 'என் போதத்தை ஊடழித்து வேதனே வளர்த்திடச் சதுர்வேத வஞ்சன் விதித்தான்' என்னும் சொல் அடுக்கில் அண்ணல் அமைத்திருக்கிருர்.

அறியாமையினல் மானுடன் ஒருவன் வலிய தனக்குத் துன்பத்தைத் தேடிக்கொள்வானுகில் அதே மானுடன் அத்துன்பத்தைத் தவிர்த்து இன்பத்தை நிலேநாட்டவும் வல்லவனுகிருன். மனதின்கண் திண்மையை உண்டுபண்ணுகிற மேலான எண்ணம் மந்த்ரம் எனப் பொருள் படுகிறது. திண்ணியனுன பிறகு எண்ணம் ஏதையும் எண்ணுது மானுடனெருவன் மனம் அடங்கியிருப்பானுகில் அப்பொழுது அவன் மௌனநிலேயை எட்டியவனுகிருன். இக்கோட்பாட்டை 'இவ்வல்லலெல்லாம் வீழும் படிக்குனது மௌனமந்த்ர ஆதிக்ய வித்தையை வியந்தருள்வையோ' எனத் தாயுமானவர் விண்ணப்பிக்கின்ருர். ஆதிக்ய வித்தை என்பது பரஞானம். ஜனனமரணத்தை அது வெல்லவல்லதாகையால் அதனுடைய ஆதிக்யம் சிறப்பு வாய்ந்தது. 'வியந்தருள்வையோ' என்னும் சொல் தொடர் மனமகிழ்ந்து ஞானேதயத்தைச் செய்து வைக்கமாட்டாயா? எனப் பொருள்படுகிறது.

அன்னே பராசக்தியானவள் நாத வடிவினளாயிருக்கின்றபொழுது சொற்கள் ஏராளமாக

அவளிடத்திருந்து உதிக்கின்றன. மனதை மேலானதாக மாற்றியமைக்கும் ஓசைகள் அல்லது சொற்கள் மந்த்ரங்கள் என்று இயம்பப் படுகின்றன. விரைவில் சாதகனை மேல்நிலைக்கு எடுத்துச்செல்லும் மந்த்ரத்துக்கு மகாமந்த்ரம் என்று பெயர். அன்னையின் அருளால் மகாமந்த்ரங்கள் கணக்கற்றவைகளிருக்கின்றன. ஆத்ம சாதகர்கள் அவரவருக்குகந்த மந்த்ரங்களை எடுத்து உள்கி அதிவிரைவில் மேன்மையடையலாம். இக்கோட்பாட்டை 'நாத வடிவாகிய மகாமந்த்ர ரூபியே' என்று அண்ணல் இயம்புகின்றார்.

நாதத்தைத் தாண்டிய நிலை ஒன்று உண்டு. எங்கு நாதம் இருக்கிறதோ அங்குப் பிரகிருதி இருக்கிறது. நாதத்தைத் தாண்டிய நிலை நாதாதீதம். ஆங்கு ஓசையுமில்லை, உலகமும் இல்லை. சொல்லுக்கு அது எட்டாத நிலை. மௌனமே அங்கு நிலவுகிறது. அந்நிலை சிதாகாசம் எனவும் சிதம்பரம் எனவும் இயம்பப்பெறுகிறது. அதில் லயமாகிற ஜீவாத்மா கைவல்ய முக்தி அடைகிறான். திரும்பவும் ஜீவவியக்திக்கு அன்னவன் வருவதில்லை. அதை முன்னிட்டே சிதம்பரம் போனவன் திரும்பி வருவதில்லை என்னும் கோட்பாடு வடிவெடுத்தது. 'நாதாந்த வெட்ட வெளியே' என அண்ணல் இயம்புகிறார்.

சமயங்கள் பல இருக்கின்றன. உடலுக்குப் புஷ்டிதரும் உணவு வகைகள் பல இருந்தும் அவைகளுக்கிடையில் முரண்பாடு இல்லை. அவையாவையும் பொதுவாக உணவு என்கிறோம். அதே விதத்தில் மக்களுடைய மனப்பான்மைக்கும் ஐதிகத்துக்கும் ஏற்பச் சமயங்கள் பல இருக்கின்றன. ஒவ்வோர் சமயமும் அதனதன் போக்கில் மனிதனைப் பண்படுத்துவதால் அச்சமயங்களனைத்தும் நற்சமயம் என்னும் பொதுப் பெயர் பெறுகின்றன. பூமியில் பயிர் தழைப்பதற்கு மழை தேவையாயிருக்கிறது. அதே விதத்தில் பரதத்துவத்தின் வளர்ச்சிக்குச் சமயம் தேவையாயிருக்கிறது. பரதத்துவம் அன்னை பராசக்தியின் சொருபத்தினின்று வடிவெடுக்கிறது. ஆதலால் ஜடவுலகில் மேகம் செய்கின்ற செயலை அருள் உலகில் அம்பிகை செய்கின்றாள். இக்கோட்பாட்டை 'நற்சமயமான பயிர் தழைய வரு மேகமே' என்று தாயுமானவர் கூறுகின்றார்.

பரவஸ்துவுக்கு விளக்கம் தருகிற உபநிஷதம் அதை சத்யம், சுந்தரம், ஞானம், அனந்தம் என்று இயம்புகிறது. தோற்றத்துக்கு அப்பாலுள்ள பரவஸ்து தோற்றத்துக்கு வருகிற பொழுது அதில் ஒழுங்குப்பாடும், மகிமையும் கவர்ச்சியும் சேர்ந்து அமைந்திருக்கின்றன. அது அழகின் பாங்கு. அழகுக்கு எடுத்துக் காட்டு மயில். ஆதலால் பரவஸ்துவை அம்பிகை சொருபமாகக் கருதி 'ஞான ஆனந்த மயிலே' என்று அண்ணல் இயம்புகின்றார்.

சமயத்தைப் பற்றி ஆராய்ச்சி பண்ணுமளவு மனத்தெளிவு உண்டாகிறது. சமயங்களுக்கிடையில் வேற்றுமை பாராட்டுகிறவர்கள் தாங்கள் அனுஷ்டிக்கிற சமயத்தைச் சுயசமயம் என்றும் பிறர் அனுஷ்டிக்கிற சமயங்களைப் பரசமயம் என்றும் பேதம் பாராட்டுகின்றனர். அதோடு அவர்கள் நின்று விடுவதில்லை. தாங்கள் அனுஷ்டிக்கிற சமயமே குறியின்கண் சாதகர்களை எடுத்துச் செல்லுகிறது என்றும் ஏனைய சமயங்கள் மக்களை எங்கெங்கேயோ வழி பிசகிப்போகும்படி செய்து விடுகின்றன என்றும் குதர்க்கம் பண்ணுகின்றனர். அந்த மனப்பான்மை சமய அனுஷ்டானத்திற்கு ஒவ்வாது. சத்தியத்தை முறையாக நாடுகிறவன் எங்கெல்லாம் சத்தியம் நிலவுகிறதோ அதை உள்ளபடி ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். விவாதத்தின் மூலமாகச் சத்தியத்தை மறைத்து வைப்பவன் சத்தியத்தினின்று வழுவியவனாகின்றான். அப்படி வழுவியவனுக்கு மெய்ப்பொருள் ஆராய்ச்சி கிட்டமாட்டாது. ஆணவமும் அகங்காரமுமே வீண் விவாதத்தினின்று வடிவெடுக்கின்றன. தான் அனுஷ்டிக்கிற சமயத்தில் உறுதியாக ஈடுபட்டிருப்பதற்கிடையில் மற்றவர்களுக்கும் அவரவர் சமயத்தில் ஆழ்ந்து செல்லுவதற்கு உதவி புரிதல் வேண்டும். அப்படிச் செய்வதன் வாயிலாகப் பெரிய பொருளாகிய அன்னையின் மகிமையை உள்ளபடி அனுபூதியில் உணருகிறார்கள். சமரசம் காணாதவர்கள் நெறியினின்று பிறழ்பவர்கள் மட்டுமல்ல; பரவஸ்துவை அனுபூதியில் அறிந்துகொள்ளத் தகுதியற்றவர்களுமாகிறார்கள். இக்கோட்பாட்டை 'வாதமிடு பரசமயம் யாவுக்கும் உணர்வரிய மகிமைபெரு பெரிய பொருளே' என்று அடிகள் இயம்புகின்றார்.

அருள் நெறி

(ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிஷ்யரான சுவாமி அபேதானந்தரின் போதனை)

தன்னம்பிக்கை உடையவனாக இரு. உன்னிடத்தில் ஆத்ம சொரூபம் இருந்தும் நீ அதை உணராது இருக்கின்றாய். நீ அதை உணராது இருக்கும் வரையில் விமோசனம் இல்லை. உன்னை உடல் சொரூபமாகக் கருதுவதும் மனம் சொரூபமாகக் கருதுவதும் தன்னம்பிக்கை ஆகா. உன்னை ஆத்மசொரூபமாகக் கருதுவதுதான் தன்னம்பிக்கை எனப்படும். இத்தகைய தன்னம்பிக்கை இல்லாதவன் நாஸ்திகன் ஆவான் என்று சுவாமி விவேகானந்தர் பகர்ந்துள்ளார். நீ ஆத்மசொரூபமென்ற நம்பிக்கை உன்னிடத்தில் உறுதிப்பட்டு வருகின்றவளவு உன்னிடம் பேராற்றல் வெளிப்படுகிறது. ஜாம்பவான் அனுமனின் தீரச்செயல்களையும் வீரச்செயல்களையும் ஞாபகமூட்டி அனுமானிடம் தன்னம்பிக்கையை வளர்த்தான். அனுமானுக்கு ஆத்மபோதம் மேலிட்டுத் தன்னம்பிக்கை உண்டானதும் சமுத்திரத்தை விளையாட்டுப் போன்று கடந்து இலங்கையை அடைந்துவிட்டான். சீதாபிராட்டி ராவணனால் அசோகவனத்தில் சிறைவைக்கப்பட்டிருந்தாள். தன் கற்பின்மீது அவளுக்குப் பெரும் நம்பிக்கை இருந்தது. ராவணனுடைய உருட்டலுக்கும், மிரட்டலுக்கும் சீதை சிறிதும் அஞ்சவில்லை. "ராவணா! உன்னை நொடிப்பொழுதில் என் கற்பின் திறமையைக்கொண்டு எரித்துச் சாம்பலாக்கிவிடுவேன். உன்னை அழிப்பது ராமபிரானுடைய செயலாகும். அவருடைய செயலில் நான் தலையிடலாகாது என்று உன்னை உயிரோடு விட்டு வைக்கின்றேன்" என்று ராவணனுக்கு எச்சரிக்கை செய்தாள். சீதை அத்தகைய தன்னம்பிக்கையே வடிவெடுத்தவளாக இருந்தாள்.

நீ உன்னை உடல் சொரூபமாகக் கருதினால் உன்மீது நீ நம்பிக்கைகொள்ள வேண்டாம். அது தன்னம்பிக்கை ஆகாது. உடல் உணர்வை வென்று பழகு. உடல் உணர்வு படைத்திருப்பது உன்னைப் பலஹீனப்படுத்தும். அத்தகைய உணர்ச்சி உன்னிடத்திலுள்ள ஆற்றலை மறைத்து வைக்கிறது. உடல் உணர்வு ஓங்கப்பெற்றவன் தெய்வகாரியத்துக்கோ, அரிய பெரிய காரியத்துக்கோ பயன்படமாட்டான். அவன் கோழை ஆவான். ஆத்மீக உணர்வு ஓங்கப்பெற்றவன் தன்மீது முழுநம்பிக்கை வைக்கலாம். அப்படி அவன் தன்னம்பிக்கை வைப்பதன்மூலம் தன்னிடத்திலுள்ள ஆற்றல்களையெல்லாம் வெளிப்படுத்துகின்றான். உபதேசம் செய்வதிலும், நூல்கள் எழுதுவதிலும், ஒழுக்கம் கடைப்பிடிப்பதிலும் ஆத்மசொரூபத்தில் நம்பிக்கை உடையவன் சிறந்து விளங்குகின்றான். எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கும் ஆற்றல் அவனிடத்து இருக்கிறது. சுவாமி விவேகானந்தர் ஆண்மையைக் குறித்து விளக்கி இருப்பதாவது: "உனக்குச் சரி என்று தோன்றும் கருத்தைச் செயல்முறைக்குக் கொண்டு வருகின்றாய் என்று வைத்துக்கொள்வோம். அதற்கு எதிராக உலகமே திரண்டு வந்தாலும் நீ சரி என்று நினைத்த கருத்தைச் செயலுக்குக் கொண்டுவரும் உள்ளத் திட்பம் உன்னிடத்தில் இருக்குமாகில் அத்தகைய உள்ளத் திட்பத்தையே நான் ஆண்மை என்று பகர்வேன்." இத்தகைய ஆண்மை தன்னை ஆத்ம சொரூபம் என்று உணர்பவனுக்கே உண்டாகும்.

இந்தியாவின் வீழ்ச்சிக்குத் தன்னம்பிக்கை இன்மை ஒரு காரணமாகும். எதையும் செய்து சாதிக்க முடியும் என்று ஆணவ அகங்காரத்துக்கு இடம் கொடாது எண்ணுகின்ற மக்கள் அதிகரிக்கும்பொழுதுதான் இந்தியா மேன்மை அடையும். நீ சத்தியத்தினின்றும் பிசக வேண்டாம். சத்தியமே பேசு. சத்திய நெறியில் நடந்துகொள். சத்திய நெறியில் நீ நடந்துகொள்ளும்பொழுது பிறர் உன்னைப்பற்றி என்ன பேசுகிறார்கள் என்பதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. சத்திய நெறியில் நடந்துகொள்ளுவதற்கு நீ நல்லவனாகவும், வல்லவனாகவும் இருக்கவேண்டும். சத்தியத்தைப் பரப்புவதில் வரிந்து கட்டிக்கொண்டு செயல்படு. ஊக்கத்தோடும், விடாமுயற்சியோடும் செயலாற்று.

ஆத்ம ஞானம் பெறவேண்டும் என்ற தீவிர ஆசைகொள். ஆத்ம ஞானம் பெறுவதுதான் உன் வாழ்வின் குறிக்கோள் ஆகும். பிரம்மச்சரி

யத்தைத் தீவிரமாகக் கடைப்பிடித்து வா. பிரம்மச்சரியத்தின்மூலம் உன் உள்ளம் தெளிவடைதல் வேண்டும். பிரம்மச்சரியம் கடைப்பிடிக்கும் அளவு உன்னிடத்தில் ஆத்ம சக்தி வளர்கிறது. பிரம்மச்சரியம் கடைப்பிடிக்காது நீ ஆத்ம ஞானம் பெறமுடியாது. சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள நுண்ணிய விஷயங்கள் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிப்பவர்களுக்குத் தான் விளங்கும். உண்மையான ஆர்வம் உண்டாகும்பொழுதுதான் நீ வாழ்க்கையில் வெற்றி அடைய முடியும். ஆத்ம ஞானம் பெறவேண்டும் என்று ஆர்வத்துடன் அல்லும், பகலும் உருகிக் கடவுளிடம் பிரார்த்தனை செய்து கொள். அருணோதயம் ஏற்படுவதற்கு முன்பு கிழக்குத் திசையில் வானத்தில் செந்நிறத்தைக் காணலாம். அஃதே போன்று கடவுள் காட்சி கிட்டுவதற்கு முன்பு உள்ளத்தில் பேரார்வம் பொங்கி எழுகிறது. உனக்குக் கடவுளிடத்தில் எத்தகைய அன்பு உண்டாக வேண்டும் என்பதை ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார். அவர் பகர்ந்திருப்பதாவது: "உலோபிக்குப் பணத்தின் மேல் உள்ள பற்றுதலும், புதிதாகப் பிறந்த குழந்தையின்மீது தாய்க்கு உள்ள பற்றுதலும், கற்புடைய மாதுக்குக் கணவன்மீது உள்ள பற்றுதலும் ஒன்று சேர்ந்து, கடவுள்மீது உள்ள பற்றுதலாக மாறவேண்டும். அத்தகைய தீவிரமான அன்பு, கடவுளிடம் உண்டாகும் பொழுதுதான் கடவுள் காட்சி கிட்டும்." உன் உள்ளத்தின் சக்திகள் எல்லாம் உலக விஷயங்களில் செலுத்தப்பட்டு வீண் விரயமாகிக் கொண்டு இருக்கின்றன. அப்படி விரயமாகும் சக்திகளையெல்லாம் ஒன்று சேர்த்துக் கடவுள்பால் செலுத்தப் படவேண்டும். உன் மனதில் எழும் எண்ணங்களைக் கடவுள் சம்பந்தமான எண்ணங்களாக மாற்று. கடவுள் சம்பந்தமான எண்ணம் வலுவுடையதாக ஆகவேண்டும். உன் உள்ளத்தில் எழும் கடவுள் சம்பந்தமான எண்ணம் மாபெரும் சக்தியுடையதாக மாறவேண்டும். உன் உள்ளம் ஆத்மீக விஷயங்களில் செல்வதற்குத் தடை செய்து கொண்டிருக்கும் உலக ஆசைகளையெல்லாம் உன் உள்ளத்தில் எழும் தெய்வீக எண்ணம் எடுத்து விழுங்கிவிடவேண்டும். தெய்வ சம்பந்தமான அத்தகைய வலுவு பொருந்திய எண்ணம் உன் உள்ளத்தில் உண்டாகி அது கடவுள்பால் திருப்பப்படவேண்டும். தெய்வீக எண்ண அலைகளால் உன் உள்ளம் நிரப்பப்பட வேண்டும். மாலை மணியோசையைக் கேட்டதும் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குக் கடவுள் காட்சி பெற வேண்டும் என்ற ஆசை தீவிரமானதாக ஆகி விடும். அப்பொழுது அவர் முகத்தைத் தரையில் தேய்த்துக் கொண்டு "தாயே, இன்னும் உன் காட்சி எனக்குக் கிட்டவில்லை. என் வாழ் நாளில் மேலும் ஒரு நாள் கழிந்து விட்டது என்பதை இந்த மணியோசை எனக்குத் தெரிவிக்கிறது. இப்படி வாழ்நாள் முழுவதும் உன் காட்சி பெறாமலேயே கழிந்து போய் விடுமோ? உன் காட்சி பெறாவிட்டால் நான் வாழ்ந்திருப்பதில் என்ன பயன்?" என்று கூறிப் புலம்புவார். இத்தகைய தீவிரமான அருள் உணர்வு உன் உள்ளத்தில் உண்டாகும்பொழுது அவ்வுணர்வு உன் உள்ளத்தில் உள்ள உலக சம்பந்தமான எண்ணங்களையெல்லாம் எடுத்துவிழுங்கி விடுகிறது.

"உன் அருள் பெறுநாள் என்றென்றே வருந்துவனே" என்று அருள்தாகம் கொண்ட பக்தர் பகர்கிறார். உலக வருத்தம் உள்ளத்தைத் தேய்க்கிறது. கடவுள் காட்சி கிட்டவில்லையே என்ற அருள் தாகத்தில் ஏற்படுகின்ற வருத்தம் உள்ளத்தைப் பண்படுத்துகிறது. உள்ளத்தில் ஏற்பட்ட வருத்தம் உலக சம்பந்தமானதாக இருக்குமாகில் அதைத் துடைத்துத்தள்ள முயலவேண்டும். "வருந்திக்கொண்டு இருப்பவன் ஒரு காரியத்திற்கும் உதவமாட்டான். வருந்துவதால் ஒரு பயனும் இல்லை. வருத்தத்துக்குள்ளாவது அறிவீனம்." இங்ஙனம் சிந்தித்துப் பார்த்து அவ்வருத்தத்தைப் போக்க வேண்டும். கடவுள் சம்பந்தமான வருத்தம் உண்டானால் அதை வளர்க்கவேண்டும். "மனமே! கடவுள் காட்சி கிட்டவில்லையே என்று நீ எப்பொழுது வருந்தப் போகிறாய்? இவ்வுலகை நம்பி நீ மகிழ்ச்சியுற்றிருக்க விரும்புகின்றாய். இது பொருளற்ற மகிழ்ச்சி என்பதை நீ உணராது இருக்கின்றாய். உலக சுகத்தில் மகிழ்ச்சி கொள்ளாது தெய்வச் சிந்தனையில் நீ ஈடுபட்டு உய்வாயாக" என்று மனதுக்கு அடிக்கடி அறிவுரை கூறிக்கொண்டே இருக்க வேண்டும்.

வழிபாடும் மனத்தூய்மையும்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1970 ஆம் ஆண்டு திருப்பராய்த்துறை தபோவனம் சக்தி பூஜை அந்தர் யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[378 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாஹிய பூஜை மானசீக பூஜையாக மாறி அமையவேண்டும். மானசீக பூஜையே சிறந்த தாகிறது. தத்துவத்தை அறிந்து மனதில் பூஜை செய்வது மனபரிபாகத்தை உண்டாக்கு கிறது. மானச பூஜையைத் தாயுமானவர் 'துள் ளும் அறியா மனது பலிகொடுத்தேன்' என்று கூறி விளக்குகிறார். ஆலயத்தில் ராஜகோபுரத் தைக் கடந்து போனதும் பலிபீடம் இருப் பதைப் பார்க்கலாம். அப்பலிபீடத்திற்கு முன் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கவேண்டும். அப்படி வீழ்ந்து வணங்கும்போது துஷ்டத் தனம் வாய்ந்த மனதைப் பலிகொடுத்துவிட்ட தாக எண்ணவேண்டும். துஷ்ட மனதை இறைவனுக்குப்பலிகொடுத்துத் தூய மனதைக் கொண்டு இறைவனை வழிபடவேண்டும். அடுத்துத் தாயுமானவர் "கர்ம துஷ்ட தேவதை கள் இல்லை" என்று பகர்கிறார்.மனதிலுள்ளதீய சம்ஸ்காரங்கள் துஷ்ட தேவதைகள் ஆகின் றன. தீயசம்ஸ்காரங்களை இறைவனுக்குப் பலி கொடுத்தான பிறகு உள்ளத்தில் துஷ்ட தேவதைகளினுடைய ஆட்சி ஒழிந்து போகி றது. அடுத்து, "துரிய நிறை சாந்த தேவதை யாம் உனக்கே தொழும்பன், அன்பு அபிஷேக நீர், உள்ளுறையில் என் ஆவி நைவேத்தியம், பிராணன் ஓங்குமதி தூபதீபம், ஒருகாலமன்று, இது சதாகால பூஜையாய் ஒப்புவித்தேன்" என் கிறார் தாயுமானவர். அம்பிகைக்கு அமைந் துள்ள 'முனிமானஸ ஹம்ஸிகா' என்ற நாமத் துக்கு இது சிறந்த விளக்கமாகிறது. முனிவர் களுடைய மனம் சதா தெய்வ சிந்தனை செய்து கொண்டு இருக்கிறது. நாம் தியானம் செய்து பழகுவதைக்கொஞ்சம்அதிகரித்து மானசபூஜை யாகச் செய்யலாம். மானச பூஜையில் மூன்று கரணங்களுக்கும் வேலை இருக்கிறது. தியா னத்தின்பொழுது நிமிர்ந்து உட்கார்ந்து சரீரத் தைத் தெய்வத்தின் ஆலயமாகக் கருதவேண் டும். புறத்தில் அமைந்துள்ள கோயில் ராஜகோபுரம் சரீரத்தின் சின்னம் ஆகிறது. ராஜகோபுரத்தில் 1, 3, 5, 7 என்று ஒற்றைப் படையில் வாயில்களை அமைத்திருப்பார்கள். அவ்வாயில்கள் தத்துவத்திற்கு விளக்கமாக அமைந்திருக்கின்றன. சரீரத்தில் உள்ள ஒவ் வொரு இந்திரியமும் ஒவ்வொரு வாயிலாக இருக்கின்றது. ராஜ கோபுரத்தில் உள்ள வாயில்கள் பலவற்றிற்குள்ளும் கோயிலுக்குள் செல்லுவதற்கு ஒன்றுதான் பாதையாக இருக் கிறது. அஃதே போன்று சரீரம் என்னும் கோயிலுக்குள்ளே செல்லுவதற்கு மனம் வாயி லாக உதவுகின்றது.மனதின் மூலமாக உள்ளி ருக்கின்றஆத்ம சொரூபத்தினிடம் செல்லவேண் டும். மனம் பகிர்முகமாகச் செல்லும் இடத்து அது இரண்டாந்தர பூஜையாகிறது. மனம் அந்தர்முகமாகச் செல்லுமிடத்துத்தான் தலைத் தரமான பூஜை நிகழ்கிறது. உள்ளே சென்ற மனதைப் பரமாத்மாவுக்குப் பலிகொடுத்து விடவேண்டும். கோயிலில் பலிபீடத்துக்கு அடுத்து துவஜஸ்தம்பம் இருக்கிறது. அங்குச் சென்றவுடன் கோயிலைச் சுற்றி வலம் வருகின் றோம். அப்படி வலம் வருவது பிராணாயாமம் செய்வதற்குச் சின்னமாகிறது. துவஜஸ்தம்பத் தைக் கடந்தபின் அந்தந்த தெய்வத்துக்குரிய வாகனம் அமைக்கப்பட்டிருக்கும். அவ்வாகனம் மூலஸ்தானத்திலுள்ள மூர்த்தியைப் பார்த்துக் கொண்டிருக்கும். வாகனம் ஜீவாத்மாவின் சின்னமாகும். வாகனத்துக்கும் மூர்த்திக்கும் இடையில் நிற்கவும் கூடாது; போகவும் கூடாது என்பது ஐதிகம். மற்றவர்கள் இறை வனை வழிபடுதற்கு நாம் இடையூறாக இருக்கக் கூடாது என்பதுதான் அதற்கு விளக்கம். சிலர் தங்களுக்குக் கோயிலில் இருக்கும் செல்வாக் கைப் பயன்படுத்தி பக்தர்களைக் கோயிலுக்குள் விடாமல் தடுத்து, தாங்கள் மட்டும் தரிசனம் பண்ண வேண்டும் என்று விரும்புவார்கள். அது கங்கா ஸ்நானம் செய்யப் போனவர்கள் சேற்றைப் பூசிக்கொண்டு வந்ததற்கு நிகரா கும் ஜீவ வியக்தியை ஒடுக்கித்தள்ளுவதற்காக வழிபாட்டிற்குச் செல்ல விரும்புகின்றோம். தாங்கள் மட்டும் தரிசிக்க வேண்டும் என்று

விரும்புபவர்கள் ஜீவ வியக்தியை ஒழிப்பதற்குப் பதிலாக ஜீவ வியக்தியைப் பெருக்குபவர்கள் ஆகின்றார்கள். மூலஸ்தானம் இருள் சூழ்ந்திருக்கும். அது நம்முடைய உள்ளத்துக்குச் சின்னமாகிறது. நாம் கண்மூடி உள்ளே பார்த்தால் இருளாக இருக்கும். உள்ளிருக்கின்ற ஆத்மாவை அக்ஞானம் என்னும் திரை மறைத்துக் கொண்டிருக்கிறது. கோயிலில் திரைபோட்டு வைத்திருப்பது அக்ஞானம் என்னும் திரைக்குச் சின்னமாகும். திரை விலக்கப்படுவதற்கு முன் உள்ளிருந்து மணி ஓசை வரும். மணி ஓசை வந்ததும் திரையை விலக்குகின்றார்கள். திரை விலகியதும் தீபாராதனை ஆவதைக் காண்கிறோம். தீப ஒளியின் உதவியால் உள்ளிருக்கும் மூர்த்தியைத் தரிசிக்கின்றோம். மானச பூஜையில் தியானம் செய்வது நிகழ்கிறது. தியானம் செய்யும்பொழுது ஞானதீபத்தைக் கற்பனை செய்யவேண்டும். ஞான ஒளியில் உள்ளிருக்கும் இறைவன் சாந்நித்தியத்தை உணர வேண்டும். மனதிவிடத்தில் உள்ள கூத்தாடும் தன்மை நீங்கி விட்டால் நாம் தூய அறிவு சொரூபமாக இருப்பதை, உணர்கின்றோம். "சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே" என்று தாயுமானவர் பகர்கிறார். இறைவன் பேரறிவு சொரூபமாகவும், பேரானந்த சொரூபமாகவும் இருக்கிறார். அறிவினுடைய சாந்நித்தியத்தை அறிவைக்கொண்டு உணர வேண்டும். ஆனந்தத்தின் சாந்நித்தியத்தை ஆனந்தத்தைக் கொண்டு உணரவேண்டும். பாஹிய பூஜையில் அபிஷேகத்திற்கு நீரை உபயோகப்படுத்துகின்றோம். மானச பூஜையில் அன்பு அபிஷேக நீராகக் கையாளப்படுகிறது. உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவைப் பாஹிய பூஜையில் இறைவனுக்கு நைவேத்தியமாகப் படைக்கின்றோம். மானச பூஜையில் உயிரையே நைவேத்தியமாகப் படைக்கின்றோம். பாஹிய பூஜையில் தூப தீபம் காட்டுகின்றோம். மானச பூஜையில் பிராணன் தூபமாகவும், அறிவு தீபமாகவும் கையாளப்படுகின்றன. உயிர்த் தத்துவமாக இருப்பது பிராணமய கோசம். மனோமய கோசம் செயலுக்கு வரும்பொழுதுஜீவவியக்தி தோன்றுகிறது. பிராணமயமாக இருக்கும் பொழுது ஜீவன் உயிர்தரித்திருக்கின்றது. ஜீவ வியக்தி அப்பொழுது வருவதில்லை. உயிர் வளர்ந்து வரும்பொழுதுதான் ஜீவ வியக்தி தோற்றத்துக்குவருகிறது.

மானச பூஜையில் தூபமாகப் பிராணனும், தீபமாக நல்லறிவு அல்லது விவேகமும் கையாளப்படுகின்றன. இப்படிச்சாதகன் தான்செய்ய வேண்டிய பூஜையை முறையாகச் செய்துவிட்டு ஈசனுடைய கிருபையை நாடி இருக்க வேண்டும். ஆனால் மந்த அதிகாரி எவ்வித முயற்சியும் செய்வதில்லை. கடவுள் தனக்கு அனைத்தையும் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறான். அத்தகையவனுக்குக் கடவுளுடைய கருணை வருவதில்லை. கடவுள் கருணை பெறுவதற்கு ஏற்ற மனநிலையைப் பெற்றாகவேண்டும். காலையிலிருந்து மாலைவரையில் நன்றாக உழைத்துப் பாடுபட்ட வேலைக்காரன் கூலி கேட்டால், அவன் உழைப்பைப் பாராட்டி நல்ல எஜமானனாக இருப்பவன் கூலி அதிகம் கொடுப்பான். வேலை செய்யாது கூலிவேண்டுமென்று கேட்கின்ற வேலைக்காரனுக்கு யாரும் கூலி தரமாட்டார்கள். அங்ஙனம் கடவுள் கருணை தீவிரமான அருள்நாட்டம் உடையவனுக்குத்தான் வருகின்றது. அருள்நாட்டம் இல்லாதவன் கடவுள் கருணையைப் பெறமுடியாது. ஸஞ்ஜயன் கீதையின் முடிவில் தன்னுடைய கருத்தாகப் பகர்வதாவது :

यत्र योगेश्वरः कृष्णो यत्र पार्थो धनुर्धरः ।
तत्र श्रीर्विजयो भूतिः ध्रुवा नीतिर्मतिर्मम ॥

யத்ரயோகேச்வர: கிருஷ்ண: யத்ர பார்த்தோ தனுர்தர: ।
தத்ர ஸ்ரீ விஜயோ பூதி: த்ருவா நீதி: மதி: மம ॥

"எங்கு யோகேசுவரனாகிய கிருஷ்ணனும் எங்கு வில்லைத் தாங்கிய பார்த்தனும் இருக்கின்றார்களோ, அங்குத் திருவும், வெற்றியும், பெருக்கமும், நிலைத்த நீதியும் இருக்கும் என்பது என்னுடைய கொள்கை." தன் கடமையைச் சிரத்தையோடு செய்கின்ற ஜீவன் வில்லைத் தாங்கிய அர்ஜுனனுக்கு ஒப்பாகின்றான். அத்தகைய ஜீவனுக்கு வருகின்ற அருள் யோகேசுவரனாகிய கிருஷ்ணன் ஆகிறது. கிருபை சொரூபமாக இருக்கின்ற ஈசுவரனுக்கும், கிருத்தியத்தை முறையாகச் செய்கின்ற ஜீவனுக்கும் இடையில் வருகின்ற இணக்கம்தான்

யோகம் எனப்படுகிறது. கர்மபலனின் உயர்ந்த நிலை ஈசுவர கிருபை ஆகிறது. கர்மபலனின் உயர்ந்த நிலை புலப்படாததால் அதை ஈசனுடைய கிருபை என்று சொல்லுகின்றோம். முயற்சி எடுத்துக் கொள்பவர்களுக்குத்தான் கிருபை வருகிறது. முயலாதவர்களுக்குக் கிருபை இல்லை. ஜீவன் தன்னுடைய கடமையை முழுதும் செய்து ஈசனுடைய அருளையும் சார்ந்திருக்கிறவிடத்து வருகிற யோகம் சிறந்த யோகம் எனப்படும். சிறந்த முயற்சி உள்ள இடத்து ஆக்கம் வருகிறது; செல்வம் வளர்கிறது; எடுத்த காரியமெல்லாம் வெற்றிகரமாக முடிகிறது; வாழ்வு விரிவடைகிறது; சமுதாய வாழ்க்கைத் திட்டம் தலைத்தரமானதாக அமைகின்றது. ஜீவர்களாகிய நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சியில் ஒரு நாளும் பின்வாங்கக் கூடாது. முயற்சியில் ஆழ்ந்து ஈடுபடுகின்றபொழுது மனம் தானாக நல்ல நிலைக்கு வருகிறது. மனதுக்குச் சரியான வேலை கொடுக்காவிட்டால் அது துஷ்டத்தனமுடையதாகமாறிவிடுகிறது. நம்முடைய மனது துஷ்டத்தனமுடையதாக இருக்கிறது. அதைத் தெய்வ ஆராதனையில் திருப்பிவிட்டால் அதற்குத் துஷ்டத்தனம் செய்ய நேரமில்லாமல் போய்விடுகிறது. மனதைத் தெய்வ ஆராதனையில் ஆழ்ந்து ஈடுபடுத்துகிறபொழுது அதனிடத்துள்ள தெய்வத்தன்மை வளர ஆரம்பிக்கிறது. அப்பொழுது அது பண்பட்ட மனதாகிறது.

மானவதியாக, பரந்த மனப்பான்மை படைத்தவளாக அம்பிகை இருக்கின்றாள். சாதனத்தில் மேலே வருகின்றவர்களுக்குப் பரந்த மனப்பான்மை வருகின்றது. பெரியோர்களுடைய ஜீவிதம் இதற்கு விளக்கமாக இருக்கிறது. ராமனுடைய வாழ்வு பரந்த மனப்பான்மை மயமாக அமைந்து இருக்கிறது. தனுசைத் தாங்கியவர்களுக்கிடையில் நான் ராமனாக இருக்கின்றேன் என்று கிருஷ்ண பரமாத்மா பகர்ந்துள்ளார். ராமனுடைய கோதண்டம் செய்த செயல் ஒரு நாளும் வீண்போகவில்லை. மூன்று இடங்களில் ராமன் தன் காரியத்திற்காகக் கோதண்டத்தைப் பயன்படுத்துகின்றான். மிதிலையில் சீதையை மணந்துகொண்டு தன் தந்தையோடும் மற்றவர்களோடும் அவன் அயோத்திக்குத் திரும்பி வருகின்றான். க்ஷத்திரியர்களை எல்லாம் அழிக்கின்ற செயலில் ஈடுபட்டிருந்த பரசுராமர் ராமனைத் தாக்கும் நோக்கத்துடன் வருகின்றார். பரசுராமரிடம் இருந்த கோபாவேசமான தோற்றத்தைப் பார்த்ததும் தசரதன் மூர்ச்சையடைந்து கீழே விழுந்துவிடுகின்றான். இளைஞனாக இருந்த ராமன் சாந்தமாக நிற்கின்றான். பரசுராமர் சீற்றத்துடன் ராமனிடம் பகர்ந்ததாவது: "அடே க்ஷத்திரியப் பதரே! துருப்பிடித்த சிவ தனுசை ஒடித்துவிட்டதனால் நீ பெரிய வீரனாகிவிட்டாயோ? என்கையிலுள்ள விஷ்ணு தனுசை வளைத்து நாண் ஏற்றிப் பார்க்கலாம். அப்படி நாண் ஏற்றினால்தான் நீ வலிவு படைத்தவன் என்பதை நான் ஏற்றுக்கொள்வேன்." "க்ஷத்திரிய குடும்பத்தில் பிறந்ததற்கு நான் எப்படிப் பொறுப்பாளி ஆவேன்?" என்று கூறி 'க்ஷத்திரியப்பதரே' என்று பரசுராமர் சொன்னதற்கு விடை தந்தான். ராமன் தந்த விடை எவ்வளவு சிறந்தது என்பது பண்பட்டவர்களுக்கே விளங்கும். ராமன் மேலும் பகர்ந்ததாவது: "சாந்தம், இனிமை, அமைதி போன்ற பண்புகளைத் தங்களைப் போன்ற பெரியவர்களிடம் இருந்து சிறியவர்களாகிய நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். பெரியவர்களாகிய தாங்களே பதைபதைப்புடன் நடந்து கொள்வீர்களானால் மேற்கூறிய பண்புகளை நாங்கள் யாரிடமிருந்து கற்றுக் கொள்ளுவது?" இதைக் கேட்டதும் பரசுராமருக்கிருந்த கொதிப்புக் கொஞ்சம் அடங்கியது. மேலும் ராமன் பகர்ந்ததாவது: "தங்கள் கையிலுள்ள விஷ்ணு தனுசைத் தாருங்கள். என்னுடைய பெருமையைக் காண்பிக்க வேண்டுமென்று நான் விஷ்ணு தனுசை வளைக்கவில்லை. பெரியோர்களாகிய தாங்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு விஷ்ணு தனுசை வளைக்க முயல்கின்றேன்." இங்ஙனம் கூறி அவரிடமிருந்த விஷ்ணு தனுசை வாங்கி வளைத்து நாணேற்றி விட்டான். "நான் நாணேற்றிய அம்பு வீண்போகாது; இதற்கு இலக்கு எது என்று தாங்களே கூறுங்கள்," என்று பரசுராமரைக் கேட்டான். "என்னுடைய ஆணவ அகங்காரத்தின் மீது உன்னுடைய பாணத்தைச் செலுத்து" என்று பரசுராமர் கூறினர். ராமன் அவ்வாறே செய்தான். "நீ பூரண அவதாரம் என்று அறிகிறேன். எனக்கு

விவேகம் வந்து விட்டது. அடுத்து நான் செய்ய வேண்டியது யாது?" என்று பரசுராமர் ராமனைக் கேட்டார். "நீங்கள் இமாசலம் சென்று தவத்தில் ஈடுபட்டு உங்களிடத்தில் எஞ்சியுள்ள சித்த விருத்திகளையும் துடைத்து விடுங்கள்" என்று ராமன் பகர்ந்தான். சித்தவிருத்திகளைத் துடைத்துத் தள்ளுவது எல்லார்க்கும் பொதுவான உபதேசம் ஆகும்.

ராவண சம்ஹாரம் செய்து விட்டுச் சீதையை எடுத்துக் கொள்ளுவதற்குச் சீதையின் தூய்மையை ராமன் பரிசோதித்தான். சீதை அக்னியில் பிரவேசித்துத் தன் தூய்மையை வெளிப்படுத்தினள் ராமனுடைய பெருமையை விளக்குவதற்காக ஒரு நிகழ்ச்சி புனைந்துரைக்கப்பட்டுள்ளது. தேவர்கள் தசரதனை தேவலோகத்திலிருந்து ரதத்தில் கொண்டு வந்தார்கள். ராமன் உலக நன்மைக்காகச் செய்த அரியபெரிய செயலைத் தசரதனுக்குக் காட்டுதற்காக அவனை ராமனிடம் அழைத்து வந்தார்கள். தசரதன் ராமனைக் காண்பதற்குப் பெருமகிழ்ச்சி அடைந்தான். தசரதன் ராமனோடு சற்று உரையாடி முடிந்தபிறகு சொர்க்கத்திற்குத் திரும்பிப்போகிறான். அப்போது ராமன் தசரதனைக் கேட்டுக் கொண்டதாவது: "தந்தையே, எக்காரணத்தை முன்னிட்டும் என் தாய் கைகேயியை நொந்து கொள்ளக்கூடாது." கைகேயி ராமனுக்கு மாற்றாந் தாயாக இருந்த பொழுதிலும் அவளைத் தன் தாய் என்று ராமன் சொல்லுகிறான். அது அவனிடமிருந்த பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது. அத்தகைய பரந்த மனப்பான்மையைப் பக்குவமானவர்களிடத்தில்தான் காண முடியும்.

பாண்டவர்களுக்கிடையில் தர்ம ராஜாவிடம் ஒவ்வொரு படித்தரத்திலும் பரந்த மனப்பான்மையைக் காணலாம். சூதாடியது அவர் வாழ்க்கையில் செய்த பெரிய தவறாகும். சூது எவ்வளவு பொல்லாதது என்பதை அவர் உலகுக்கே எடுத்துப் பாடம் புகட்டினார். அச்சிறு குற்றத்திற்காகத் தமக்கு வந்து அமைந்த வனவாசத்தைத் திருப்தியோடு ஏற்றுக்கொண்டார். பாரத யுத்தம் முடிந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுச் சில காலம் ஆண்ட பின் பாண்டவர்கள் ஐவரும் மனைவி திரௌபதியோடு சொர்க்கம் சென்றார்கள். தர்மராஜாவைத்தவிர அவருடைய மற்ற சகோதரர்கள் நால்வரும், திரௌபதியும் சிறு குறைகளை முன்னிட்டுச் சொர்க்கத்திற்குப் போகும் வழியில் விழுந்து விடுகிறார்கள். தர்மர் மட்டும் தனியாகச் சொர்க்கத்திற்குப் போகிறார். சொர்க்க வாயில் அவருக்காகத் திறக்கப்படுகிறது. சொர்க்க வாயிலில் விமானம் வந்து நிற்கிறது. அவர் விமானத்தில் ஏறப்போகும் பொழுது அவரைப் பின்பற்றி வந்த நாயும் வாலை ஆட்டிக்கொண்டு விமானத்தில் ஏறப் போயிற்று. சொர்க்கத்தில் நாய்க்கு இடமில்லை என்று தேவர்கள் தடைசெய்தார்கள். "என்னை நம்பி வந்த நாய்க்கு இடமில்லை என்றால் நானும் இங்கேயே இருந்து விடுகின்றேன். என்னை நம்பி வந்த நாயை இங்கு விட்டு விட்டு நான் மட்டும் சொர்க்கத்துக்கு வரமுடியாது" என்று தர்மராஜா பகர்ந்தார். "உம்மை முன்னிட்டு அந்த நாய்க்கும் விமானத்தில் ஏற அனுமதிக்கின்றோம்" என்றார்கள். வாயிலைத் தாண்டியவுடன் அந்த நாய் தர்ம தேவதையாக மாறியது. "நீ தர்மத்தை விட்டுப்பிசகாது இருந்தமையால் தர்ம தேவதையாகிய நான் உன்னை விட்டுப் பிரியாது தொடர்ந்து வந்தேன்" என்று தர்ம தேவதை கூறியது. சான்றோர்கள் இத்தகைய பரந்த மனப்பான்மை படைத்தவர்களாக இருக்கின்றார்கள். லௌகீக இயல்பு படைத்த நாம் சமயத்திற்கேற்றவாறு நடந்து கொள்வோம். பிறரை மோசடி செய்வதில் நம்முடைய திறமையைக் காட்டி விடுவோம். இராமகிருஷ்ணருடைய ஒவ்வொரு செயலும் பரந்த மனப்பான்மையை விளக்குவதாக இருக்கும். சில செயல்களின் புறத்தோற்றத்தைப் பார்த்தால் சுயநலத்தோடு கூடியதாக இருக்கும். ஆனால் அச்செயல்களின் உள்நோக்கம் பரந்த மனப்பான்மை கொண்டதாக இருக்கும். இராமகிருஷ்ணர் வழிபாட்டில் உயர்ந்தநிலைக்கு வந்தார். வழிபாட்டில் மேல் நிலைக்கு வரவர பூஜையின் புறச்சடங்கு நின்று விட்டது. காளி கோவிலில் இரவு பூஜை முடிந்தபோது அம்பிகைக்கு நைவேத்தியம் செய்யப்பட்ட கோவில் பிரசாதம் இவருக்குக் கட்டளைப்படி வந்து கொண்டிருந்தது. ஒருநாள் இரவு நரேந்திரர் இன்னும் சிலருடன் இராமகிருஷ்ணர் அறையில் அமர்ந்து இருந்தார். அப்போது கோவிலிலிருந்து நான்கு பூரிகளையும் அவற்றிற்கு உண்

டான பலகாரங்களையும் கொண்டு வந்து இராம கிருஷ்ணரிடம் தந்தார்கள். 'பன்னிரண்டு பூரி கள் எனக்குச் சேரவேண்டும். எப்படி நீங்கள் நான்கு பூரிகள் மட்டும் கொண்டு வரலாம்? எனக்குரிய மற்ற பூரிகளையும் கொண்டுவாருங் கள்' என்று பரமஹம்சர் கண்டிப்பாகக் கேட் டார். இப்படி அவர் கண்டிப்பாக நடந்துகொண் டதை நரேந்திரர் பார்த்தார். அப்போது நரேந் திரர் நினைத்ததாவது: 'பரமஹம்சர் ஆனபிறகும் இவருக்குப் பட்டர் புத்திபோகவில்லை. சிலபூரி கள் குறைந்துபோனதால் என்னநஷ்டம்? அதற் காக இப்படிக் கடினமான நடவடிக்கையா?' என்று நினைத்தார். பூரி கொண்டு வந்தவர் அறையை விட்டு வெளியே போன பிறகு இராமகிருஷ்ணர் கூறியதாவது: "இராணி ராச மணி அம்மையார் இக்கோவிலைக் கட்டி உங் கள் போன்ற உத்தமர்கள் அம்பிகையின் பிர சாதத்தை அருந்தவேண்டும் என்று சங்கல்பம் செய்தார். அவ்வம்மையாரின் சங்கல்பத்தை நிறைவேற்றாது இக்கோவில் பணியாளர்கள் அம்பிகையின் பிரசாதத்தை விற்றுவிடுகிறார் கள் அல்லது யார் யாருக்கோ கொடுத்துவிடு கிறார்கள். அவ்வம்மையாரின் எண்ணம் நிறை வேறவேண்டும் என்பதற்காக இவர்களோடு போராடி நான் உங்களுக்குப் பிரசாதத்தை வாங்கித் தருகிறேன்." இராமகிருஷ்ணரின் பரந்த மனப்பான்மையைக் கண்டு நரேந்திரர் திகைத்துவிட்டார். அம்பிகை உபாசனை செய் கின்றவர்கள் பண்பாட்டில் மேல் நிலைக்கு வரவர அவர்களிடம் இத்தகைய பரந்த மனப் பான்மையைக் காண்கின்றோம்.

சுத்தமானசா என்பது அம்பிகையின் பெயர் களில் ஒன்று. சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே! என்று மாணிக்க வாசகர் பகர்கின்றார். சித்தத்தில் உள்ள அழுக் கைப் போக்கித் தம்மைச் சிவமாக்கிக்கொண்ட தில்லையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் அருள் திறத்தை மாணிக்கவாசகர் இங்ஙனம் வியந்து பேசுகிறார். மனம் தூய்மையாகிவிட் டால் அதற்கு ஆதாரமாக இருக்கும் ஆத்ம சொருபத்தின் தரிசனம் கிடைக்கிறது. இராம கிருஷ்ணர் பகர்வதாவது: "ஒவ்வொரு ஜீவனு டைய மனப்பான்மையும் தூய்மையடைந்த மனத்திற்குக் கண்ணாடிப் பெட்டிக்குள் இருக்கும் பொருள் தெளிவாகத் தெரிவதுபோன்று, தெரி கின்றது. நரேந்திரன் தீயவர்களோடு சேர்ந்து பழகி வருகின்றான். அவனை அந்தப் போக்கில் போக அனுமதிக்கக்கூடாது. அந்தப்போக்கிலே போய்க் கொண்டிருப்பானானால் அவனை இங்கு வராமல் தடுத்து விடவேண்டும் என்று நரேந்தி ரனைப் பற்றி இராமகிருஷ்ணரிடம் சிலர் கூறிக் கொண்டு இருந்தனர். இராமகிருஷ்ணர் அதைக் கேளாதவர்போல் இருந்து விட்டார். நரேந் திரன் எத்தகைய கொடியவர்களையும் திருத்தி அமைக்கும் திறமை உடையவனாக இருந்தான். நரேந்திரன் எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் அவன் கீழ் நிலைக்குப் போகமாட்டான் என்று இராமகிருஷ்ணர் உறுதியாக நம்பினார். நரேந் திரனிடம் இராமகிருஷ்ணர் அத்தகைய நம் பிக்கை கொண்டிருந்தார். இராமகிருஷ்ணர் விவேகானந்தரிடம் எத்தகைய நம்பிக்கை வைத்திருந்தாரோ அத்தகைய நம்பிக்கை சாரதாதேவி அம்மையாரும் விவேகானந்தரிடம் வைத்திருந்தார். சுவாமி விவேகானந்தர் அமெ ரிக்காவில் இராமகிருஷ்ணரைப்பற்றிப்பிரசாரம் செய்யாது வேதாந்தக் கருத்தைக் கூறி விட்டு வந்திருக்கிறார். விவேகானந்தர் ஓர் அலாதிப் போக்கில் போய்க்கொண்டிருக்கிறார் என்று மற்ற சிஷ்யர்கள் சாரதா தேவியிடம் பகர்ந்தார் கள். அதற்குச் சாரதாதேவியார் பகர்ந்ததாவது: "விவேகானந்தர் ராமகிருஷ்ணரின் மற்றொரு சொரூபமாவார். பரமஹம்சரின்போக்குக்குஅவர் ஒருபோதும் மாறாகப் போகமாட்டார். எனவே நீங்கள் அவர்மீது கொண்டுள்ள எண்ணத்தை மாற்றிக்கொள்ளுங்கள்." தூயமனம் கொண்ட வர்கள் மற்றவர்களின் போக்கைச் சுலபத்தில் அறிந்துகொள்கிறார்கள்.

அம்பிகைக்கு மனோன்மணி என்ற பெய ருண்டு. முழுப்பேராற்றலோடு காரியத்தில் ஈடு படுகின்ற நிலைக்கு உன்மணியம் என்று பெயர். மனதின் உன்மணிய சொரூபமாக இருப்பவள் அம்பிகையாவாள். மனதைச் சுத்தப்படுத்து வது நம் முதல் கடமையாகும். சுத்தமான மனதைக் காரியத்தில் ஈடுபடுத்தவேண்டும். மனதின்கண் உன்மணியத்தை ஊட்டுபவள் அம்பிகையாவாள்.

குரு சிஷ்யனுக்குத் தீட்சை பண்ணும்

பொழுது அவனுக்கு உன்மணியத்தை உண்டு பண்ணுகிறார். ஆத்மபோதத்தைக் கிளப்புதல், உன்மணியத்தை உண்டுபண்ணுதல், தீட்சை பண்ணிவைத்தல் ஆகிய இவையாவும் ஒரே பொருள் தருவனவாகும். சீதா பிராட்டியைத் தேடிக் கண்டுபிடிக்க வந்த ஆஞ்சனேயர் கடற்கரைக்கு வந்து சேருகிறார். கடற்கரைக்கு வந்த பிறகு கடல் குறுக்கே இருப்பதைக் குறித்து யோசிக்கின்றார். சீதாபிராட்டியைக் காணாது தோல்வியுடன் சென்று இராமரிடம் சீதாபிராட்டியைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று சொல்லுவதற்குப் பதிலாகப் பட்டினி கிடந்து உயிர்விடுவது மேலானது என்று எண்ணுகிறார். அப்பொழுது ஜாம்பவான் "ஆஞ்சனேயா, நீ யார் என்பது உனக்குத் தெரியுமா? உன்னிடத்தில் அளப்பரிய ஆற்றல் இருக்கிறது. நீ மகாவீரன்" என்று கூறி ஆஞ்சனேயருக்கு ஆத்ம சொருபத்தை ஞாபக மூட்டுகிறார். ஆஞ்சனேயரிடம் ஆத்மபோதம் தலை எடுத்தது. பின் விளையாட்டுப் போன்று கடலைக் கடந்து சென்று காரியத்தை முடித்தார். பெரும்பாலாருடைய போக்கு வைக்கோலில் தீ வைத்ததுபோன்று இருக்கிறது. வைக்கோலில் தீ வைத்தால் 'பொசு பொசு' என்று எரிந்து சிறிது நேரத்தில் அணைந்து போகும். வைக்கோலில் வைத்த நெருப்பு காரியத்திற்கு உதவாது. சிலருடைய மனது வேகமாக இருந்து பிறகு தளர்ந்து போகும். எடுத்த காரியத்தை நிறைவேற்றுவதற்கு மனதில் தளராத ஊக்கம் இருக்கவேண்டும். சுவாமி சாரதானந்தர் அமெரிக்காவில் கடவுளைக் காணமுடியும் என்று கூறியபொழுது கடவுளைக் காண்பதற்கு நிபந்தனை என்ன என்று அமெரிக்க அன்பர் ஒருவர் அவரைக் கேட்டார். "நொடிப்பொழுதில் கடவுளைக் காணமுடியும். அதற்கு நிபந்தனை என்ன என்று தெரியுமா? உங்களைத் தண்ணீருக்குள் அமிழ்த்துப்பிடித்துக் கொண்டு மூச்சுவிடத் திணறும்படி செய்வதாக வைத்துக் கொள்ளலாம். அந்நிலையில் உங்களை வைத்துக்கொண்டு இன்னும் சிறிது நேரம் தண்ணீருக்குள் இருந்தால் அமெரிக்காவின் தலைவர் ஆக்குகின்றோம் என்றும், மூன்று லோகங்களுக்கும் தலைவராக்கப் போவதாகவும் ஆசைகாட்டினால் நீங்கள் என்ன சொல்வீர்கள்?" என்று சுவாமி சாரதானந்தர் கேட்டார். "எனக்கு ஒரு பதவியும் வேண்டாம். மூச்சு விடுவதற்குக் காற்று இருந்தால் போதும்" என்று அவர் பகர்ந்தார். இத்தகைய மனநிலை வந்துவிட்டால் நொடிப் பொழுதில் கடவுளைக் கண்டு விடலாம் என்று சுவாமிகள் பகர்ந்தார். "எனக்கு அது சாத்தியமில்லை. வேறு ஏதாவது உபாயம் உண்டா?" என்று அவ்வன்பர் கேட்டார். ஒரு வார காலத்துக்குள் கடவுள் காட்சி பெறலாம் என்றார் சாரதானந்த சுவாமிகள். அதற்குரிய மனநிலை எத்தகையது என்று அவ்வன்பர் கேட்டார். அமெரிக்காவில் தூக்கு தண்டனைக்குப் பதிலாக electrocution என்ற தண்டனை உண்டு. தண்டனைக்குரிய ஆளை நாற்காலியில் உட்காரவைத்து இறுக்கிக் கட்டி விடுவார்கள். பிறகு ஒருவர் வந்து 'நாட்டின் சட்டத்தை மீறி இத்தகைய தவறை இந்த மனிதன் செய்துள்ளான். இவன் சமுதாயத்தில் இருக்கத் தகுதியற்றவன்' என்று வாசிப்பார். உடனே அவன் உட்கார்ந்து இருக்கும் நாற்காலியில் மின்சாரத்தைப் பாய்ச்சுவார்கள். மின்சாரத்தால் அம்மனிதன் தாக்குண்டு இறந்து விடுவான். "ஒரு மனிதனுக்கு electrocution தண்டனை அமெரிக்காவில் விதித்துள்ளார்கள் என்று வைத்துக்கொள்வோம். தண்டனை நிறைவேற்றுவதற்கு இன்னும் ஒரு வார காலம் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது அவனுக்கு மனம் எப்படி இருக்கும்? அந்த மனநிலையை நீ கற்பனை செய்து பார்" என்றார் சுவாமிகள். "அந்த மனநிலை எனக்கு வந்தால் நான் சாப்பிட்டதும், சாப்பிடாததும் எனக்கு ஞாபகம் இருக்காது. யார் என்னை வந்து பார்க்கிறார்கள் என்று கவலைப்படமாட்டேன். தண்டனைக்குரிய நாளைக் குறித்தே என் மனம் சிந்தித்துக் கொண்டிருக்கும்" என்றார் அவ்வன்பர். அத்தகைய மனநிலை இறைவனைக்குறித்து உங்களுக்கு இருக்குமாயின் நீங்கள் ஒரு வார காலத்தில் கடவுளைக்காணலாம் என்றார். "இன்னும் அந்த மனநிலை எனக்கு வரவில்லை" என்று அவ்வன்பர் ஒத்துக்கொண்டார். கடவுள்காட்சி பெறுவதற்கு வேறு உபாயம் உண்டா என்று அவ்வன்பர் கேட்டார். மூன்று மாத காலத்தில் கடவுள் காட்சி பெறுவதற்குரிய மனநிலை உண்டு என்று கூறி அதையும் விளக்கினர்.

"நீர் ஒரு கோடீசுவரர் என்று வைத்துக்கொள்ள லாம். உங்கள் பணத்தை யெல்லாம் ஒரு வங்கி யில் (பேங்கில்) டிபாசிட் செய்திருப்பதாக வைத் துக்கொள்வோம். அப்பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு மூன்றுமாத காலம் உள்ளதாக வைத்துக்கொள்வோம். அங்நிலேயில் அவ்வங்கி எந்த நேரத்திலும் திவாலாகக்கூடும் என்ற செய்தி வந்துவிட்டது. அப்போது உங்கள் மனநிலே எப்படி இருக்கும்?" என்று சாரதானந்த சுவாமிகள் கேட்டார். "நான் செயல் செய்து கொண்டிருப்பதற்கு இடையில் என் மனதின் ஒரு பகுதி வங்கியைப் பற்றியே நினேத்துக் கொண்டிருக்கும்" என்ருர். "அந்த மன நிலே உங் களுக்கு ஏற்பட்டால் மூன்றுமாதங்களில் நீங்கள் கடவுள் காட்சி பெறலாம்" என்று சாரதானந்த சுவாமிகள் கூறினர். "அம்மனநிலே ஓரளவு என்னிடத்தில் இருப்பதாக உணர்கின்றேன். அதைச் செயல் படுத்த முயல்கின்றேன்" என்று கூறினர். "சிரத்தையோடு முயன்று வந்தால் நீங்கள் செயலில் வெற்றி அடையலாம்" என்று சாரதானந்த சுவாமிகள் கூறினர். சாரதானந்த சுவாமிகள் அவ்வன்பருக்கு அத்தகைய தீட்சை செய்துவைத்தார். முன்பு வாரந்தோறும் சுவாமி சாரதானந்த சுவாமிகளின் பேச்சுக்கு வந்து கொண்டிருந்த அந்த அன்பர் வருவதை நிறுத்தி விட்டார். மூன்று மாதங்களுக்குப் பிறகு அந்த அன்பர் திரும்பி வந்தார். சாரதானந்த சுவாமி கள் அப்போது அவர் முகத்தைப் பார்த்தபோது அருள் பொலிவு இருப்பதைக் கண்டார்.

"இப்போது நீங்கள் என்ன சொல்லுகிறீர் கள்?" என்று அவ்வன்பரைச் சாரதானந்த சுவாமிகள் கேட்டார். 'இப்பிரபஞ்சநிலேக்கு அப் பால் ஒரு பெரிய ஆனந்தநிலே இருப்பதைநான் இப்போது தெளிவாக உணர்கின்றேன்' என்று அவர் கூறினர். சாரதானந்த சுவாமிகள் அந்த மனிதனுக்குத் தூண்டுதல் கொடுக்க அவர் செயல்பட்டு ஓரளவு உண்மையைக் கிரகித்தார். சாரதானந்த சுவாமிகள் அம் மனிதனுக்கு உன்மணியத்தை வழங்கியது போன்று அம்பிகை எல்லாருடைய உள்ளத் திலும் உன்மணியத்தை வழங்குகின்ற கிருபா மூர்த்தியாக இருக்கின்ருள். நம் மனதில் உன்மணியம் இருக்கின்ற அளவு நாம் சாத னத்தில் மேலே போகின்ருேம். குண்டலினி சக்தி விழித்து எழுவதே உன்மணியம் என்று பகரலாம். சாதாரண மக்களுடைய உள்ளத் தில் குண்டலினி சக்தி உறங்கிக் கொண்டு இருக்கிறது. மனதைத் தூய்மைப்படுத்துகின்ற வர்கள் தங்களுடைய உள்ளத்தில் குண்ட லினி சக்தியை விழித்து எழச் செய்பவர்கள் ஆகின்ருர்கள். குண்டலினிசக்தி விழித்து எழுந்து வேலே செய்யும்போதுதான் நமக்கு ஆத்மீக அனுபவங்கள் உண்டாகின்றன. குண்டலினிசக்தி ஒவ்வொரு ஆதாரத்தின் வழி யாக மேலேறி வரும்போது விதவிதமான ஆத் மீக அனுபவங்கள் நமக்கு உண்டாகின்றன. குண்டலினிசக்தி ஏழாவது ஆதாரமான உச் சந்தலேயை அடையும்போது ஜீவபோதம் முற்றும் ஒழிந்து பரபோதம் உண்டாகிறது. அப்போது பரத்தோடு நாம் ஒன்றுபட்டு விடு கிருேம். அம்பிகையின் பேரருளால் அந்த நிலே நமக்கு விரைவில் வந்து வாய்ப்பதாகுக.

ஸ்ரீராமகிருஷ்ணர் தம்மிடத்தில் குண்டலினி சக்தி எழுந்து மேலேறி வருவதை நன்கு அறிந் திருந்தார். குண்டலினிசக்தி ஒவ்வொரு ஆதாரத் திற்கும் வரும் பொழுது தமக்கு ஏற்பட்ட அனு பவத்தைத் தெளிவாக விளக்கியிருக்கின்ருர். முதல் மூன்று ஆதாரங்களில் குண்டலினி சக்தி இருக்கும் பொழுது கீழான எண்ணங்கள் உள் ளத்தில் தீவிரமாக எழுகின்றன என்று கூறி யுள்ளார். குண்டலினி சக்தி அனுகதத்துக்கு வரும்பொழுது தெய்வீக எண்ணங்கள் உள்ளத் தில் எழுந்து வருகின்றன என்று கூறியுள் ளார். அனுகதத்தைக் கடந்து விசுத்தி சக் கரத்தை எட்டும்பொழுது தெய்வீக எண்ணங் களைத் தவிர வேறு எண்ணங்கள் எழுவ தில்லே என்றும், விசுத்தி சக்கரத்தை எட்டிய குண்டலினி சக்தி அதற்குக் கீழுள்ள ஆதாரங் களுக்கு இறங்குவதில்லே என்றும் ராமகிருஷ் ணர் கூறியுள்ளார். தீவிரமாகச் சாதனேசெய்து வருபவர்களுக்குக் குண்டலினி சக்தி மூலா தாரத்தில் இருந்து எழுந்து மேல் உள்ள ஆதா ரங்களுக்கு விரைந்து செல்கிறது. குறுக்குவழி யில் குண்டலினி சக்தியை எழுப்பிவிடுகிறேன் என்று சொல்பவரை நம்பி ஏமாந்து போகக் கூடாது. மனம் தூய்மைப்பட்டு மகோன்னத நிலே அடைவதே சிறந்த முறையாகும்.

(முற்றும்)

அனுமன் - 14

(சுவாமி ஆத்மானந்தர்)

இராமனுடன் இலங்கை சேர்தல்

இராமன் விருப்பத்துக்கேற்ப வானரத் தச்சனாகிய நளன் மூன்று நாட்களுக்குள் கடலின் மீது அணை கட்டிமுடித்தான். மரங்களையும், கற்பாறைகளையும் கொண்டே அற்புதமாக அணை கட்டி முடித்து விட்டான். அணையின் மீது வழிகாட்டிச் செல்வான் போல் விபீஷணன் முன்னே செல்ல, அவனைத் தொடர்ந்து வானர சேனை பின்னே செல்ல, அதற்குப் பின்னே நன்னூல் பல கற்றுணர்ந்த வீர அனுமன் நிமிர்ந்து செல்ல, அவன் பின்னே கார்முகில் வண்ணனாகிய இராமனும், இலக்குவனும் பின் தொடர்ந்தனர்.

நெற்றியின் அரக்கர்பதி செல்ல, நிறை நல் நூல்
கற்று உணரும் மாருதி கடைக் குழை வர, தன்
வெற்றி புனை தம்பி ஒரு பின்பு செல, வீரப்
பொன் திரள் புயக் கரு நிறக் களிறு போனான்.

இங்ஙனம் கடல் கடந்து இலங்கை சேர்ந்த இராமன், இலங்கை மாநகரைக் காணத் தம்பி இலக்குவனுடனும், வானர சேனைகளுடனும் சுவேலமலையின் உச்சியை அடைகிறான். பொன்னும், மணியும், நவரத்தினங்களும் பதிக்கப் பெற்ற மாளிகைகள் பலப்பல காட்சியளிக்கும் இலங்கையின் பேரழகினைக் கண்ட இராமன், அதிசயித்து அதன் அழகினைத் தம்பி இலக்குவனுக்கு எடுத்துரைக்கிறான். அமராவதி நகரும் இதற்கு ஈடாகமாட்டாது என்று வியக்கின்றான். அப்பொழுது வானரசேனையைக்காண விரும்பிய இராவணனும் தன் பரிவாரங்களுடன் வடக்குக்கோபுர வாசலின் மீது ஏறிப் பார்க்கின்றான். அதனைக் கண்ட விபீஷணன், 'மங்கையர் குழாத்துடன் கோபுரத்திலேறி நிற்பவன் புன் தொழில் இராவணன்' என்று இராமனுக்குச் சுட்டிக்காட்டுகிறான். அது கேட்ட சுக்ரீவன் திடீரென்று அரக்கர் வேந்தன் மேல் தாவிப் பாய்ந்தான். சுக்ரீவனுக்கும் இராவணனுக்கும் இடையில் பெரும் மல்யுத்தம் மூண்டது. இருவரும் ஒருவரை யொருவர் தாக்கிக் கொண்டு கட்டிப்புரண்டனர். இறுதியில் சுக்ரீவன் இராவணன் கிரீடத்திலிருந்த இரத்தினங்களைப் பறித்துக்கொண்டு இராமன் இருக்குமிடத்தைச் சென்றடைந்தான். ஆயினும் இச்செயல் சுக்ரீவனுக்கு மனத்திருப்தியைத் தரவில்லை. 'என் செயல் அனுமன் செய்த அரிய செயலுக்கு ஈடாகாது. தன்னை எதிர்த்த ஆயிரக்கணக்கான அரக்கவீரர்களை அனுமன் தன்வாலினால்கட்டி வளைத்து அடித்து நொறுக்கினான். இலங்கையை அக்னிக்கு இரையாக்கித் தன் வால்வலிமையை உலகறியச் செய்தான். ஆனால் நானோ இலங்கையிலிருந்து ஓடிவருவதில் தானே என் கால் வலிமையைக் காட்டியுள்ளேன்' என்று மனம் நொந்து கொள்ளுகிறான்.

நூல் வலி காட்டும் சிந்தை
நும் பெருந்தூதன், வெம் போர்
வேல் வலி காட்டுவார்க்கும்,
வில் வலி காட்டு வார்க்கும்
வால் வலி காட்டிப் போந்த
வள நகர் புக்கு, மற்று என்
கால் வலி காட்டிப் போந்தேன்;
கை வலிக்கு அவதி உண்டோ?

அனுமனின் பராக்கிரமம் சுக்கிரீவனால் இங்குப் பாராட்டப்படுகிறது.

எழுபது வெள்ளம் வானர சேனைகளோடு இலங்கையை முற்றுகையிட்ட இராமன், போர் தொடங்குதற்கு முன் இராவணனிடம் அங்கதனைத் தூதனுப்புகிறான். இராவணன் மனம் திருந்த வாய்ப்பளித்துப் பார்க்கிறான் கருணை வள்ளல். தூது சென்ற அங்கதனின் வாலைக் கண்டதும், அழுகின்ற கண்ணராகி அஞ்சி, அங்குமிங்கும் ஓடினார்களாம் இலங்கை மாந்தர். அனுமன் தன் வீரச்செயல்களால் அரக்கர் நெஞ்சத்தில் எவ்வளவு பீதியை உண்டாக்கியிருந்தான் என்பது இதிலிருந்து புலனாகின்றது.

போர்க்களத்தில் அனுமன்

தூது சென்ற அங்கதன் திரும்பிவந்து 'மூர்க்கன் முடித்தலை அற்றபோதன்றி ஆசை அறான்' என்று கூறிவிடுகிறான். போரைத் தவிர்க்க இயலாது என்பதை அறிந்த இராமன் இலங்கையைத் தாக்க வானர சேனைக்குக் கட்டளையிடுகிறான். உடனே வானரசேனை அகழியைத் தூர்த்துக் கோட்டைவாயிலை நாற்புறமும்

தாக்கியது. இருதிறப்படைகளுக்கும் இடையில் பெருப்போர் மூண்டது. இருபக்கங்களிலும் பல்லாயிரவர் மாண்டனர். வானர சைனியத்தின் தாக்குதலைத் தாங்கவொண்ணாது இராக்ஷச சேனை பின்னடைந்தது. சேனாபதிகள் கொல்லப்பட்டனர். ஒற்றர் மூலம் செய்தியறிந்த இராவணன் தானே போருக்குப் புறப்படுகிறான். பல்லாயிர அரக்கவீரர்கள் புடைசூழப் போர்க்களம் புகுகிறான். எதிரில் வந்த சுக்ரீவனுடனும் இலக்குவனுடனும் பெருப்போர் செய்கிறான். இராவணனை எதிர்த்த இருவரும் சோர்வடைகின்றனர். அச்சமயம் அனுமன் அங்கு வந்துசேருகிறான். இராவணனுக்கு எதிரே பேருருக்கொண்டு நின்று வீரவாதம் பேசுகிறான். இராவணன் மார்பில் தன் வஜ்ஜிரக் கையினால் ஒரு குத்து விடுகிறான். குத்துண்ட இராவணன் நிலைகுலைந்தான். கால்கள் தள்ளாடித் தவித்தான். தலைகள் நேரே நிற்க மாட்டாமற் சாய்ந்தன. உடலும் உள்ளமும் சோர்ந்து மூர்ச்சித்துத் தரையில் சாய்ந்தான். சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்து எழுந்தான். எதிரே நின்ற அனுமனைப் பார்த்து அவன் வலிமையைப் போற்றுகிறான். "வீரனே! வலிமை என்பது ஒன்றுண்டாயின், அது உன்னிடந்தான் உள்ளது. உன் வலிமையைப் பார்க்குமிடத்து ஏனைய வீரர்களெல்லாம் அலியென்றே சொல்லத்தகுந்தவராவர். பிரம்மதேவனுக்கும் மனம் சலியாத நான், மெலிவென்பதனை இப்போது உன்னாலே அறிந்துகொண்டேன். பெருவலியுடையோனே! நீ என்னை வென்றவனேயானாய்."

வலி என்பதும் உளதே?
அது நின்பாலது; மறவோய்!
அலி என்பவர், புறம் நின்றவர்;
உலகு ஏழினும் அடைத்தாய்;
'சலி' என்று எதிர் மலரோன்
உரைதந்தால், இறை சலியேன்;
மெலிவு என்பதும் உணர்ந்தேன்;
எனைவென்றாய், இனி, விறலோய்!

பின்னர் இராவணன் தாக்க அனுமனும் சலித்துப் போகின்றான். அது கண்டவானர சேனைகள் இராவணன் மீது மலைகளையும், பாறைகளையும் எடுத்தெறிகின்றனர். அவைகளை யெல்லாம் பொடியாக்கிய இராவணன் அம்புமாரி பொழிந்து வானர சேனையைச் சின்னா பின்னமாக்குகிறான். வானரசேனை நிலைகுலைவதைக் கண்ட இலக்குவன் முன்வந்து இராவணனை எதிர்க்கின்றான். இருவருக்கும் பெரும்போர் மூண்டது. ஒருவர்மீது ஒருவர் சரமாரிபொழிகின்றனர். இறுதியில் இராவணன் எறிந்த வேலாயுதம் இலக்குவனை மூர்ச்சித்து விழும்படி செய்தது. அப்போது, இலக்குவனைத் தூக்கிக்கொண்டு போய்விடலாமென்று எண்ணி இராவணன் விரைந்து வந்து இலக்குவனைத் தூக்குகிறான். ஆனால் தூக்க முடியவில்லை. வெள்ளியங்கிரியை வேரோடு பறித்தெடுத்த அவன் இருபது கரங்களும் இலக்குவனை எடுக்க இயலவில்லை. அவன் திகைத்து நின்று பெருமூச்சுவிடுகின்றான். அந்நிலையில், அவ்விடத்திற்கு அனுமன் திடீரென்று வருகின்றான். மூர்ச்சித்துக்கிடந்த இலக்குவனை அனாயாசமாக எடுத்துச்சென்று விடுகின்றான். அனுமனை இங்கு, 'மகவுகொண்டு போய் மரம் புகும் மந்தியை நிகர்த்தான்' என்கிறார் கம்பர்.

இலக்குவன் மூர்ச்சித்து விழுந்த செய்தி இராமனுக்கு எட்டுகிறது. இராமன் கடுங்கோபங்கொண்டு இராவணனை எதிர்க்கின்றான். அரக்கர் வேந்தன்மீது அம்புமழை பொழிகின்றான். இருவரும் பெரும்போர் புரிகின்றனர். இராவணன் தேர்மீதிருந்து போர்செய்ய, இராமனோ தரையில் நின்று போர் செய்கிறான். அது கண்டு மனம் பொறாத அனுமன் இராமனைத் தன் தோள்மேல் ஏற்றிக்கொள்ளுகிறான். அனுமனுக்கு வந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. 'ஈன்ற கன்று தாங்கிய தாய் என மாருதி களித்தான்' என்கிறார் கம்பர். இராமனைத் தோளில் சுமந்து நின்ற அனுமன் இராவணன் தேரோடு தேராகச் சாரித்திரிகின்றான். அனுமன் சாரித்திரிந்த வேகத்தில், இராவணன் பத்து முகங்களுக்கு எதிரே பத்து இராமர்கள் தோன்றிப் போர் செய்வது போலிருந்ததாம். இராமன் விடுகின்ற அம்பினும்முன்னே செல்லுகின்றான், இராமன் மனத்தினும் முன்னே செல்லுகின்றான். அனுமன் சாரித்திரிந்த வேகத்தில் மண்ணிலும் விண்ணிலும் அனுமனாகவே காட்சியளிக்கின்றான்.

இம்பரான் எனில், விசும்பினன்
ஆகும், ஓர் இமைப்பில்;

தும்பை சூடிய இராவணன்
முகம் தோறும் தோன்றும்;
வெம்பு வஞ்சகர் விழிதோறும்
திரியும்; —மேல் நின்றுன்
அம்பின் முன் செலும், மனத்திற்கும்
முன்செலும், அனுமன்.

இராம இராவண யுத்தத்தில் அரக்க சேனை சின்னபின்னப்பட்டு அழிந்தொழிந்தது. இராவணனுக்குத் துணை நின்ற சேனைகள் அனைத்தும் புயல் காற்றில்பட்ட பூளைப்பூண்டுபோலாயின. இராவணன் வில், வாள், மணிமுடி, தேர் முதலியன இழந்து பாதசாரியாய்ப் பூமியைக் கால் விரல்களால் கீறிக்கொண்டு நாணத்துடன் தலை குனிந்து நிற்கிறான். அவன் நின்ற கோலத்தை :

'அறம் கடந்தவர் செயல் இது'என்று,
உலகு எலாம் ஆர்ப்ப,
நிறம் கரிந்திட, நிலம் விரல்
கிளைத்திட, நின்றுன் —
இறங்கு கண்ணினன், எல்
அழி முகத்தினன், தலையன்,
வெறுங் கை நாற்றினன், விழுதுடை
ஆல் அன்ன மெய்யன்

என்று அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார் கம்பர். வெறுங் கையோடு நிற்கின்ற இராவணனைப் பார்த்த இராமனுக்கு இரக்கம் மேலிடுகிறது. அவனைக் கொல்ல விரும்பாத கோசல நாடுடைய வள்ளல் 'இன்று போய் நாளை வா' என்று விடை கொடுத்தனுப்புகிறான். இராமன் கருணையின் உறைவிடம் என்பதற்கு இதை விட வேறு சான்று வேண்டுவதில்லை.

முதல் நாள் போரில் தோற்றுப்போய் அரண்மனை திரும்பிய இராவணன் தம்பி கும்பகர்ணனைப் போருக்கனுப்புகிறான். அவனே வானர சேனையைப் படாதபாடு படுத்துகிறான். கொன்றும், தின்றும், மென்று துப்பியும், கைகளால் பிசைந்தும், மேலே தூக்கியெறிந்தும், தரையில் மோதியும், கால்களால் துகைத்தும், தரையில் அடித்தும் ஆயிரமாயிரம் வானர வீரர்களை அழிக்கின்றான். அவனோடு போரிட்டுத் தோற்ற அங்கதனும் அப்பால் செல்லுகின்றான். தன்னை எதிர்த்த சுக்ரீவன் மீது சூலாயுதத்தை வேகமாக எறிந்தான். அச்சூலாயுதம் சென்ற வேகத்தைப் பார்த்து வானர வீரர்கள் நடுங்கினர்; சுக்ரீவன் இறந்தானென்று பார்த்தோர் பதைபதைத்தனர். ஆனல் அனுமன், பாய்ந்து சென்று அச்சூலாயுதத்தைப் பிடித்து முறித்தெறிந்தான். கும்பகர்ணன் அனுமனின் திறமையை வியந்து போற்றுகிறான். 'கருதவும் இயம்பவும் அரிது உன் கைவலி; இவ்வுலகில் அரியன முடிப்பதற்கு நீ ஒருவன்தான் உளாய். உனக்கு நிகர் எவருமில்லை' என்று போற்றுகிறான்.

'நிருதனும் அனையவன் நிலைமை நோக்கியே,
கருதவும் இயம்பவும் அரிது, உன் கை வலி,
அரியன முடிப்பதற்கு அனைத்து நாட்டினும்
ஒரு தனி உளை; இதற்கு உவமை யாது?'

போரின் இறுதியில் கும்பகர்ணன் இராமனோடு பொருது, இராமபாணங்களால் கைகளையும், கால்களையும் இழக்கின்றான். இராமன் வில் தொழிலுக்கு ஆயிரம் இராவணரும் ஈடாகார் என்று கருதுகிறான். அந்நிலையில் இராமனிடத்து வரம் ஒன்று வேண்டுகிறான். "இராமா! என் அண்ணன் இராவணன் மிகக் கொடியவன்; இரக்கமில்லாதவன். சத்தியவந்தனை விபீஷணனைக் கண்டால் தம்பியென்றும் பாராது கொன்றுவிடுவான். அதனல் அவனை எப்பொழுதும் தங்கள் அருகிலாவது, இலக்குவன் அருகிலாவது, அனுமன் அருகிலாவது வைத்துக்கொள்ள வேண்டும்" என்பதே அவ் வரமாகும்.

'தம்பி என நினைந்து, இரங்கித்
தவிரான் அத்தகவு இல்லான்;
நம்பி! இவன்தனைக் காணின்
கொல்லும்; இறை நல்காநல்;
உம்பியைத்தான், உன்னைத்தான்,
அனுமனைத்தான், ஒருபொழுதும்
எம்பி பிரியாநக அருளுதி;
யான் வேண்டினேன்.

அனுமனைக் குறித்துக் கும்பகர்ணன் எண்ணிய எண்ணம் இப்பாடலில் வெளிப்படுகிறது. இராமனுக்கும், இலக்குவனுக்கும் இணையாக வைத்து எண்ணுகிறான். சுக்ரீவனினும் மேம்பட்டவனக வைத்துக் கருதுகிறான்.

கும்பகர்ணன் இறந்தபின், இந்திரஜித்து போருக்கு வருகிறான். அதிகாயனைக்கொன்ற இலக்குவனைக் கொன்றே தீருவேன் என்று சபதம் செய்கிறான். பெரும்படையுடன் போர்க்

களம் புகுந்த இந்திரஜித்து வானர சேனையைக் கலக்குகிறுன். அது கண்ட இலக்குவன் முன் வந்து இந்திரஜித்துவை எதிர்க்கிறுன். இரு வருக்கும் பெரும் போர் மூண்டது. அனுமன் இலக்குவனைத் தன் தோளில் ஏற்றிக்கொண்டு சாரித்திரிந்து அரக்க சேனையை முறியடிக் கிறுன். இந்திரஜித்துவின் கவசத்தைப் பிளந்து தேரையும் அழிக்கிறுன் இலக்குவன். தேரை இழந்த இந்திரஜித்து வானத்தில் மறைந்து நாகாஸ்திரத்தைப் பிரயோகிக்கிறுன். அதனல் இலக்குவனும், வானர வீரர்களும் கட்டுண்டு தரையில் சாய்கின்றனர். அப்போது கருட பகவான் வரவினல் அந்நாகபாசம் நீங்கிற்று. மீண்டும் போருக்கு வந்த இந்திரஜித்து பிரம் மாஸ்திரத்தை விடுகிறுன். அப்போது இலக்கு வனும் ஏனைய வானர வீரர்களும் மூர்ச்சித்துத் தரையில் விழுந்துவிடுகின்றனர். இலக்குவன் இறந்தானென்று இராமனும் அழுது புலம்பி மூர்ச்சித்துப் போகிறுன். மாண்டாரை உய் விக்கும் மூலிகை உள்ள சஞ்சீவி மலையைக் கொண்டுவந்தால் இலக்குவனும் ஏனைய வானர வீரர்களும் உயிர்பெற்றெழுவார்கள் என்கிறுன் ஜாம்பவான். ஆனல் இந்த அரிய மருந்தைக் கொண்டுவரும் ஆற்றல் அனுமனைத்தவிர வேறு யாருக்குமில்லை. எனவே ஜாம்பவான் அனுமனை அணுகி மருந்து இருக்கும்இடத்தையும்,போகும் வழியையும் கூறுகிறுன். அனுமன் பேருருக் கொண்டு வடக்கு நோக்கி வானில் பறக்கின் றுன். இமயம், கயிலை, மேருமலை முதலியவை களைக் கடந்து மூலிகைகள் இருக்கும் மருந்து மலையை அடைகிறுன். அதனைப் பறித்தெடுத்து அப்படியே தோள்களில் வைத்துக்கொண்டு போர்க்களம் வந்துசேருகிறுன். மருந்து மலை யின் காற்றுப்பட்டதும், இலக்குவனும், ஏனைய வானரவீரர்களும் தூங்கியெழுபவர்கள் போல் உயிர்பெற்றெழுந்தனர். இலக்குவன் உயிர்பெற் றெழுந்ததைக் கண்ட இராமன் அனுமனை மார்புறத் தழுவிக்கொள்ளுகிறுன். அனுமனை நோக்கி: 'தசரதனின் மைந்தராய்ப் பிறந்த நாங்கள் பிரம்மாஸ்திரத்தினல் மாண்டு போனேம். இன்று உன்னிடத்தினின்று மீண் டும் தோன்றி வரலானேம்.

மன்னில் தோன்றினேம் முன்னம்; மாண்டுளோம்;
நின்னின் தோன்றினேம், நெறியின் தோன்றினய்!

என்று அனுமனிடமே அவன் வீரதீரத்தைப் பாராட்டிப் பேசுகிறுன் இராமன். அனுமனின் சேவைக்கு ஈடு இணை ஏது?

இராவணன் பாட்டனுகிய மாலியவானும் மருந்துமலை கொண்டுவந்த அனுமனின் வீரத் தைப் புகழ்ந்து, அதை இராவணனிடமே உயர்த்திப் பேசுகிறுன். "அனுமன் உலக சிருஷ்டியின் நடைமுறையையே மாற்றியமைக்க வல்லவன். குறைவில்லாத நிறைகுணத்தவன். வேதங்கள் கூறுகின்ற தலைமைத் தேவர்கள் மூவர் என்று கூறுவது, ஆராயும் வல்லமை இல்லாதவர் கருத்தாகும். ஒலிக்கின்ற வீரக் கழலை அணிந்த அனுமனேடும் சேர்த்து முதல் வர் நால்வரேயாவர்" என்று சொல்கின்றுன்.

முறைகெடவென்று, வேண்டின்
நினைந்ததே முடிப்பன்; முன்னின்
குறை இலை குணங்கட்கு; என்னே,
கோள் இலா வேதங் கூறும்
இறைவர்கள் மூவர் என்பது ?
எண்இலார் எண்ணமேதான்;
அறைகழல் அனுமனேடும்
நால்வரே முதல்வர் அம்மா.

இலக்குவனை வெல்ல இந்திரஜித்து மேற் கொண்ட எல்லா முயற்சிகளும் பயன்படாமற் போகின்றன. நாகாஸ்திரம், பிரம்மாஸ்திரம், மாயா சீதையை வெட்டுதல், நிசும்பலை யாகம் அனைத்தும் பயன்படாமற் போய்விடுகின்றன. தான் மேற்கொண்ட எல்லா முயற்சிகளும் பயனற்றுப் போதலைக் கண்ட இந்திரஜித்து கடும்போர் புரிந்து முடிவில் இலக்குவனல் தலையறுபடுகின்றுன். வெற்றிவாகை சூடிய இளவலை இராமனிடத்து அனுமன்தான் தன் வீரத் தோள்களில் சுமந்து செல்லுகிறுன். அறுபட்ட இந்திரஜித்துவின் தலையைக் கண்ட இராமன் களிப்புக் கொள்ளுகிறுன். வென்று வந்து தாள் பணிந்த தம்பி இலக்குவனை மார் புறத் தழுவிக்கொள்ளுகிறுன். வெற்றிக்குத் துணைநின்ற வீர மாருதியையும் தன் கருணைக் கண்களால் அன்பினேடு நோக்கி ஆசீர்வதிக் கிறுன்.

இந்திரஜித்துவின் மரணத்துக்குப் பின் இராவணன் போருக்கு வருகிறுன். முதல் நாள் போரில் தோற்றுப்போன இராவணன் தன் படைபலம் அனைத்தையும் திரட்டிக்கொண்டு

இறுதிப் போருக்கு வருகிறன். இராம இராவண யுத்தம் மும்முரமாய் நடக்கிறது. அப்போது தமையனை தன்னைத் துறந்து எதிரியான இராமன் பக்கம் சேர்ந்த தம்பி விபீஷணனைக் கண்டு இராவணன் மனம் கொதிக்கிறன். அவனை அழித்தொழிக்கக் கருதி மயன் தந்த வேலாயுதத்தை அவன் மீது வீசுகிறன். சரணடைந்தவனைக் காப்பது தருமமென்று கருதிய இலக்குவன் அந்தவேலைத் தன்மார்பில் ஏந்தி மூர்ச்சித்து விழுகிறன். அப்போதும் மருந்துமலையைக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. அனுமன் உடனே புறப் படுகிறன். காற்றினும் கடிதில் சென்று மருந்துமலையைக் கொண்டுவந்து இலக்குவனை உயிர்ப்பிக்கின்றன். இருமுறையும் தம்பிக்கு உயிர் நல்கிய அனுமனை இராமன் கட்டியணைத் துக் கொள்கிறன். அனுமனை நோக்கி: "பெருமையுடையவனே! உன்னைப் பெற்றுள்ள எனக்குப் பெருதவை எவையுமில்லை. நீ சிரஞ் சீவியாக வாழ்வாயாக" என்று வாழ்த்துகிறன்.

'பெற்றனென் உன்னை;
என்னை பெறுதன? பெரியோய்! என்றும்
அற்ற இடையூறு செல்லா
ஆயுளை ஆக!' என்றன்.

இராம இராவண யுத்தம் மீண்டும் தொடங்கு கிறது. இருவருக்கும் பெரும்போர் நடக்கின் றது. இறுதியில் அயன் படையால் இராவ ணன் தலைகளை அறுத்தெறிகிறன் இராமன். அது கண்டு வானவரும், அந்தணரும், முனிவர் களும் ஆர்ப்பரிக்கின்றனர். ஆசிகூறி மலர்மாரி பெய்கின்றனர். வானர சேனை மகிழ்ச்சி வெள் ளத்தில் மூழ்கித் திளைக்கிறது. சிறை கிடக் கும் சீதைக்கு இந்த வெற்றிச்செய்தியைத் தெரி விக்க வேண்டுமல்லவா? அவள்தானே இந்த நல்ல செய்தியை முதலில் அறியவேண்டியவள். வெற்றிச் செய்தியைச் சீதைக்குத் தெரிவிக்கும் தூதனுக அனுமனே தேர்ந்தெடுக்கப்படுகிறன். சீதைக்குச் செய்தி சொல்ல மாருதியை விடப் பொருத்தமானவர் வேறு யார் இருக்கமுடியும்! அவன் ஆடிப்பாடிக் குதித்துக் கூத்தாடி அகம் மிக மகிழ்ந்து சீதையிடம் போய் மங்கல வாழ்த்துப் பாடுகிறன்.

'ஏழை, சோபனம்! ஏந்திழை, சோபனம்!
வாழி, சோபனம்! மங்கல சோபனம்!
ஆழி ஆன அரக்கனை ஆரியச்
சூழி யானை துகைத்தது, சோபனம்!'

என்று வெற்றிச் செய்தியை மகிழ்ச்சியோடு வெளிப்படுத்துகிறன். அனுமன் வாயிலாக வெற்றிச் செய்தியைக் கேட்ட சீதை உவகை மிகுதியால் பேச்சற்றுப்போகிறள். பின்னர் அனுமனை வாயார வாழ்த்துகிறள். 'நீ செய்த பேருதவிக்கு உலகம் மூன்றையும் தந்தாலும் இணையாக மாட்டா. அதனல் உன்னை என் தலையினல் தொழுதலே தகும்."

"உலகம் மூன்றும் உதவற்கு ஒரு தனி
விலை இலாமையும் உன்னினென்; மேல் அவை
நிலை இலாமை நினைந்தனென்; நின்னை என்
தலையினுல் தொழவும் தகும்—தன்மை யோய்."

இங்ஙனம் சீதை பகர்கின்றள்.

அனுமனின் வீரம் யாவராலும் போற்றப்படு கின்றது. அனுமன் ஆதியோடந்தமாகச் சுயநல மற்றவனுகத் திகழ்கின்றன். அனுமன் கிஷ் கிந்தையில் முதன் முதல் இராமனைச் சந்திக் கின்றன். இராமனைச் சந்தித்ததும் தன்னை இராமனிடம் ஒப்படைத்து விடுகின்றன். அன்றுமுதல் இராமனுக்குச் சேவை செய்வ தையே ஒப்பற்ற பேருகக் கருதி இராமன் பணிவிடையில் தன்னைக் கொடுத்துவிடுகின் றன். அதன் விளைவாக அவனிடம் வீரமும், பண்பும், அறிவும் மேலோங்குவனவாயின. யார் ஒருவர் தன்னிடத்துள்ளதைக் கரவாது உலக நலனுக்குப் பயன்படுத்துகிருரோ அது அவரிடத்துப் பன்மடங்கு வளர்கிறது என்பது பேருண்மை. அனுமன் தன்னிடத்திலுள்ள வீரத்தை இராம பணிக்குக் கரவாது வழங்கி னன். அதனல் அனுமனிடம் வீரம் பன்மடங்கு பெருகுவதாயிற்று. அனுமன் வாழ்க்கை முழு தும் பிரம்மச்சரியம் கடைப்பிடித்தான். பிரம்மச் சரியம் கடைப்பிடித்ததனல் அவனிடம் உடல் திட்பமும், உள்ளத் திட்பமும்வளர்வனவாயின. இராவணன் தான் தவத்தால் பெற்ற வலிமை யைக் காமத்துக்குவசப்பட்டுஇழந்துகொண்டே வந்தான். அனுமன் தன் சுயநலமற்ற சேவையால் பெற்ற வலிமையைப் பிரம்மச்சரியம் கடைப் பிடித்து நன்கு வளர்த்தான். இராவணன் வீழ்ச் சிக்குக் காமம் காரணமாயிற்று. அனுமனின் பெருமைக்குப் பிரம்மச்சரியமும், சுயநலமற்ற சேவையும் காரணங்களாகும்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (216) காகாசுரனாக வந்தவன் யார் என்பதை அறிந்துகொண்ட இராம னும் சீதையும் மாரீசனாக வந்தது யார் என்று ஏன் அறியவில்லை?

இராமன் சர்வக்ஞன். முக்கால நிலையையும் அந்தந்த மூர்த்திகளின் நிலையையும் உள்ளபடி அறிந்துகொள்ள வல்லவன். அத்தகைய ஞானத்தைப் பயன்படுத்திக் காகாசுரனை அறிந்துகொண்டு அதற்கேற்ற அம்பு எய்தான். அந்த அஸ்திரமானது அவனைத் தேடிப் பிடித்து ராமன் முன்னிலையில் கொண்டுவந்து நிறுத்தியது. இந்தச் செயல் சீதை, ராமனுடைய சொந்த வாழ்வோடு சம்பந்தப்பட்டது. உலகிலுள்ள மற்ற உயிர்வகைகள் இந்தச்செயலோடு எவ்விதத்திலும் இணைக்கப்படவில்லை. அதே ராமனுக்கு மாரீசமான் சம்பந்தமாக மோகம் வந்து மூடிக்கொண்டது. மோகம் அல்லது மயக்கத்துக்கு ஓர் அவதார மூர்த்தியும் இலக்காகவேண்டிய நெருக்கடி வந்தமைகிறது. மாரீசமானை இன்னான் என்று அறிந்துகொண்டு இருந்த இடத்திலேயே ராமன் கொன்றிருந்தால் அல்லது அவன் பிழைத்துப் போகட்டும் என்று விட்டிருந்தால் நிகழவேண்டிய ராமாயண நிகழ்ச்சிகள் நிகழ்ந்திருக்கமாட்டா. ராவண சம்ஹாரத்துக்கென்றே ராமன் மண்ணுலகில் மானுடனாக அவதரித்து வந்தான். அதன் பொருட்டு அவனும் சீதாதேவியும் ஓர் இக்கட்டில் அகப்பட்டுக்கொள்ளுவது அவசியமாகிறது. நெருக்கடி நேரும்பொழுதே சாதிக்க வேண்டிய காரியத்தில் மனிதன் தீவிரமாக இறங்குகிறான். அத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில் ராமன் அகப்பட்டுக்கொள்ளுதல் பொருட்டு மோகன சக்தி தெய்விகமாக அவனை வந்து மூடிக்கொண்டது. அதன் விளைவாகக் கிஷ்கிந்தையிலும், இலங்கையிலும் ஆட்சிமுறைகள் மாறியமைந்தன. தீமைகள் ஒழித்துத் தள்ளப்பட்டன. நலன்கள் நன்கு நிலைநாட்டப்பட்டன. இவையாவும் நடந்தேறவேண்டிய அவசியத்தை முன்னிட்டு ராமன் மாரீச மான் விஷயத்தில் ஏமாற்றமடைந்தது பொருத்தமானதே.

கேள்வி. (217) ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய உபகதையில் விலைமாதைத் திருத்துவதற்காக அல்லவா சாது முயன்றார். அவருடைய முயற்சி தவறானதா? கேட்டைத் திருத்தலாகாதா?

பரமஹம்சர் புகன்ற உபமானக் கதையாவது: விலைமாது ஒருத்தி ஓர் ஊரில் ஒரு வீட்டில் வசித்து வந்தாள் அதற்கெதிரில் ஒரு கோயிலில் சாது ஒருவர் வசித்து வந்தார். அந்த விலைமாதின் வீட்டிற்கு விபசாரத்தின் பொருட்டுப் போன ஆடவர்களை ஒரு கற்குவியலின் வாயிலாகச் சாது கணக்கு வைத்திருந்தார். கல் குவியல் பெரியது ஆனபொழுது அவளுடைய பாப மூட்டை எவ்வளவு பெரியதாயிருக்கிறது என்று கற்குவியலைக் காட்டி அந்த விலைமாதை அவர் எச்சரித்தார். அதன் பிறகும் அவளுடைய இழிதொழில் நிற்கவில்லை. ஆனால் இறைவனிடம் மனதைச் செலுத்தித் தனக்கு அடுத்த ஜன்மம் நல்லதாக வாய்க்கவேண்டும் என்னும் பிரார்த்தனையிலேயே அவள் ஈடுபட்டிருந்தாள். சாதுவோ அவளுடைய இழிதொழிலைக் கணக்குப் போடுவதிலேயே ஈடுபட்டிருந்தார். இருவரும் ஒரே நாளில் மடிந்து போனார்கள். சாதுவின் சரீரம் சமாதியில் வைக்கப்பட்டது. வேசியின் சரீரம் நரிகளுக்கும், கழுகுகளுக்கும் இரையாயிற்று. பிறகு வேசியின் ஆத்மா சுவர்க்கத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. சாதுவின் ஆத்மா நரகத்தில் தள்ளப்பட்டது. இதுதான் நியதியோ என்று எமதர்ம ராஜனிடம் சாது கேட்டார். மண்ணுலகில் தீயசெயலில் ஈடுபட்ட வேசியின் உடல் இடுகாட்டில் அலட்சியப்படுத்தப்பட்டது. சாதுவின் தூய உடல் அதற்கேற்ற மரியாதை பெற்றது. இனி, மனநிலையில் விலைமாது பரமனையே நாடியிருந்தாள். அதற்கேற்ற பதவி மறுமையில் அவளுக்குக் கிட்டியது. விபசாரத்தைப் பற்றியே எண்ணியிருந்த சாதுவானவர் அதற்கேற்ற வினைப்பயனை மறுமையில் பெறுவாராயினர். இது உபமானக் கதை.

சாது சீர்திருத்தம் என்னும் நல்ல செயலைத் தானே செய்தார். அதற்கு இத்தகைய தண்டனை வருவது பொருந்துமா என்பது கேள்வி. சீர்திருத்தம் பண்ண முயன்றவர் தாமே சீர்

கேடு அடைந்தார் என்பது வெளிப்படை. பாபச் செயலில் ஈடுபட்டிருந்த பாபியின் மனது நலனேயே நாடியிருந்ததும் வெளிப்படை. இதில் நமக்கு ஒரு பாடம் இருக்கிறது. சீர்திருத்தம் பண்ண முயலுகிறவர்கள் தாங்கள் சீர்கேடு அடையாது பெருநிலையில் இருத்தல் வேண்டும். பெருநெறியினின்று பிசகாது இருப்பவர்களே உலகுக்கு உண்மையில் நலன்புரிகின்றனர் என்னும் கோட்பாடு இந்நிகழ்ச்சியில் அடங்கியிருக்கிறது. தான் கெட்டுப் போகும்படி நடந்துகொள்கின்றவன் உலகுக்கு ஒருபொழுதும் நன்மை செய்யமாட்டான்.

கேள்வி: (218) இராமனுகவும், கிருஷ்ணனுகவும் அவதரித்து வந்த மூர்த்திகள் காத்தல் கடவுளாகிய திருமாலின் அவதாரங்கள். அன்னவர் அழித்தல் தொழிலை ஏன் மேற்கொண்டார்கள் ?

படைத்தல், காத்தல், துடைத்தல் ஆகிய மூன்று கிருத்தியங்களுக்கு மூன்று தனித்தனி தெய்வங்கள் இருக்கிறுர்கள் என்று நாம் எண்ணி வருகிறோம். அப்படி எண்ணுவது பிழை. கடவுள் ஒருவரே. அவர் மூன்று கிருத்தியங்களையும் செய்கிறுர். மூன்று கிருத்தியங்களுக்கு அப்பாலும் இருக்கிறுர். அதை முன்விட்டே அவருக்குக் கடவுள் என்னும் பெயர் வந்துள்ளது. பிரபஞ்சத்தைக் கடந்துமிருக்கின்றுர். அதனுள் ஊடுருவிப் பாய்ந்துமிருக்கின்றுர். இயற்கையாக இலங்குபவர் அதே கடவுள். அவர் இயற்கைமயமாக இருந்துகொண்டு மூன்று கிருத்தியங்களையும் ஏககாலத்தில் செய்து வருகிறுர். பூமியில் விதைபோட்டு முளைத்து வருவது சிருஷ்டித் தொழில். அந்தப் பயிருக்கு வேலிகட்டுவது காத்தல் தொழில். பயிரோடு முளைத்து வருகிற பயனற்ற செடிகளைக் களைவது அழித்தல். ஆக, பயிரிடும் ஒரே செயலில் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஆகிய மூன்று தொழில்களும் அடங்கியிருக்கின்றன. மற்றொரு சான்று. ஆசிரியர் ஒருவர் பாடம் புகட்டுகிறுர். அது அறிவின் சிருஷ்டி. படித்த பாடம் மறந்துபோகாதிருக்கும்படி பரீட்சை பண்ணுகிறுர். அது காத்தல் தொழில். ஆண்டுப் பரீட்சையில் தேருதவர்களைக் கீழ்வகுப்பிலேயே வைத்து விடுகிறுர். அது அழித்தல் தொழில்போன்று தென்படுகிறது. அது முற்றிலும் அவசியம். ராமனும் கிருஷ்ணனும் நல்லாரைக்காக்க வந்தார்கள். பொல்லாரை அழித்தால்தான் நல்லாரைக் காக்க முடியும். நலத்தை நாட்டுதல் பொருட்டுக் கேட்டை அழித்தல் முற்றிலும் அவசியம் ஆகிறது.

கேள்வி: (219) ஒரு சிலர்க்குக் கடவுள் நம்பிக்கை இல்லை. அத்தகையவர்களுக்கு மனச்சோர்வு உண்டாகிறது. அந்தச் சோர்வை அகற்றுவது எப்படி ?

கடவுள் நம்பிக்கை படைத்திருக்கிறவர்களுக்கு மனச்சோர்வு வந்தால் அந்தச்சோர்வை அகற்றுவதற்குப் பரமனிடத்துப் பிரார்த்தனை பண்ணவேண்டும் என்று சொல்லுகிறோம். பிரார்த்தனை பண்ணிப் பலபேர் தங்களுடைய குறைகளையும், கவலைகளையும் அகற்றி வருகிறுர்கள். கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் விசாரித்துப் பார்த்துத் தங்களுடைய குறைகளையும், கவலைகளையும் அகற்றிக்கொள்ளலாம். மனிதனெருவனுக்குப் பணம் இல்லை என்னும் மனக்குறைவு உண்டாகிறது. பாடுபட்டால்தான் பணம் கிடைக்கும் என்னும் கோட்பாடு எல்லார்க்கும் பொதுவானது. நேர்மையாக உழைத்துப் பணம் தேடவேண்டும். அது முதல் பாடம். கிடைத்த வருவாயைக் கொண்டு திருப்தியடையவேண்டும், வருவாய்க் கேற்றவாறே செலவு பண்ணவேண்டும். இது இரண்டாவது பாடம். ஆகக் குறைநிலையை உழைப்பாலும் நல்ல மனப்பான்மையினுலும் நீக்கலாம்.

மனக்கவலைக்குக் காரணம் அறியாமை. உற்றுர், உறவினர், தன்னைப் புறக்கணித்துவிட்டார்கள் என்னும் கவலை ஒருவனுக்கு வரக்கூடும். ஏன் புறக்கணித்தார்கள் என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். தன்னிடத்துள்ள பொருந்தாத போக்கைத் தானே திருத்தியமைக்கவேண்டும். புறக்கணித்தவர்களிடத்திலும் அவன் பெருந்தன்மையோடு நடந்துகொள்ளவேண்டும். இப்படிச் செய்வதால் தன்னை அலட்சியப்படுத்தியவர்கள் தாங்களே நல்வழிக்கு வருவார்கள்.

ஆக, கடவுள் நம்பிக்கையில்லாதவர்களும் நல்லறிவைக்கொண்டும், நல்லொழுக்கத்தைக் கொண்டும் தங்களுடைய மனச்சோர்வை அகற்றமுடியும்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-135

779. विरजाः விரஜா: — பாபமில்லாதவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

எது மனிதனுடைய நிஜநிலைக்கு இடைஞ்சலாயிருக்கிறதோ அது பாபம். பாபத்தின் விளைவாக ஜீவாத்மன் தன்னைப் பரமாத்மனுக்கு அன்னியமானவன் எனக் கருதிக் கொள்கிறான். சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். கடலை நோக்கி மழைத்துளி ஒன்று வீழ்ந்து கொண்டிருக்கிறது. துளி என்னும் உபாதி தான் வேறு கடல் நீர் வேறு எனக்கருதும்படி தூண்டுகிறது. நீரினுடைய நீர்மையில் துளி ஜலம் வேறு கடல் நீர் வேறு அல்ல. நீரினுடைய நிஜநிலைக்கு இடைஞ்சலாயிருப்பது துளி என்னும் பான்மை. அந்தப் பான்மையே அதற்குப் பாபமாகிறது. தனக்குச் சொந்தமல்லாத ஒரு பான்மையைச் சொந்தமாகக் கருதிக் கொள்வது பாபம். ஆத்மாவைக் கர்மி என்று கூறுவது பாபம். ஆத்மாவைப் பிறப்பு இறப்பு உடையவன் என்று கூறுவது பாபம். ஜீவாத்மனைத் தாற்காலிகமாகப் பாதிக்கிற பாபம்ஏதும் அகிலாண்ட நாயகியாகிய அன்னையை அணுக மாட்டாது. ஆதலால் அவள் விரஜா என இயம்பப் பெறுகிறாள். ரஜஸ் என்னும் சொல்லுக்கு இருள் என்பது ஒரு பொருள். சூரியனிடத்தில் எங்ஙனம் இருள் இல்லையோ அங்ஙனம் அன்னை பராசக்தியினிடம் இருளுக்கு இடம் இல்லை. ஆதலால் அவள் விரஜா என்னும் நாமம் படைத்துள்ளாள். ரஜஸ் என்னும் சொல்லுக்கு ஆசை என்பது ஒரு பொருள். குறைநிலையிலிருக்கிற மனிதனுக்கு ஆசையுண்டு. அனைத்தையும் அடையப் பெற்றிருக்கிறவனுக்கு ஆசை ஏதும் இல்லை. அன்னை பராசக்தி ஆசைக்கு அடிமைப்பட்டுத் தேட வேண்டியது ஒன்றுமில்லை. ஆதலால் அவள் விரஜா எனப்பாராட்டப்படுகிறாள்.

ஒரிஸ்ஸா மாகாணத்தில் விரஜா என்னும் க்ஷேத்திரம் ஒன்று இருக்கிறது. அதற்கு அதிஷ்டான தெய்வமாயிருப்பவள் விரஜா என்னும் நாமம் படைத்திருக்கிறாள்.

780. विश्वतोमुखी விச்வதோமுகீ — எல்லாப் பக்கங்களிலும் முகத்தை உடையவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பக்தனொருவன் அம்பிகையின் சாந்நித்தியத்தில் இருப்பதற்கு எந்தத் திக்கை நோக்கி அமர்ந்து அவன் தியானம் பண்ணவேண்டும் என்னும் கேள்விக்கு இடமில்லை. திக்கனைத்தும் அவள் சொரூபம். நீக்கமற எங்கும் நிறைந்துள்ள அம்பிகையின் சாந்நித்தியத்தை ஆத்ம சாதகன் எங்கும் நிறைபொருளாகக் காண்கிறான்.

781. प्रत्यग्रूपा பிரத்யக்ரூபா — உள்ளத்தினுள்ளே காட்சி கொடுக்கும் வடிவத்தை உடையவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

எதிரில் நிற்கும் வடிவம் ஒன்றுக்குத் திரை போட்டுமூடி அதைக் கட்புலனாகாதபடி மறைக்கலாம். அப்படி மறைக்கின்ற பொருள்களை ஒதுக்கித்தள்ளுவதற்குப் பிரத்யக் என்னும்பதம் கையாளப்படுகிறது. காண்போனுடைய அகக் காட்சியினின்று அம்பிகையை மறைத்து வைப்பதற்குப் பிரத்யக் ஏதுமில்லை. ஆதலால் ஆத்ம சாதகனுடைய அந்தர்முகக் காட்சியில் அன்னை பராசக்தி யாண்டும் இருந்து வருகிறாள். அந்தர்முகக் காட்சிக்கு எதிரிடையாயிருப்பது பராங்முகக் காட்சி. ஏகதேசம் பண்பாடடைந்திருக்கிறவர்களுக்குப் பிரத்யக்ரூபம் சதா விளங்கிக்கொண்டிருக்கிறது. பராங்முகரூபம் பரிபாகத்தை முன்னிட்டு விளங்குவதாகவோ, விளங்காததாகவோ இருக்கிறது. நிறைஞானம் அடையப்பெற்றவனுக்கு அந்தர்முக ரூபா, பராங்முக ரூபா ஆகிய இரண்டையும் தாண்டியநிலை வந்தமைகிறது.

சாதனதசையிலிருக்கின்றவன் புறக்காட்சியில் பஞ்சேந்திரியங்கள்மூலமாகக் கருத்தைச் செலுத்தாது உள்நோக்கத்திலேயே கருத்தைச் செலுத்தவேண்டும் என்னும் கோட்பாடு இந்த நாமத்தில் அடங்கியிருக்கிறது.

782. पराकाशा பராகாசா — ஒப்பு உயர்வற்ற சித் ஆகாச சொரூபமாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பிரபஞ்சமயமாயிருக்கிற ஆகாசம் ஜடாகாசம் என்னும் பெயர் பெறுகிறது. ஜடாகாசம் பஞ்சபூதங்களுள் முதலிடம் பெறுகிறது. அது அகண்டாகாரத்தில் விரிந்தோடுகிறது. அண்டங்களும், பகிரண்டங்களும் இந்த ஜட ஆகா

சத்தில் அடங்கியிருக்கின்றன. இதே ஜடா காசத்தைச் சித் ஆகாசமாக அல்லது சித் அம்பல மாக அல்லது பரப்பிரம்ம சொரூபமாக நிறை ஞானி காண்கிறான். ஆகாசம் என்னும் சொல் லும் வ்யோமன் என்னும் சொல்லும் ஒரே பொருளைக் குறிக்கின்றன. வியவகார தசை யில் அவைகள் ஜடாகாசத்தைக் குறிக்கின் றன. பாரமார்த்திக நிலையில் அவைகள் சித் ஆகாசத்தைக் குறிக்கின்றன. சித் ஆகாசம் சுயப்பிரகாசம் உடையது. இருக்கின்ற அனைத் தும் அந்தப் பூரணத்தில் இடம் பெறுகின்றன.

783. प्राणदा ப்ராணதா — பிராணனைக் கொடுப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பிராணன் என்னும் சொல் உயிர்த் தத்து வத்தை விளக்குகிறது. மனிதன் மாண்டு போனால் பிராணன் போய்விட்டதென்று சொல் கிறோம். ஜீவாத்மனிடத்துப் பிராணன் நிலை பெற்றிருக்கும் வரையில் அவன் உயிர் வாழ்ந் திருக்கிறான். செயலில் இது உடலெங்கும் வியாபித்திருந்து பஞ்சப் பிராணன்களாக வடி வெடுக்கிறது. அவைகள் முறையே பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன் என்னும் பெயர் பெறுகின்றன. மேலும் ஞான இந்திரியங்கள் ஐந்து, கர்ம இந்திரியங்கள் ஐந்து, மனது ஆகிய பதினொரு இந்திரியங் களுக்கும் செயல் புரிதற்கு விசைதர வல்லதாகப் பிராணன் இருக்கிறது. எரிகிற தீபத்தின் ஒளிப்பிழம்பை வளர்ப்பதற்கு எண்ணெய் மூல காரணமாக இருக்கிறது. ஜடவுலகில் மூச்சு விட்டு உயிர் வாழ்ந்திருப்பவைகள் பிராணி கள் எனப் பகரப்படுகின்றன. மூச்சு விடுவ தற்குக் காற்று அவசியம். காற்றில் பிராண வாயு கலந்திருக்கிறது. பிராணிகள் அனைத் துக்கும் பிராணவாயுவின் வாயிலாக அன்னை உயிரை வழங்கி வருகிறாள். அதே விதத்தில் மனிதன் உயிர் வாழ்ந்திருப்பதற்கு அன்னை பரா சக்தி ஆதரவு அளிப்பதால் அவள் ப்ராணதா என்னும் நாமம் படைத்துள்ளாள்.

784. प्राणरूपिणी ப்ராணரூபிணீ — பிராணன் வடிவத்திலிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

பிராணன் என்னும் பதம் பரப் பிரம்மத்தைக் குறிக்கிறது. பிராணன் என்று சொல்லுவதும், பூரணம் என்று சொல்லுவதும் ஒரே பொரு ளைக் குறித்ததாம்.

பிராணன் என்னும் பதம் காமேஸ்வரி முத லான நித்யமாயுள்ள தேவதைகளைக் குறிக் கிறது.

785. मार्तण्डभैरवाराध्या மார்த்தண்ட பைரவ ஆராத்யா— மார்த்தண்ட பைரவ ரால் ஆராதிக்கப்படுகிறவள் என்பது இதன் பொருள்.

சிவனாரைச் சூழ்ந்திருக்கும் கணங்களுக்குப் பைரவர்கள் என்னும் பெயர் வந்துள்ளது. அம்பிகையைச் சூழ்ந்துள்ள பாங்கிமார்களுக் குப் பைரவிகள் என்னும் பெயர் வந்துள்ளது.

அம்பிகையின் இருப்பிடம் ஸ்ரீ புரம் என்னும் பெயர் பெற்றிருக்கிறது. அந்த ஸ்ரீ புரத்தில் 22, 23வது பிராகாரங்களுக்கு நடுவில் உள்ள பூமியில் மார்த்தண்டன் என்னும் பைரவன் வசித்து வருகிறான். இவன் ஒரு தீவிரமான தேவியின் உபாசகன். இந்தப் பைரவனுடைய செயல் அலாதிப்போக்குடையது என்னும் ஐதிகம் வந்துள்ளது. அம்பிகையின் உபாச கர்களிடம் விரோதம் பண்ணிக்கொள்கிறவர் களை மார்த்தண்ட பைரவன் தண்டிக்கிறான். பெரும்பாலும் அவன் வழங்குகிற தண்டனை கண்களை இழக்கும்படி செய்தலாம். மார்த் தண்டன் என்னும் சொல் சூரியனைக் குறிக் கிறது. உலகிலுள்ள கார் இருளை, உதயமாகி வருகிற சூரியன் அகற்றுவதற்கு நிகராக ஆத்ம சாதகர்களுடைய உள்ளத்தை மூடியுள்ள அக் ஞான இருளை மார்த்தண்ட பைரவன் அகற்றி வைக்கிறான்.

786. मन्त्रिणीन्यस्तराज्यधूः மந்த்ரிணீன் யஸ்த ராஜ்யதூ: மந்த்ரிணீயிடத்தில் வைக்கப்பட்டுள்ள ராஜ்யபாரத்தோடு இருப் பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

மந்த்ரிணி என்னும் தேவியிடம் அம்பிகை தன்னுடைய ராஜ்ய பரிபாலனப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறாள். இந்த மந்த்ரிணீக்கு மற் றும் பல நாமங்கள் அமைந்துள்ளன. சியா மளாம்பா, சச்சிவேஸானி, ராஜ்யச்யாமளா, சங்கீதச்யாமளா என்பவைகள் அவைகளில் முக்கியமானவைகள். அகிலாண்டங்களை ஆளு தலில் லலிதாம்பிகைக்கு அடுத்தஸ்தானத்திலி ருப்பவள் இவள். உள்ளன்போடும் பக்திபூர்வ

மாகவும் அம்பிகை உபாசனை பண்ணுகிறவர்களுக்குத் துணைபுரியும் பாங்கில் மந்த்ரிணீ அமைந்துள்ளாள்.

787. त्रिपुरेशी த்ரிபுரேசீ – திரிபுரத்திற்குத் தலைவியாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

சமயபூர்வமாக ஸ்ரீ சக்கரத்துக்கு அதிஷ்டான தெய்வமாயிருப்பவள் லலிதாம்பிகை. இந்த ஸ்ரீ சக்கரத்தில் புரங்கள் அல்லது இருப்பிடங்கள் பல இருக்கின்றன. அவைகளுள் ஒன்பதாவது புரமாக இருப்பது சர்வாஸா பரிபூரகா என்னும் பெயர் பெறுகிறது. அது பதினறு இதழ்களை உடையதாயிருக்கிறது. அந்த ஸ்தானத்துக்கு அதிஷ்டான தேவதையாயிருப்பவள் த்ரிபுரேசீ. இது சமய சம்பந்தமான அத்யாத்மிக தத்துவ விளக்கமாகும்.

இனி,பிரபஞ்சம் முழுதையுமே ஸ்ரீசக்கரமாகக் கருதுவது பொருந்தும். அகிலாண்டங்களையும் தன்னுடைய இருப்பிடமாகக் கொண்டு அன்னை பராசக்திஆட்சிபுரிந்து வருகிருள். புறத்திலிருக்கும் திரிபுரங்கள் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம். இம்மூவுலகங்களையும் அன்னை பராசக்தி முறையாகப் பரிபாலித்து வருவதால் அவளுக்குத் திரிபுரேசீ என்னும் பெயர்வந்துள்ளது. 'அண்டத்திலிருப்பது பிண்டத்திலுமிருக்கிறது' என்பது கோட்பாடு. பிண்ட சொரூபமாகிய மானுட அமைப்பில் மூன்று புரங்கள் இருக்கின்றன. அந்த மூன்று புரங்களையும் மூன்றுவிதமான அவஸ்தைகளில் இருந்துகொண்டு மானுடன் பயன்படுத்தி வருகிருன். அவஸ்தாத்ரயம் என்பது அந்த மூன்று மனநிலைகளுக்கு அமைந்துள்ள பொதுப் பெயர். அம்மூன்றும் முறையே ஜாக்ரத அவஸ்தை, சொப்பன அவஸ்தை, சுஷுப்தி அவஸ்தை எனப் பெயர் பெறுகின்றன. ஆராய்ந்து பார்த்தால் நாள்தோறும் இந்த மூன்று அவஸ்தைகளில் மாறி மாறி மனிதன் வாழ்ந்து வருகிருன் எனினும் அம்மூன்றுக்கும் அவன் அதிபதியாகமாட்டான். ஜாக்ரதாவஸ்தை ஒன்று மட்டும் ஏதோ ஒரு சிறிதளவு அவனுடைய ஆணைக்கு உட்பட்டிருப்பது போன்று தென்படுகிறது. ஆனல் துருவி ஆராய்ந்து பார்த்தால் இவனுடைய ஆணைக்கு உட்பட்டிருக்கிற பகுதி மிகக் குறைவு. உட்படாத பகுதியே பெரும்பான்மையாகும். இனி, சொப்பனவஸ்தையில் இவனுக்கு எந்த விதமான ஆதிக்கமும் இல்லை. திட்டம் போட்டு ஜாக்ரதாவஸ்தையில் சில காரியங்களை நிகழ்த்துவது போன்று மனிதன் திட்டம் வகித்துச் சொப்பனம் காணமுடியாது. மனே விகாரங்கள் தங்கள் போக்கில் உருவெடுத்துக் காட்சிக்கு வருகின்றன. அச்சூழ்நிலையில் ஆழித்துரும்பு போன்று மனிதன் ஆட்டப்படுகிருன். அங்கு வாய்க்கின்ற நலன் கேடுகளுக்கு இவன் கர்த்தா ஆகமாட்டான். சொப்பனவஸ்தை ஆட்டுவிக்கிற பிரகாரம் மனிதன் அனுபவிக்கிருன். இனி, மூன்ருவது அவஸ்தையாகிய சுஷுப்தி அவஸ்தையில் மானுட வியக்தி மறைந்துபட்டுப் போகிறது. சுஷுப்தி அவஸ்தையில் கற்றவன் கல்விமான் அல்லன், கல்லாதவன் கல்வியில்லாதவன் அல்லன். ஏழை. பணக்காரன் என்கின்ற பேதம் அங்கு இல்லை. மேலோன், கீழோன் என்கின்ற பாகுபாடும் ஆங்கு இல்லை. தூங்குகிற மேன்மகன் ஒருவனுடைய முன்னிலையில் அவனுக்கு ஒவ்வாதவன் ஒருவன் நின்றுகொண்டு வேண்டியவாறு அவனை நிந்திக்கலாம், பகடி பண்ணலாம், கீழ்மைப்படுத்தலாம். இத்தனை செயல்களும் அவன் முன்னிலையில் நிகழ்ந்தும் அவைகளை அறியாத அக்ஞான நிலையில் அவன் இருக்கிருன். இனி, அவனுக்கு விருப்பமானவர்கள் அவன் தூங்கிக்கொண்டிருக்கும் பொழுது அவன் முன்னிலையிலிருந்து கொண்டு எவ்வளவுதான் போற்றினலும், பாராட்டினலும் மரியாதை செலுத்தினலும் அச்செயல்கள்யாவும் அவனை வந்து தூக்கிவைக்கமாட்டா. ஆனல் இந்த மூன்று அவஸ்தைக்கும் ஈசுவரியாக அன்னைபராசக்தி அமைந்திருக்கிருள். அவளை முறையாகப் போற்றுவதற்கேற்ப, அவளுடைய அனுக்ரஹத்தைப் பெறுவதற்கேற்ப இந்த மூன்று அவஸ்தைகளிலும் ஆத்மசாதகன் ஒருவனுக்கு இச்சாசுதந்திரம் மேவிடுகிறது. ஜாக்ரதாவஸ்தையில் எண்ணியதை எண்ணியாங்கு நிறைவேற்ற அவன் வல்லவனுகின்ருன். சொப்பனவஸ்தையும் முற்றிலும் அவன் பண்புக்கு ஒத்ததாகவிருக்கிறது. சுஷுப்தி அவஸ்தையில் படிப்படியாக அவன் அறிதுயில் அல்லது யோகநித்திரையில் நிலைபெற்றவனுகிருன்.

சங்க இலக்கியங்களில் சமயக் கருத்துக்கள்

(வித்துவான். ஆதி. பாலசுந்தரன் M.A.)

நல்வினை செய்தால், இவ்வுலகத்தில் நலன் அனுபவிப்பதுடன், தேவலோகம் சென்றும் நலன் அனுபவிக்கலாம் என்பது ஆன்றோர் களின் கருத்து. அந்த அனுபவ மொழியையும் புலவர் இங்கே குறிப்பிடுகின்றார்.

இளம்பெருவழுதி என்பவன் பாண்டிய மன்னருள் ஒருவன். சான்றோர்கள் இயல்பு எத்தகையது என்று சொல்லுவதன் மூலம், மக்கள் எவ்வாறு வாழவேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றான்.

" இந்திரர் அமிழ்தம் இயைவது ஆயினும்
இனிது எனத் தமியர் உண்டலும் இலர் "

[புறநானூறு–182.]

—தேவாமிர்தம் கிடைப்பதாக இருந்தாலும் தனியே உண்ணமாட்டார்கள், மற்றவர்களுக் கும் வழங்கியே உண்பார்கள்.

தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்து தேவாமிர்தம் எடுத்த புராணக் கதை இப்பாடலில் சொல்லப்படுகிறது.

கிடைத்தற்கு அரியது; இழந்தால் பெறமுடி யாதது உயிர். அவ்வுயிரை எந்நாளும் நிலை யாக வைத்திருக்க உதவுவது தேவாமிர்தம். அத்தகைய பெருமைமிக்க தேவாமிர்தம் கிடைத் தாலும் மற்றவர்களுக்கும் கொடுத்து உண்பதே பெரியவர்களின் இயல்பு.

தலைவிதியைப் பற்றிய நம்பிக்கை சங்க காலத்தில் இருந்தது. திருவள்ளுவரும் ஊழ் என்ற தலைவிதியை நம்பினர். ஆனால், தலை விதியைச் சொல்லிக்கொண்டே, முயலாமல் சோம்பேறியாக இருப்பதை வள்ளுவர் விரும்ப வில்லை; கண்டிக்கிறார். முயற்சி இருந்தால், ஊழ்வினையையும் வென்று விடலாம்; முயற்சி செய்யும் எண்ணம் உடைய ஒருவன் முன்னல், ஊழ்வினையே வரிந்துகட்டிக்கொண்டு சொன்ன படி கேட்கும்; என்றெல்லாம் ஊழ்வினை என்ற விதியைப் பற்றிச் சொல்லுகின்றார்.

கணியன் பூங்குன்றன் என்பவரின் பாடல் ஒன்று [புறநானூறு-192] காணப்படுகிறது.

" நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் "

—நீரின் வெள்ளப் போக்கிற்கு ஏற்பத் தெப்பம் அடித்துச் செல்லப்படும். அது போல், இந்த உயிர் விதி வழியே செல்லும் இயல்பு உடை யது—என்கிறார்.

எனவே விதி என்ற ஊழ்வினையில் நம் பிக்கை கொண்டவர்கள் சங்க காலத்தில் இருந்தார்கள். வினைக்குப் பயன் உண்டு; எந்த வினைக்குப் பயன் உண்டு என்ற பொது உண்மை சங்ககால மக்கள் வாழ்வில் அமைந் திருந்தது இப்பாடல் மூலம் புலனாகிறது.

வேள்பாரி கடையெழுவள்ளல்களில் ஒரு வன். பாரி இறந்தவுடன் பாரியின் பெண் குழந்தைகளைக் கபிலர் என்னும் புலவர் அழைத்துக்கொண்டு இருங்கோவேள் என் னும் சிற்றரசனிடம் செல்லுகிறார்.

இருங்கோவேளைப் பற்றிக் கபிலர் சொல் லும் போது, " வடதிசையில் தோன்றி முனி வர் ஒருவர் யாகம் செய்தார். அவ்யாகத்தில் உன்னுடைய வேளிர்குலத்தவர் தோன்றினர். அவர்கள் துவராபதி என்னும் பகுதியைத் தலை நகராகக்கொண்டு ஆண்டு வந்தனர். அவ் வேளிர் வம்சத்தில் தோன்றியவன் நீ. புலிக் கடிமால் என்பது உன் பெயர்" என்று குறிப் பிடுகின்றார்.

யாகம் செய்தல், யாகத்தில் மனித இனத் தைத் தோற்றுவித்தல் ஆகிய புராணத் தொடர் பான செய்திகளைக் குறிப்பிடுகின்றார்.

இங்கே சொல்லப்படுகின்ற துவராபதி என் பது மைசூருக்கு அருகில் துவாரசமுத்திரம் என்னும் ஊர் ஆகும். புலிகடிமால் என்னும் மன்னன் ஹொய்ஸள வம்சத்தைச் சார்ந்தவன்.

தபங்கர் என்னும் பெயருடைய முனிவர் ஒரு காட்டில் தவம் செய்துகொண்டிருந்தார். அப் போது ஒரு புலி அவர் மேல் பாய்வதற்கு நெருங் கியது. அச்சமயம் அங்கு வேட்டையாடிக் கொண்டு வந்த ஸளன் என்னும் யாதவ குல அரசனை முனிவர் பார்த்தார். அவனை நோக்கி, "ஹொய்ஸள"என்று கூறினர். உடனே அரசன் தனது அம்பால் புலியை எய்து கொன்றான். எனவே புலிகடிமால் என்ற பெயர் அவனுக்கு ஏற்பட்டது.

இது ஒரு புராணக்கதை. இன்னொரு புராணக் கதையும் உண்டு.

சசகபுரம் என்னும் ஊரை ஸளன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவன் தன் குல தேவதையான வாஸந்திகா தேவியை வணங்குவதற்குக் காட்டிற்குச் சென்றான். அப்போது புலி ஒன்று அவனைத் தடுத்தது. கோயிலில் இருந்த பெரியவர் ஒருவர் அவனை நோக்கி, "ஹொய்ஸள" என்று கூறி இரும்பு தடி ஒன்றைக் கொடுத்தார். அதைக்கொண்டு அரசன் புலியைக் கொன்றான். அதனால் அவனுக்கு "ஹொய்ஸளன்", "புலிகடிமால்" என்னும் பெயர்கள் ஏற்பட்டன.

இத்தகைய புராணக்கதை நிகழ்ச்சிகள் சங்கப்பாடல்களில் [புறநானூறு-201] இடம் பெற்றுள்ளன.

இங்கே குறிப்பிடப்படுகின்ற ஹொய்ஸள மன்னர்களே வரலாற்றில் குறிப்பிடப்படுகின்ற ஹொய்ஸள மன்னர்கள் ஆவார்கள்.

சோதிடம், கணிதம் சம்பந்தமான செய்திகளும் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன.

யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரமன்னன், சில தீய நிமித்தங்களால் இன்ன நாளில் இறந்து போவான் என முன்னதாகவே அறிந்துகொண்டான். தீய நிமித்தங்கள் புலப்படவும் அவ் அரசனும் இறந்து போனான்.

"மேஷ ராசி பொருந்திய கார்த்திகை நட்சத்திரம் முதலாம் பாதத்தில் நிறைந்த இருளை உடைய இரவு ஏற்படும். பங்குனி மாதத்தில் கார்த்திகை நட்சத்திரம் உள்ள தினம் பூர்வ சஷ்டி அல்லது சப்தமி என்பது கணித நூல் வல்லவர்களின் முடிவு. ஆகவே அத்தினத்தில் நள்ளிரவு நல்ல இருட்டை உடையதாக இருக்கும். அவ் இரவில் வளைந்த பனைமரம் போன்று ஆறு நட்சத்திரங்களைத் தொகுதியாகக் கொண்ட அனுஷ நட்சத்திரத்தின் கீழே, குளம் போன்ற வடிவம் கொண்ட புனர்பூச நட்சத்திரத்தின் இறுதியில், உத்தர நட்சத்திரம் கீழே சாய, அதை அடுத்து, அதற்கு எட்டாவது நட்சத்திரமாகிய மிருகசீர்ஷம் வர, அதன் பின்னால் வந்த நட்சத்திரம் ஒன்று, தீப்பொறி பறக்கக் காற்றினால் பிதிர்ந்து பூமியில் விழுந்தது.

இந்நட்சத்திரம் விழுந்த ஏழாவது நாளில், எதிர்பார்த்தபடியே அவ் அரசனும் இறந்து போனான். பங்குனி மாதத்தில் நட்சத்திரம் பூமியில் விழுந்தால் இராஜபீடை ஏற்படும் என்பது சோதிட நூல் வல்லவர்களின் முடிவு ஆகும்.

மக்களுக்கு எவ்வித இன்னலும் நேராதவாறு பங்குனி மாதம் உத்தர நட்சத்திரத்தில் முருகனை வணங்குவது இன்றும் மரபாக இருந்து வருகிறது.

தமிழ்ப் புலவர் பெருமக்களுள் வடமொழிப் பெயர்களைக் கொண்ட புலவர் பெருந்தகையாளரும் உள்ளனர். ஆதிகவி எனப் புகழப்படும் வான்மீகி முனிவரின் பெயரைக் கொண்டு வான்மீகியார் என்னும் தமிழ்ப் புலவரும் வாழ்ந்தனர்.

பிரம்மனின் பெயரைக் கொண்ட பிரமனார் என்னும் புலவரும் தமிழ்ப் புலவரே. அவர் பாடிய பாடல் புறநானூற்றிலே உள்ளது. உலகத்தின் நிலையாமையைத் தமது பாடலிலே குறிப்பிடுகின்றார்.

உலகத்தில் எதுவும் நிலையில்லாதது ஆகும். எல்லாமே அழிந்து விடும்; இருக்கின்ற வரையிலும் நல்லகாரியங்கள் செய்தல் வேண்டும் என்று உலகத்தின் நிலையாமையைக் குறிப்பிடுவது காஞ்சி என்னும் புறத்திணை ஆகும்.

"..............................துணை அழத்
தொக்கு உயிர் வௌவுங் காலை
இக்கரை நின்று இவர்ந்து உக்கரை கொளலே"

—சுற்றியிருக்கும் சுற்றத்தார், உறவினர் எல்லாரும் அழுது வருத்தப்பட, கூற்றுவனாகிய எமன் வந்து உயிரைக் கவர்ந்து கொண்டு போகும் பொழுது, இவ்வுலகத்தை விட்டு, அக்கரையாகிய வீட்டு உலகத்தைப் பெறும் முயற்சியினை மேற்கொள்க (புறநானூறு-357) என்கிறார்.

இவ்வுலக வாழ்வு நிலையில்லாதது; என்றாவது ஒரு நாள் எமன் வந்து உயிரைக் கொண்டு போவான். அச்சமயத்திலாவது நரகத்தில் இடர்ப்படாமல் மோட்ச உலகம் செல்ல வேண்டும் என்னும் சிந்தனை புலவர் பிரமனார்க்கு ஏற்படவேண்டிய அவசியம் என்ன? இத்தகைய சிந்தனை சங்க காலத்தில் இருந்து வந்ததே புலவரை அவ்வாறு சிந்திக்க வைப்பதற்குக்

காரணமாக அமைந்தது.

உலகம் நிலையில்லாது அழியக் கூடியது என்ற தத்துவச் சிந்தனை மிக உயர்ந்த சிந்தனை ஆகும். ஏன் என்றால் உலகத்தின் தோற்றம், உலகம் நிலைபெற்றிருக்கும் விதம், உலகத்தின் முடிவு ஆகிய இயல்புகளைப் பற்றிய மெய் உணர்வு உடையவர்களுக்குத்தான் இத்தகைய தத்துவ உணர்வு ஏற்படும்.

தீய சொற்கள் பேசுவதால் ஏற்படும் குற்றம், சிந்தனையால் வருகின்ற தோஷம், செய்த பொல்லா தீவினை, பார்வையால் வரும் பாவங்கள், புண்ணிய நூல் அல்லாத பாவ நூல்களைப் படிப்பதாலும் கேட்பதாலும் ஏற்படும் தீங்குகள் ஆகியவை நாம் படுகின்ற துன்பத்துக்குக் காரணமாக அமைகின்றன.

இத்தகைய மன அழுக்குகளை நீக்காதவரையிலும் உலக இன்பமே பெரிதாகப்படும். உலக இன்பத்தையே பெரிதாக எண்ணுகின்றவரையிலும் எமனர் வருவார் என்ற எண்ணமோ, உயிரை அவர் கவர்ந்து செல்வார் என்ற நினைப்போ, நரகத்தில் இடர்ப்படாமல் வீடு பேறு அடையவேண்டும் என்ற விருப்பமோ இரா.

இத்தகைய பொருந்தாத சிந்தனையுடையவர்களுக்குப் புலவர் பிரமனர் உபதேசம் பொருத்தமாக அமைந்துள்ளது.

சோழன் இளஞ்சேட் சென்னி என்பவன் சோழ மன்னருள் ஒருவன். அம்மன்னனை, ஊன் பொதிபசுங்குடையார் என்னும் புலவர் பாடிய பாடல் புறநானூற்றிலே உள்ளது.

அது பாடாண்திணைப் பாடல். ஆடவன் ஒருவனுடைய கொடை, வீரம், புகழ், கல்வி ஆகிய இயல்புகளை விவரித்துப் பாடுவது பாடாண்திணை. அப்பாடலில் இயன்மொழித் துறை அமைந்துள்ளது. அரசனிடத்துள்ள இயல்புகளை உள்ளவாறு எடுத்துக் கூறுவது இயன்மொழித்துறை.

சோழ மன்னன் கொடை வழங்குவதில் சிறந்தவன். இன்னர் இனியார் என்று பாராமலே வாரி வழங்குவான். அவனை நாடிப் பாணர்களும், விறலியர்களும் செல்லுகிறார்கள். அரண்மனையில் உள்ள கருவூலத்தில் இருந்து பொன் நகைகளை அள்ளித் தன்னை நாடி வந்தவர்களுக்குக் கொடுக்கிறான். முன்பின் நகையைப் பார்த்து அறியாதவர்கள் அவர்கள். கை நிறைய நகைகளை அள்ளியவுடன் எந்த நகையை எந்த உறுப்பில் அணியவேண்டும் என்பது தெரியாமல், கழுத்தில் அணிய வேண்டியதைக் காலில் வைத்தும், கையில் அணிய வேண்டியதைக் கழுத்தில் வைத்தும் இவ்வாறு அளவு கடந்த மகிழ்ச்சியில் திண்டாடுகிறார்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு உவமானம் சொல்ல வந்த புலவர், சீதா பிராட்டியாரை இராவணன் சிறையெடுத்துச் சென்றபோது, அம்மையார் தமது ஆபரணங்களையெல்லாம் கழற்றிப் பூமியில் எறிந்து கொண்டே போனர். இந்த நகைகளைக் கண்டு இராமபிரான் அடையாளம் தெரிந்து கொள்ளட்டும் என்ற எண்ணத்தில் அவ்வாறு செய்தார்.

இராமபிரான் தம் தம்பி இலக்குவன், வானர சேனைகள் முதலியவர்களோடு கானகத்தில் சீதையைத்தேடிவருகின்றார். அப்போது வானர சேனைகள், சீதாபிராட்டியார் பூமியில் போட்டிருந்த பொன் நகைகளைப் பார்த்து எடுத்தன. அளவுகடந்த மகிழ்ச்சியில் எந்த நகையை எங்கே அணியவேண்டும் என்பது தெரியாமல், ஒவ்வோர் உறுப்பிலும் வைத்து வைத்துப் பார்க்கின்றன. இந்த வானர வீரர்கள் செய்தது போல, அரசனிடம் பரிசில் பெற்றவிறலியரும் பாணரும் செய்தார்கள் என்கிறார் புலவர்.

மிகப் பழைய பாடலான இப் புறநானூற்றுப் பாடலில் [378] இராமாயண நிகழ்ச்சி குறிப்பிடப்படுகிறது.

இந்த நாடுமுழுவதும் இராமாயணம் பரவி இருந்தது. எனவே, உவமானம் சொல்ல வந்த புலவர் தமது உள்ளத்தில் நிறைந்திருந்த இராமாயணச் சம்பவத்தை எடுத்துக் கூறுகிறார்.

சீதாதேவி இராமபிரானுடன், அயோத்தி அரண்மனையைவிட்டுக் கானகத்திற்கு வரும்போது மங்கல அணி தவிர, ஏனைய அணிகளைத் துறந்து வருகின்றாள்.

அவ்வாறாயின், இராவணன் கவர்ந்து செல்லும்போது, பூமியில் எறிவதற்கு நகைகள் ஏது? எந்த நகைகளைப் பூமியில் பிராட்டியார் எறிந்தார்?

இராமபிரான், சீதாதேவியுடன் கானகத்திற்கு வருகிறார். கானகத்தில் அத்திரி

முனிவர் தம் மனைவி அனுசூயா தேவியுடன் ஆசிரமத்தில் வாழ்ந்து வருகிறார். இராமன், சீதை இருவரையும் தமது ஆசிரமத்திற்கு அழைத்து வந்து தங்குமாறு முனிவர் வேண்டிக் கொள்கிறார். தந்தையின் கட்டளைப்படி, புண்ணிய நதிகளில் நீராடி, தவம் புரிவதே தமது கடமை என இராமபிரான் கூறுகிறார். அத்திரி முனிவரின் மனைவி அனுசூயா தேவி, தம்முடைய நகைகளைச் சீதாதேவிக்கு அணிந்து மகிழ்கிறாள். பிரிந்து செல்லும்போது, அனுசூயா அம்மையாரின் வேண்டுதலை மறுக்க முடியாத நிலையில் சீதாதேவி எடுத்துச் செல்லுகிறார். அந்நகைகளைத்தான் சீதாதேவி, தம்மை இராவணன் கவர்ந்து செல்லும் போது, ஒவ்வொன்றாக எடுத்துப் பூமியில் எறிகின்றார்.

பேசுகின்ற மொழி, கலாச்சாரம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் இந்த நாட்டு மக்களிடையே வேறுபாடுகள் காணப்பட்டாலும், இந்த நாட்டு மக்கள் அனைவரையும் ஒற்றுமைப் படுத்தி வைக்கும் பணியில் இதிகாசங்களான இராமாயணமும், மகாபாரதமும் இணையற்று விளங்குகின்றன.

சங்க இலக்கியங்களுள் ஒன்று குறுந்தொகை என்னும் நூல். அந்நூலில் ஒரு பாடலில் [292] பெண் ஒருத்தி, தன் அன்னைக்குச் சாபம் இடுகின்ற நிலை வருகிறது.

மாமரத்தில் இருந்து தானாகக் கீழே விழுந்த மாங்காய் ஒன்று நீரோடையில் மிதந்து வந்தது. அம்மாங்காயை ஒரு பெண் எடுத்துத் தின்றாள். இச்செய்தி நன்னன் என்ற வள்ளலுக்கு எட்டியது. அவனுக்குச் சொந்தமான மாமரத்தில் இருந்து அம்மாங்காய் கீழேவிழுந்திருந்தது. அவனுடைய அனுமதி இல்லாமல் அப்பெண் அம்மாங்காயை எடுத்துத் தின்றுவிட்டாள். அதற்காக நன்னன், அப்பெண்ணைக் கொன்றுவிட்டான். பெண்கொலை புரிந்தமைக்காக நன்னன் நரகம் எய்தினான். அந்த நன்னன் நரகம் எய்தியது போல, எனக்கு இடையூறு உண்டுபண்ணும் என் தாயும் நரகம் சென்று துன்பம் அனுபவிக்கட்டும் என்று அத்தாயின் மகள் சாபம் இடுகிறாள்.

“பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇயரோ அன்னை!”

நரகத்தைப்பற்றி இங்குச் சொல்லப்பட்டுள்ளது.

நரகத்தைப்பற்றிய புராணச் சிந்தனை அக்காலத்தில் இருந்தது என்பதும், தவறு செய்கின்றவர்கள் நரகத்திற்குச் சென்று துன்பம் அனுபவிப்பார்கள் என்பதும் இப்பாடல் அடிகளால் தெரிய வருகின்றன.

“கடவுள் நண்ணிய பாலோர் போல”—என்னும் குறுந்தொகைப் பாடல் [203] அடியொன்று வருகிறது.

கடவுளைச் சேர்ந்த நல்ல ஊழ்வினை உடையவர்களைப் போல, அவர் நம்மை விட்டுப் பிரிந்து வாழ்கிறார் எனப் பெண்ணொருத்தி தன் கணவனை நினைத்துக் கூறுகிறாள்.

கடவுளைச் சேர்தல் என்பது, கடவுள் மயமாகவே ஆகிவிடுதல் என்பது ஒரு கொள்கை. கடவுள் இருக்கக்கூடிய இடத்தை அடைதல் என்பது ஒரு கொள்கை. இதனைச் ‘‘சாலோகம்’’ என்பார்கள். கடவுள் அருகிலேயே சென்று தங்கியிருப்பது ஒரு கொள்கை. இதனைச் ‘‘சாமீப்ய’’ என்பார்கள். கடவுள் வடிவமாகவே ஆகிவிடுதலைச் ‘‘சாரூபம்’’ என்பார்கள்.

கடவுள் நாட்டம் உடையவர்களுக்கு இல்லறத்தில் பற்றுதல் இருக்காது. எல்லாம் இறைமயமாகவே காண்பார்கள். தன் மனம் அழிந்து, தான் என்ற நிலைமாறி, ஆன்மாவும் இறைவனும் ஒன்று என்று எண்ணக்கூடிய அத்வைத நிலை எல்லாருக்கும் ஏற்பட்டுவிடாது. இறை உணர்வில் தோய்ந்த அனுபவ முதிர்ச்சி உடையவர்களுக்கே அத்தகைய பேருணர்வு ஏற்படும். நல்ல ஊழ்வினை உடையவர்களே இறையருள் நாட்டம் பெறுவதற்குத் தகுதி உடையவர்கள் ஆவார்கள்.

எனவே, ஊழ்வினையைப்பற்றியும், நல்ல ஊழ்வினை, தீய ஊழ்வினை இரண்டும் உண்டு என்பதைப் பற்றியும், நல்ல ஊழ்வினை உடையவர்களுக்கே இறையருள் காட்சி அமையும் என்பதைப் பற்றியும் சங்க காலத்தில் அறிந்திருந்தனர் என்பது இக்குறுந்தொகை அடியால் தெரிய வருகின்றன.

10—12—79 திங்கட்கிழமை ஸ்ரீ சாரதா தேவியாரின் ஜன்மதினமாகும்.

அருணசலேசுவரர் தீபம்

இறைவனை ஜோதி சொருபமாக வைத்து வழிபடுவதுண்டு. மூலப்பிரகிருதியினின்று பஞ்சபூதங்கள் தோன்றி வந்துள்ளன. பஞ்ச பூதங்களையும் சிவசொருபங்களாக வைத்து வழிபடுகின்றோம். காஞ்சிபுரத்தில் பிருதுவி அல்லது மண் லிங்கமாக வைத்து வழிபாட்டுக்கு உரியதாக இருக்கின்றது. திருவானைக்காவலில் அப்புலிங்கம் உள்ளது. திருவண்ணமலையில் ஜோதிலிங்க வழிபாடு நடக்கிறது. காளஹஸ்தியில் வாயுலிங்கமும்,சிதம்பரத்தில்ஆகாசலிங்கமும் வழிபாட்டுக்குஉரியனவாகஇருக்கின்றன. இங்ஙனம் ஐந்து பூதங்களையும் ஐந்து இடங்களில் வைத்து வழிபடுகின்றோம். திருவண்ணமலையில் மலையே ஜோதிலிங்கமாகக் கருதப்படுகிறது.

திருவண்ணமலைக்கு அருணசலம் என்ற மற்றொரு பெயர் உண்டு. பழங்காலத்தில் அநேக சித்தபுருஷர்கள் அங்குள்ள குன்றில் தங்கித் தவம்புரிந்து வந்திருக்கின்றார்கள். இடையக்காடர், அருணகிரிநாதர் என்பவர்கள் அவர்களுள் முக்கியமானவர்கள். திருவண்ணமலை தவத்துக்கு நிலைக்களமாக இருந்தமையால் அது சிறந்த புண்ணிய க்ஷேத்திரமாகிறது. சமீப காலத்தில் அம்மலையில் இருந்துகொண்டு தவமியற்றி ஞானம் அடைந்த மகான் ஸ்ரீ ரமண மஹரிஷி ஆவார். அவர் நிறுவிய ஸ்தாபனம் இன்றும் ரமணாச்ரமம் என்ற பெயருடன் திருவண்ணமலையில் இருக்கிறது.

கார்த்திகை மாதத்தில் வரும் பௌர்ணமியில் இங்கு ஜோதி தர்சனம் நிகழ்கிறது. கார்த்திகைப் பௌர்ணமியன்று தீபவிழா திருவண்ணமலையில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.கார்த்திகை மாதத்தில் வரும் பௌர்ணமி அன்று சூரியன் அஸ்தமனமானதும் திருவண்ணமலையின் உச்சியில் தீபம் ஏற்றி வைப்பார்கள். பெரிய பாறை அகல்போன்று குடைந்து எடுக்கப்பட்டுள்ளது. அந்த அகல் நிறைய நெய் ஊற்றுவார்கள். பெரிய திரி ஒன்று நெய்யில் தோய்த்து அந்த அகலில் போடப்பட்டிருக்கும். திருவண்ணமலையின் உச்சியில் அவ்விளக்கைச் சுற்றித் திரை கட்டி இருப்பார்கள். கிருத்திகை நட்சத்திரம் தோன்றியதும் அருணசலேசுவரரை வெளியில் கொண்டுவருவார்கள். அப்பொழுது வானத்தின் வழியாகக் குன்றின்மீது சுவாலையுடன்கூடிய அம்பை எய்வார்கள். உடனே குன்றின்மேல் உள்ள திரை விலக்கப்படும். மலையின்மீது அப்பொழுது தென்படும் விளக்கு வெளிச்சத்தைப் பார்த்துக் கைகூப்பி 'ஹர, ஹர' என்று உரக்க உச்சரித்து லட்சக் கணக்கான மக்கள் வழிபாடு செய்வார்கள். மலையின்மேல் எரியும் தீப வெளிச்சம் வெகு தூரத்திற்குத் தெரியும். வெளிச்சம் தெரியும் பகுதிகளிலுள்ள மக்கள் தீபத்தைப் பார்த்து 'ஹர, ஹர' என்று கூறி வழிபாடு செய்வார்கள்.

உள்ளத்தில் ஆத்மஜோதி யாண்டும் ஒளிர்ந்துகொண்டு இருக்கிறது. ஆத்மா சுயம் ஜோதியாக இருக்கிறது. அதன் புறச்சின்னமாகத் திருவண்ணமலையில் கார்த்திகை தீபத்தன்று ஏற்றிவைக்கும் விளக்கு அமைந்திருக்கிறது. திருவண்ணமலையில் தீபம் ஏற்றித் தரிசனம் செய்வது போன்று உள்ளத்தில் உள்ள ஆத்மஜோதியைத் தியானத்தின் மூலம் தரிசனம் செய்யவேண்டும். திருவண்ணமலையில் ஏற்றி வைக்கும் தீபம் பரமாத்மாவுக்குச் சின்னம் ஆகிறது. கார்த்திகை தீபத்தன்று திருவண்ணமலை தீபத்தை நோக்கிச் செலுத்தப்படும் அம்பு ஜீவாத்மாவுக்குச் சின்னமாகிறது. திருவண்ணமலை தீபத்தைச் சுற்றி மறைத்துக் கட்டி இருக்கும் திரை ஜீவாத்மனை மறைத்திருக்கும் அவித்தைக்குச் சின்னமாகிறது. திருவண்ணமலையில் செலுத்தப்படும் அக்கினி பாணம் திரையை எரித்துவிட்டு ஜோதியில் ஒன்றித்துவிடுவது போன்று ஜீவாத்மன் தியானத்தின் மூலமாகவும், ஆத்மவிசாரத்தின் மூலமாகவும் அவித்தை என்னும் திரையை அழித்துவிட்டுப் பரமாத்மனில் ஒன்றுபட்டுவிடவேண்டும்.

பரந்த கடலைப் பார்க்கும்பொழுதும், உயர்ந்த மலையைப் பார்க்கும்பொழுதும், பக்தர்கள் கூட்டத்தைப் பார்க்கும்பொழுதும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பரவசநிலையை அடைந்துவிடுவார். பக்தர்கள் கூட்டத்தைப் பார்ப்பது பகவத் தரிசனத்துக்கு நிகராகிறது. கார்த்திகை தீபத்தன்று லட்சக்கணக்கான பக்தர்கள் கூடி 'ஹர, ஹர'

என்று கூறித் திருவண்ணாமலை தீபம் தரிசனம் செய்கிறார்கள். அப்படி அவர்கள் தரிசனம் செய்கின்ற காட்சியைக் காண்பது கடவுள் தரிசனத்துக்கு நிகராகின்றது. திருவண்ணாமலை தீபதரிசனமும், பக்தர்கள் தரிசனமும் கார்த்திகை தீபத்தன்று திருவண்ணாமலையில் சேர்ந்து அமைவது திருவண்ணாமலை தீபத்தின் சிறப்பாகும். திருவண்ணாமலையில் ஏற்றிவைக்கும் கார்த்திகை தீபம் பரமாத்மாவை ஞாபக மூட்டுவது போன்று, பரமாத்மா எண்ணிறந்த ஜீவர்களாக வடிவெடுத்திருக்கும் உண்மையை அன்று ஆங்கு கூடும் பக்தர்கள் ஞாபகமூட்டுகிறார்கள்.

கார்த்திகை தீபத்தன்று திருவண்ணாமலையில் அதிகாலையில் பக்தர்கள் கூட்டம் நாமஜபத்துடனும், பஜனையுடனும் மலையைச் சுற்றி ஏழுமைல் நடந்து செல்லுவார்கள். உடலை மறந்து உணவை மறந்து இறைவன் ஞாபகமாக அவர்கள் நாமஜபத்துடனும், பஜனையுடனும் நடந்து செல்வது அவர்களிடம் அருள் உணர்வை வளர்க்கிறது. அன்று திருவண்ணாமலை ஆத்மீக விழாக்கோலம் பூண்டதாக இருக்கும். இறைவனுடைய மகிமையைப்பற்றிச் சிறப்பாக விளக்கும் சொற்பொழிவாளர்களுடைய செயல் ஒரு புறம் நிகழ்ந்துகொண்டு இருக்கும். இறைவனைக்குறித்துப் பக்தியோடுபாடும் செயல் ஒரு புறம் நிகழ்ந்துகொண்டிருக்கும். ஹர ஹர என்று கூறிக்கொண்டு வழிபாடு செய்யும் செயல் ஒருபுறம் நிகழ்ந்துகொண்டிருக்கும். மக்கள் மனம் அன்று பெரும்பாலும் ஈசுவரனுடைய சிந்தனையிலேயே ஈடுபடுவதற்குரிய செயல்கள் திருவண்ணாமலையில் நிகழ்ந்துகொண்டிருப்பதால் அன்று திருவண்ணாமலைக்குப் புண்ணிய தினம் ஆகிறது. ஜோதி தரிசனம் பார்க்க வேண்டும் என்ற ஆவலோடு விரதமிருந்து பல மைல்களுக்கு அப்பால் இருந்து மக்கள் அங்கு வந்து ஒன்று கூடுகின்றனர். தூய நோக்கத்தோடு லட்சக்கணக்கான மக்கள் ஒன்றுகூடுவது போற்றத்தக்கது ஆகும். அப்படி அவர்கள் ஒன்றுகூடுவதன் மூலம் சமுதாயத்தில் நலத்தை வளர்ப்பவர்கள் ஆகின்றார்கள். சமுதாயத்தில் நல்லெண்ணம் வலுப்பெற்று வருவதற்கு அத்தகைய கூட்டம் துணைபுரிகிறது. இதே போன்று கந்தர்சஷ்டிக்குத் திருச்செந்தூரில் லட்சக்கணக்கான மக்கள் தூய நோக்கத்தோடு ஒன்று கூடுகிறார்கள். மகரஜோதி தரிசனத்துக்குச் சபரிமலையில் ஐயப்பன் கோவிலிலும் பெருந்திரளான மக்கள் ஒன்றுகூடுகிறார்கள். இத்தகைய நிகழ்ச்சிகள் சமுதாயத்தில் நல்ல எண்ணம் வலுப்பெறுவதற்குத் துணையாக அமைகின்றன.

ஐந்து பூதங்கள் இப்பிரபஞ்சத்தை உருவாக்கி இருக்கின்றன. ஐந்துபூதங்களுள் அக்னி பூதம் மத்தியில் அமைந்திருக்கிறது. அக்னி தத்துவம் கண்ணில் அமைந்திருக்கிறது. கண் சிறந்த உறுப்பாகிறது. ஞானத்துக்குக் கண் என்னும் பொறி துணைபுரிகிறது. ஐம்பூதங்களுள் அக்னி பிரம்ம சொருபத்துக்குச் சிறந்த விளக்கமாகிறது. அத்வைதிகளும் அக்னியைப் பிரம்ம சொருபமாகக் கருதி வழிபடுகின்றனர். உருவவழிபாடு செய்பவர்களுக்கும், அருவவழிபாடு செய்பவர்களுக்கும் அக்னி வழிபாட்டுக்குரியதாக அமைந்திருக்கிறது. அத்வைதிகள் திருவண்ணாமலை தீபத்தைப் பிரம்ம சொருபமாகக் கருதி வழிபடுகின்றனர். மற்றவர்கள் அண்ணாமலை தீப தரிசனத்தை ஜோதி சொருபமாகக் கருதி வழிபடுகின்றனர்.

புறத்திலுள்ள அழுக்குகளை எல்லாம் அக்னி பஸ்பம் ஆக்குகிறது. நம்மிடத்திலுள்ள அக்ஞானத்தை ஜோதி தியானம் அகற்றுகிறது. அகத்தில் காணும் ஜோதி தரிசனம் அறியாமையை அகற்றுகிறது. ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் அகத்திலுள்ள அழுக்குகளாகின்றன. ஆத்மஞானம் அல்லது சிவஞானத்தால் மனம், வாசனை, புலன்கள் ஆகியவற்றைப் பொசுக்கித் தள்ளுங்கள். உள்ளத்தில் ஞான ஒளியைப் பெறுங்கள். ஒளிக்கெல்லாம் ஒளியாகவும், மனம், புத்தி, சூரியன், சந்திரன், நக்ஷத்திரம், மின்னல், அக்னி ஆகியவற்றிற்கெல்லாம் எந்த ஒளி பிரகாசத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறதோ அந்த ஒளியை உங்கள் அகத்தில் ஏற்றி வைத்துப் பாருங்கள். அதுதான் உண்மையான கார்த்திகை தீபம் ஆகும். அருணாசலேசுவரர் உங்கள் உள்ளத்தில் ஒளியை உண்டாக்குவாராக. நீங்கள் அனைவரும் அந்த ஆத்ம ஒளியில் ஒன்றித்து அழியாத பேரின்பத்தைப் பெற்றுப் பிறவாப் பெருநிலையை அடைவீர்களாக.

அன்னை ஸ்ரீ சாரதாதேவியார்

(சுவாமி துருவானந்தர்)

"மங்கையர் ஆகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா!"

என்று அருமையாகப் பாடிச்சென்ருன் கவிஞன் ஒருவன். கவிஞனின் கற்பனைதானே என்று நாம் யாரும் இதை ஒதுக்கித்தள்ளிவிட முடியாது. இது காலத்தை வென்று வாழும் கற்பரசிகளின் தூயவாழ்க்கையின் சிறப்பினைச் செப்பவே எழுந்த ஆத்மகீதமாகும். கற்புக்கரசிகளின் தூய வாழ்க்கை முறை அன்றும், இன்றும், என்றும் மாதர் திலகங்களுக்கு மணிவிளக்காக இருந்து அவர்களை வாழ்க்கையின் இலட்சியத்திற்கு இட்டுச் செல்கின்றது.

விதையொன்று இருக்கிறது. விதை தன்னுடைய பூரணத்தன்மையை எப்போது விளக்குகிறது? செடியாகி, மரமாகி, பூத்து, காய்த்துக் கனியாகும்போதுதான் அவ்விதை தன்னுடைய சிறப்பை எய்துகிறது. பெண்ணாகப் பிறந்த குழந்தையொன்று, சிறுமியாகி, குமரியாகி, இறுதியில் அவள் அன்னையாகத் திகழுகிறபொழுதுதான் அரும்பெரும் தியாகச் செயல்களைச் செய்ய அவளால் முடிகிறது. ஆனல் பூவாக இருக்கிறபொழுது உலகுக்குப் பயன்படும் தாவரமும் உண்டு; காயாக இருக்கிறபொழுது தன்னை உலகுக்கு அர்ப்பணிக்கும் தாவரமும் உண்டு. அதே போன்று தாயாக ஆனல்தான் தரணிக்கு உதவமுடியும் என்று தயங்கி மயங்கவேண்டியதில்லை.

உடற்பயிற்சிச்சாலைக்குள் சென்று பார்த்தால் உடலுக்கு உரம் ஊட்டும் விதவிதமான பயிற்சிகள் நடப்பதைக் காணலாம். பிறப்பிலே வத்தலும், தொத்தலுமாகவிருப்பவர்களுக்குச் சரியான உணவுகொடுத்து முறையான பயிற்சி அளித்து வந்தால் அவர்களுடைய உடலிலும் நல்ல பலத்தை உரு ஆக்கித்தர முடியும். அதே போன்று இவ்வுலகம் ஒரு பயிற்சிக்கூடம். இப்பயிற்சிக் கூடத்தில் நம்மைப் பக்குவப்படுத்த, மனத்தைத் திருத்தியமைத்து மேலோராக்க இங்கு வந்திருக்கிறோம். பயிற்சியின்பொருட்டுப் பாடுபடத்தான் வேண்டும். மாடு, குதிரை, யானை, ஒட்டகம் முதலியவிலங்குகள் பகுத்தறிவில்லாத மிருகங்களல்லவா? அந்த மிருகங்களுக்குப் பசிவந்தால் உணவைத் தேடவும், களைப்புத் தோன்றுகிறபொழுது உறங்கவும் தெரியும். அந்த விலங்குகளுக்கும் முறையான பயிற்சி கொடுத்தால் மனிதனைக் காட்டிலும் சிறப்பாக, விசுவாசமாக வஞ்சகமின்றி உழைக்கின்றனவல்லவா? முறையான பயிற்சியால் மிருகங்களே இவ்வாறு உயர்நிலை எய்தினல் மனிதனுக்குப் பயிற்சி கொடுத்தால் எத்தகைய மேலான நிலையை அவன் அடையக் கூடும்!

சிறுமிக்கு வேண்டிய சீரிய பண்புகள்

சிறுவனும், சிறுமியும் இயல்பாகவே சுறுசுறுப்பு உடையவர்கள். அத்தகையவர்களால் ஒரு கணமும் சும்மாவிருக்க முடியாது. வீட்டில் இருக்கும்பொழுது ஏதாவது விஷமத்தனம் பண்ணிக்கொண்டுதான் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களை ஆக்கபூர்வமான பணிவிடையில் ஈடுபடுத்திப் பழக்கவேண்டும். சிறுவயதில் கஷ்டப்பட்டு உழைத்த சிறுவர்களும் சிறுமியர்களும் வயதானாலும் சோம்பியிருக்க மாட்டார்கள். தங்களுடைய வேலைக்குப் பிறரை நம்பியிருக்கவும் மாட்டார்கள். தம் பெண் குழந்தைகளை நல்ல பெண்மணிகளாக வளர்க்க விரும்பும் பெற்றோர் ஒவ்வொருவரும் தங்கள் புத்திரிகளின் விஷயத்தில் ஆரம்பத்தில் சிறிது கண்டிப்புடன் இருத்தல் நலம் பயக்கும். பெண் குழந்தைதானே என்று அளவுக்குமீறிச் சலுகை கொடுத்து அவளுடைய போக்குப்படி வளரவிட்டால் பிறகு நம் வழியில் திருப்பச் சிரமம் ஆகும். நாம் கொடுத்த சலுகையே அவள் வாழ்வைப் பாழ்படுத்திவிடும். அடுத்துக் கண்டிப்பு என்ற பெயரில் பெண் குழந்தைகளை அடித்து, விரட்டி ஒன்றுக்கும் உதவாத நடைப்பிணங்களாக ஆக்கிவிடக் கூடாது. சிறுமியாக இருக்கிறபொழுது சுயமாகச் சிந்திக்கவும், தன் வேலையைத் தானே செய்துகொள்ளும் பயிற்சியையும் பெற்றோர் தங்கள் சிறுமியர்களுக்குப் புகட்டித்தர வேண்டும். சிறுமியாக இருக்கிறபொழுதே பெரியோர்களிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டும், ஆண்மக்களிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதைப்

புகட்டவேண்டும். இறைவனுடைய மகிமையைப் பற்றிய நல்ல பாடல்களையும், பக்தர்களின் சுயசரிதங்களையும்புகட்டுவது பெற்றோர் கடமை.

சாரதாதேவியார் சிறுமியாக இருந்தபோது நடந்த நிகழ்ச்சி இதற்குச் சான்றாகும். மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார் சாரதா தேவியார். ஏழ்மையில் பிறந்துவிட்டால் வேலை செய்துதானே பிழைப்பை நடத்தவேண்டும். அதற்குச் சிறுமி சாரதையும் விதிவிலக்கில்லை. விபரம் தெரிந்த வயதிலிருந்தே கழனியில் தந்தைக்கு உதவியாக இருந்தார். சகோதரர் களைப் பள்ளிக்கு அழைத்துச் செல்லுதல், சமையல் வேலையில் தாய்க்கு உதவுதல் ஆகிய பணி விடைகளில் சாரதாமணி தேவியார் ஈடுபட்டார். அவருடைய உதார குணத்தை மெச்சிய அவ ருடைய தோழிகள் அவர்மீது அன்பு மிகக் காட்டினார்கள். பள்ளி சென்றறியாத பாமரப் பெண்ணாக இருந்தாலும் எத்தகைய வாழ்க்கை வாழவேண்டும், வாழ்க்கையின் லட்சியம்என்ன என்ற உண்மையைத் தீர்க்க தரிசனம்போன்று உணர்ந்திருந்தார். தோற்றத்தில் சிறுமியாக இருந்தாலும் அவர் அடைந்திருந்த மேன்மை யைப் பெற்றோர் நன்கு உணர்ந்திருந்தனர்.

அவருக்கு விவாகம் இளம்வயதிலேயே நடந்தது. மணம் என்றால் என்ன என்பதே தெரியாத பருவம் அது. சிறுமி வயது ஆகி கன்னி ஆனாள். வயது ஏறஏற அனுபவமும் வளர்ந்தது. தம்மை ஆட்கொண்டவர் ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சர் என்பதையும் அவர் அறிந்தார். ஆனால் தம் கணவருக்குப் பைத்தி யம் பிடித்ததாக ஊர் மக்கள் பேசிக்கொண்டது, அவர் உள்ளத்தில் வேதனைத் தீயை மூட்டி யது. தம் கணவரைக் காணவேண்டும் என விரும்பியது அவர் மனம்.

சிறுமி ஒருத்தி இளம் பெண்ணாக வளருகிற பொழுது பெற்றோரின் கண்காணிப்பு அவளுக்கு அதிகம்தேவைப்படுகிறது. புயல் வீசும் பருவம் என அதனை மன இயல் நூலார் கூறுகின்றனர். பெற்றோரிடமிருந்து, குறிப்பாகத்தாயிடமிருந்து பெண்ணொருத்தி கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டிய அனைத்தையும் அந்தப் பருவத்தில் அவள் கற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே அந்தப் பருவத்தில் மனதில் நல்ல எண்ணத் திற்கு மட்டும் இடம் தந்து தன் எதிர்கால வாழ்வைத் தீர்மானிப்பதில் முற்றிலும் தன் தாய் தந்தையரைச் சார்ந்திருக்க வேண்டும். கல்வி கற்கவேண்டும், பட்டம் பெறவேண்டும் என்ற நோக்கில் பள்ளிக்கோ, கல்லூரிக்கோ சென்று மனதைக் கீழ்மையில் சேர்த்து விட அனுமதிக்கக்கூடாது. தற்காலம் போகிற போக்கு அத்தகைய நிலையிலிருக்கிறது. பெற் றெடுத்தது முதல் பேணிக்காத்து மகளுக்கு நல்ல கணவனைத் தேடி அவனிடம் ஒப்படைக் கும் வரை பெரும் பொறுப்பு தங்களுக்கு இருக் கிறது என்பதை எந்தத் தாயும் தந்தையும் மறந்து விடக்கூடாது. இவ்விஷயத்தில் மகளா னவள் முற்றிலும் தன் தாய் தந்தையரின் தீர்மானத்திற்கே விட்டுக்கொடுத்து அந்தக் கண்கண்ட தெய்வங்கள் காட்டித்தருகிற முறை யில் வாழவேண்டியது கற்புள்ள ஒவ்வொரு பெண்மணியின் கடமையாகும்.

தக்ஷிணேசுவரக்காளி கோயிலில் உள்ள கண வனைக் கண்டாள் சாரதை. தம் கணவர் உலக மக்களுக்குப் பைத்தியம் போன்று தென்படு கின்றாரேயொழிய அவர் பரிசுத்தமான தூய துறவி என்றே அவர் பரமஹம்சரைக் கண்ட வுடன் முடிவு கட்டினார். பரமஹம்சர் சாரதா தேவியிடம் நடந்து கொண்ட பாங்கு மேலும் அவரை வியப்புறச் செய்தது. பரமஹம்சர் சாரதாதேவியிடம் இங்ஙனம் கூறினார்: “சாரதா, உனக்கு வேண்டிய இவ்வுலக சுகங்களத்தனை யையும் இங்குப் பெறலாம். எந்த விதத்தடையு மில்லை; உன் விருப்பம் என்ன?” சாரதா தேவி யார் உடனே கூறினார்: “உங்களை இவ்வுலக வாழ்க்கைக்கு இழுத்துவர நான் விரும்ப வில்லை. உங்களுக்கு ஆத்ம சாதனத்தில் உதவ வும், அதோடு நானும் ஆத்ம சாதனம் செய்து பெருநிலையை அடையவும் விரும்புகிறேன்.” இந்தக் கூற்று பரமஹம்சருக்குத் திருப்தியை உண்டுபண்ணிற்று. ஆகவே மண வாழ்க்கை அவருக்கு எந்த வித இன்னலையும் அளித்து விடவில்லை.

கற்பு பெண்களுக்குச் சிறந்த அணிகலன் ஆகிறது. பெண்மணிகள் அனைவரும் சீதா தேவியின் வாரிசுகள். தமயந்தி, சாவித் திரி, திரௌபதி, அனுசூயா போன்ற கற்புக் கரசிகள்தாம் பெண்மணிகளுக்கு முன்னோடி கள். மணம் ஆகும்வரை தாய் தந்தையரைத்

தெய்வமாக வணங்க வேண்டும், மணமான பிறகு கணவனே கண்கண்ட தெய்வம். இந்தப் பாங்கில் பெருவாழ்வு வாழ்ந்தவர்களே மேற் சொன்ன பத்தினித் தெய்வங்கள். அப்படி யிருக்க நாயகனின் விருப்பமே நாயகியின் விருப்பமாக இருக்கவேண்டும். கணவன் விரும் பாதவைகளை மனைவியும் விரும்பாது ஒதுக்கித் தள்ளுவது தான் குடும்பத்தில் மன அமைதி ஏற்பட வழிவகுக்கும். ஆனால் இந்த நேரத்தில் விவேகத்தைக் கடைப்பிடிக்க எந்த ஆணும், அல்லது பெண்ணும் முயலவேண்டும். கணவன் மார்களோ, மனைவிமார்களோ, நன்னெறி விட்டுத் தீய நெறியில் சென்றால் அவர் களைத் திருத்தியமைத்து நல்வழிக்குக் கொண்டு வர ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கின்ற னர். 'கல் ஆனாலும் கணவன், புல் ஆனாலும் புருஷன்' என்பது கோட்பாடு. இந்த உயர்ந்த கோட்பாட்டைக் கடைப்பிடிக்கிற எந்தப் பெண் தான் கணவனிட்ட ஆணையை மீறிச் செல்ல முடியும்? குடித்தனமோ துரைத்தனமோ என்ற பழமொழி ஒன்று உண்டு. குடும்பத்தை நிர்வகிப்பது ஓர் அரசாங்கத்தை நிர்வகிப்ப தற்கு நிகர். வீட்டின் குடும்ப காரியங்களனைத் தையும் அவளே அன்போடு செய்வதால் வீட்டுத் தலைவி அல்லது இல்லாள் என அவள் அழைக்கப்படுகிறாள். வீட்டில் ஏற்படும் பிரச் னைகளைத் தீர்த்துவைப்பதில் கணவனுக்கு நல்ல துணை போன்றும், கணவனுக்கும் குழந்தை களுக்கும் சேவை செய்வதில் தாய் போன்றும், கணவனின் மேலாம் அறவுரையைக் கேட்ப தில் சிஷ்யன் போன்றும், குழந்தைகளைக் கண் டித்து வளர்ப்பதில் ஆசிரியை போன்றும் இல்லத்தலைவி இருக்கக் கடமைப்பட்டிருக் கிறாள்.

ராமகிருஷ்ணரின் தவ வாழ்வைக் கண்ட ஒரு மார்வாரி பக்தர் ராமகிருஷ்ணரின் சம்ரக்ஷணைக் காக ரூபாய் பத்தாயிரத்தை ஒரு வங்கியில் போட பரமஹம்சரின் அனுமதியை வேண்டி னார். காம, காஞ்சனத்தைத் துறந்த பரமஹம்ச ருக்கு இந்த வேண்டுகோள் தம் தலையை ரம்பத் தால் அறுப்பது போலிருந்தது என்றார். பக்த ரின் வேண்டுதலைப் புறக்கணித்து 'எனக்குத் தேவையில்லை உம் பணம். அம்பாள் எனக்கு வேண்டுவனவற்றை அவ்வப்போது தந்துதவு கிறாள்' என்றார் பரமஹம்சர். பக்தர் விடாப் பிடியாக 'அப்படியானால் சாரதா தேவியாரிடம் கேட்டு அவர்களிடம் ஒப்படைத்து விடலாமா' என்றார். 'அவளுக்கு விருப்பம் இருந்தால் ஏற்றுக்கொள்ளட்டும்' என்று பரமஹம்சர் மௌனமானார். பக்தர் அன்னையாரைப் பணம் பெற்றுக்கொள்ளும்படி வேண்ட, அறிவுத் தெளிவு பெற்ற அன்னையார் அப்பக்தருக்குச் சரிரென்று பதில் கொடுத்தார்: "அவருக்குத் தேவையில்லாத பணம் எனக்கெதற்கு? அவர் விருப்பமே என் விருப்பம் ஆகும். அவருக்காக வாழும் நான் அவர் விருப்பத்திற்கு மாறாக ஒரு போதும் நடக்கமாட்டேன். போய் வாருங்கள்" என்று சொல்லி அனுப்பிவைத்தார் பணம் மறுத்த பத்தினியார். இது இலட்சிய மகளிர்க்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை."

தெய்வம் என்பது புறத்தே உள்ள தன் நாய கனே அன்றி வேறு எங்கும் இல்லை என்ற பாவனையோடு அறத்தைக் கடைப்பிடித்து வாழுகிற பெண்டிர்களின் எண்ணத்திற்கு பஞ்சபூதங்களும் கட்டுப்படுகின்றன. அவர்கள் 'மழைபெய்' என்று சொன்ன மாத்திரத்தில் மழை பெய்யும். அப்படிப்பட்ட கற்புக்கரசி களின் வயிற்றில் பிறக்கிற ஜீவன் ஒவ்வொரு வனும் உலகை உய்விக்கும் உத்தமனாக வருவா னன்றோ? நல்ல மகளிர்க்கு இலக்கணம் தரு கின்றார் சான்றோர் ஒருவர். கணவனும் மற்ற வர்களும் துயில் எழும் முன்னமே பெண்மணி யானவள் எழுந்து விடுவாள். தன் நாயகனின் கால்களைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டுக் கற்புக் கரசிகளை மானசீகமாக வணங்கிவிட்டுக் கடமை களை ஆற்றுவதில் விரைந்து ஈடுபடுவாள். தன் வீடு, தன் குடும்பம் தவிர வேறு சிந்தனையின்றி அலுவல்களில் ஈடுபடுவாள். இல்லையென்று வருகிறவர்களுக்கு இல்லை என்று சொல்லாது வழங்கும் அட்சயபாத்திரமாக விளங்குவாள். தன்வீட்டுக் குறைபாட்டை வெளியிடாது, மற்ற வர்வீட்டு ஸ்திரீகளையும் வலுவில் கூப்பிட்டு வீண் வம்புகளில் ஈடுபட மாட்டாள். சிந்தை யின் நிறைவே செல்வம் என்பதற்கிணங்க இருப்பதில் திருப்தியடைந்து எளிய, ஆனால் உயர்வான தூய வாழ்க்கை வாழுபவள்

எவளோ அவளே கிருஹலக்ஷ்மி, கிருஹ தேவதை என்றழைக்கப்படுகிருள்.

தக்ஷிணேசுவரக் காளி கோயிலில் ஒரு சிறிய அறையில் சாரதாதேவியார் வாழ்ந்து வந்தார். அன்னையார் ஆங்கு வாழ்ந்திருந்தது பலருக்குத் தெரியாது. அவ்வளவு அமைதியாக வீட்டுக் கடமைகளை இடையருது செய்து எல்லாரும் படுத்துறங்கச் சென்ற பிறகுதான் படுக்கச் செல்லுவார் சாரதாதேவியார். ஆனல் அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து குளித்துவிட்டு ஜபத்தில் ஈடுபட ஆரம்பித்துவிடுவார். கடுமையான அன்ருட வேலைகளுக்கிடையிலும் ஆத்ம சாதனத்தில் ஈடுபடுவதை அவ்வம்மையார் ஒத்திப் போட்டது இல்லை. ஆத்ம சாதகர்களுக்கு இது ஓர் எடுத்துக்காட்டு ஆகும். பெண்களுடைய வாழ்வு மிகக் கட்டுப்பாடான வாழ்வாக இருக்க வேண்டும். ஆடவர்களிடமிருந்து அவர்கள் யாண்டும் ஒதுங்கி வாழவேண்டும். மெல்லிய இயல்பு படைத்தவர்கள்தாம் பெண்டிர். ஆனல் மென்மை என்ற பெயரில் கோழைகளாக மாறியமைந்துவிடக் கூடாது. அவர்களிடம் ஆண்மை மிளிரவேண்டும். அஞ்சாமை குடியிருக்க வேண்டும். ஜான்சிராணி, ராணிமங்கம்மா, நிவேதிதை தேவியார் போன்ற வீரமகளிர்கள் இக்காலப் பெண்டிர்களுக்கு எடுத்துக்காட்டுக்கள் ஆவார்கள். உலகில் ஒவ்வொருவருக்கும் சத்துருக்கள் இருக்கிருர்கள். கீழான மனப்பான்மைபடைத்த துஷ்டன் ஒருவன் சாரதாதேவியார் வாழ்ந்த ஜயராம்பாடியில் வாழ்ந்து வந்தான். அவன் கீழான நோக்கத்தோடு அன்னையார் தனிமையில் இருக்கிறபொழுது சென்ருன். தீயவனின் கொடிய நோக்கத்தையும் அவன் வந்த நிலையையும் புரிந்துகொண்டு தன் சொருபத்தை மாற்றிஞள். காளி உருவமானுள் இக்காரிகை. தீயவனை நையப்புடைத்தாள், உருட்டித் தள்ளிஞள். உயிர்ப் பிச்சை கேட்டுக் காலில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டு ஓடிவிட்டான் அப்பாதகன்.

"பாதகம் செய்பவரைக் கண்டால்–நாம்
பயங்கொள்ளலாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா !–அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா"

என்று பாவையர்க்குப் பாடம் புகட்டுகின்ருன் பாரதி.

சாரதா தேவியார் உயர்ந்த ஞான குருவான பின்பு தம் சிஷ்யைகளுக்கும் இதைத்தான் உபதேசித்தார். பெண்ணொருத்தி தனித்திருக்கையில் தந்தையோ, சகோதரனே வந்தால்கூட எட்ட ஒதுங்கிவிடவேண்டும். ஆண்களையெல்லாம் சிவமாகவும் பெண்களை லோகமாதாவாகவும் பார்த்து மனதைத் தூயதாக்கிக்கொள்ளச் சொன்னுள் நம் அன்னை. இந்துக்களையும் முஸ்லீம்களையும் ஒன்றுபடுத்த எத்தனையோ தலைவர்கள் தோன்றினர்கள். ஆனல் மறுபடியும் அந்த மதவெறி இன்று வரை மாறியதாகத் தெரியவில்லை. ஆனல் வேதாந்தம் ஒன்றின்மூலம் தான் மதவெறியை நீக்கமுடியும். எல்லாரும் ஒரு தாய்க்குக் குழந்தைகளன்ருே! அப்படியிருக்கையில் பேத புத்தியை வளர்த்து மதவெறியை வளர்ப்பவர்களை இறைவன் ஒருபொழுதும் மன்னிக்க மாட்டான். அவரவர் தங்களுடைய மதத்தை ஆழ்ந்து அனுஷ்டித்து அவரவர் மதத்தின் லட்சியமாகிய இறைவனை அடைவது குறிக்கோள். இதை மறந்து ஒவ்வொருவரும் சண்டையிடுவதால் யாருக்கு லாபம்!

சாரதா தேவியாரை நாடிவந்த எத்தனையோ பக்தர்களில் முஸ்லீம் இளைஞனும் ஒருவன். அன்னையாரைக் காணவந்த அந்த இளைஞனை ஆங்கிருந்த மற்றவர்கள் வெறுத்து ஒதுக்குவது போலப் பார்த்தனர். அவனுடைய தோற்றம் பார்க்க மிகக் கேவலமாக இருந்தது. ஆனல் அன்னைக்கு எல்லாரும் சமம். அவ்விளைஞனிடம் கால் அலம்பக்கூறிவிட்டு வீட்டினுள் அறுசுவை உண்டியைத் தயாரித்துத் தானே அவனுக்குப்படைத்து அன்பொழுக அனுப்பிவைத்தாள். அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ். பேதபுத்தியைக் காண்பது அஞ்ஞானம். ஐக்கிய புத்தியைத் தருவது ஞானம். இப்படி உயர்வான ஞான வாழ்வு வாழ்ந்து மண்ணுலக மாந்தர் வாழ வழிகாட்டிய அன்னை அறுபத்தேழு ஆண்டுகள் வாழ்ந்து தமது நாயகரும், ஞான குரவரும் ஆகிய இராமகிருஷ்ணர் இட்ட ஆணையை முடித்துக்கொண்டு நம்மைவிட்டுப் பிரிந்தார். சூக்ஷ்மவடிவில் நம்மோடு இன்று இருந்து குருதேவர் இட்ட ஆணையை நிறைவேற்ற நம்மைத் தூண்டிவிடுகிருர். அவர் வாழ்ந்த வாழ்வைச் சிந்தித்து, நடைமுறைக்குக் கொண்டுவந்து அவர் மயமாவோமாக!

சிரத்தை

(திரு. V. S. நரசிம்மன்)

'தர்மம், தவம், சிரத்தை' ஆகிய சொற்கள் நம் தத்துவத்தில் அதிகம் பயன்படுத்தப் படுகின்றன. 'இயல்பு, விரதம், நம்பிக்கை'— என இவற்றை மொழிபெயர்க்கின்றோம். ஆயின் மூலத்தில் உள்ள ஸம்ஸ்கிருத சொற்களைப் போல இவை ஆழமும், பரந்தபொருளும் தருவதில்லை. மொழி பெயர்த்து அவற்றின் பெருமையை உணர முடியாது. பாரதீயப் பண்பாட்டின் பின்னணியில் அவற்றின் பொருளை ஆராயவேண்டும். சுவாமி விவேகானந்தர் 'சிரத்தை' என்பதை விளக்கும்போது 'இந்தச் சொல்லை நான் மொழி பெயர்க்கமாட்டேன். மூலத்தில் உள்ளதை அப்படியே கொள்வது சாலச் சிறந்தது' என்று உரைத்தார்.

'சிரத்தை' என்றால் 'நம்பிக்கை' என்பது ஏகதேசம் பொருந்தும். வேதத்தில் (சுருதி) நம்பிக்கை கொள்ளல் சிரத்தை எனப்படும். மேற்கொண்ட இலட்சியத்தில் நம்பிக்கை வைத்து அதனை எய்த மேற்கொள்ளும் இடைவிடாத முயற்சியும் சிரத்தை ஆகும். செய்கின்ற செயலைப் பொறுப்போடு, கவனத்தோடு செவ்வனே செய்யும்போது 'சிரத்தையுடன்' உழைக்கின்றோம். மனம் சிதைவுறாது ஒருமைப்பாட்டோடு பயிலும்போது 'சிரத்தையுடன்' படிக்கின்றோம். 'சிரத்தை' என்னும் சொல் பல கருத்துக்களில் பயன்படுத்தப் பட்டிருப்பதை நாம் இதனால் உணரலாம்.

விவேக சூடாமணியில் ஆசாரிய சங்கரர் 'சிரத்தை'யின் இலக்கணத்தை வரையறுக்கின்றார்.

शास्त्रस्य गुरुवाक्यस्य सत्य बुद्ध्यवधारणम् ।
सा श्रद्धा कथिता सद्भिर्यया वस्तूपलभ्यते ॥

"சாஸ்திரம், குருவின் உபதேசம் இவற்றில் ஆழ்ந்த நம்பிக்கை கொள்வது சிரத்தை என ஆன்றோர் மொழிவர். இத்தகைய சத்திய புத்தியின் மூலமே மெய்ப்பொருளை உணரமுடியும்."

புலனறிவுக்கு எட்டாத பரம்பொருள் தன்மையைச் சாஸ்திரங்களின் மூலமே அறிய முடியும். அனுபவத்தின் மூலம் உணர்ந்த ஆப்த ஞானிகள் தரும் உபதேசமும் இத்தகையதே. 'சுருதிப் பிரமாணம்' என்று நம் தர்சனத்தில் இது வழங்கப் பெறுகின்றது. வேதத்தைப் பிரமாணமாக ஏற்பவன் ஆஸ்திகன்; ஏற்காதவன் நாஸ்திகன். வேதத்தில் வைக்கும் அசையாத நம்பிக்கையை, சிரத்தையை, ஆஸ்திக அறிவு (आस्तिक्य बुद्धि) என்றே ஆசாரியர் குறிப்பிடுகின்றார். பகவத்கீதையில் நான்காம் அத்தியாயம் நாற்பதாவது சுலோகத்திற்கு உரை எழுதும்போது 'अश्रद्धानः च गुरुवाक्य: शास्त्रेषु अविश्वासं च - சிரத்தை அற்றவர்கள்— குருவின் வாக்கியம், சாஸ்திரம் இவைகளில் நம்பிக்கை இல்லாதவர்கள்' எனக் குறிக்கின்றார். மேலும் ये शास्त्रविधिमुत्सृज्य यजन्ते श्रद्धयान्विताः (17-1, பகவத்கீதை) என்ற சுலோகத்திற்கு விரிவுரை எழுதும் போது, श्रद्धयान्विताः आस्तिक्य बुद्धया अन्विताः संयुक्ताः — சிரத்தையோடு கூடியவர்கள் ஆஸ்திக புத்தி படைத்தவர்கள்" என்று கூறுகின்றார். எனவே வேதத்தை உயர்ந்த பிரமாணமாக ஏற்கும் ஆஸ்திக புத்தி 'சிரத்தை' எனப்படுகின்றது.

இக்கருத்தை ஞானிகள் தம்முடைய வாழ்க்கையில் மெய்ப்பிக்கின்றனர். ஆசாரியரின் இலக்கணத்திற்கு ஏற்ப 'சிரத்தை' உடைய சாதகர்களுக்குக் குருவின் மொழி 'வேதவாக்கு' ஆகின்றது. குரு சாஸ்திர வடிவமாகவே இத்தகைய சீடர்களுக்கு இலங்குகின்றார். ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் ஆழ்ந்த பக்தியும் சிரத்தையும் உடைய சீடரில் திரு. நாகமகாஷயரும் ஒருவர். ஒரு சமயம் பரமஹம்சர் நெல்லிக்கனி ஒன்றைக் கொணருமாறு அவரிடம் கூறினர். அந்தப் பருவத்தில் சாதாரணமாக அக்கனி கிடைக்காது. 'இப்போது நெல்லிக்கனி காய்க்கும் பருவம் அன்று' எனக் கூறிவிட்டுச் சீடர் வாளாவிருக்கலாம் அன்றோ? ஆயின் இத்தகைய அலட்சிய மனப்பான்மை பரமஹம்சரின் சீடரிடம் காணப்படுமா? 'எப்போது பரமஹம்சர் வாயைத் திறந்து கேட்டாரோ, அப்போது எங்கோ ஓரிடத்தில் இக்கனி கட்டாயம் இருக்க வேண்டும்' என்றே அவர்

தீர்மானித்தார். நம்பிக்கையோடு, பொறுமையோடு, விடாமுயற்சியோடு தேடினார். அவருடைய முயற்சி பலனளித்தது. அக்கனியை எடுத்துக்கொண்டு பரமஹம்சரிடம் தந்தார். குரு சாதாரணமாக உரைத்த மொழியில் அவர் காண்பித்த 'சத்திய புத்தி' சிரத்தைக்கு விளக்கம் அன்றோ?

இத்தகைய நம்பிக்கை சிறிது இருந்தாலும் போதும் சாதகனுக்குப் பெரும் பயன் அதனால் கிட்டும். நரேந்திரன் இளமைப் பருவத்தில் 'குருட்டு நம்பிக்கைகள்' என இத்தகைய மனப்பான்மையை எள்ளி நகையாடுவான். 'வீணே மந்திரங்களை உருப்போடுவதால் என்ன பயன்' என்று வாதிடுவான். "அறிந்தோ அறியாமலோ இறைவனின் திவ்ய நாமத்தை உச்சரித்தால் அதற்குரிய பலன் கட்டாயம் கிட்டும். கங்கைக் கரையில் நிற்கின்ற உன்னை நதியில் ஒருவன் தள்ளிவிட்டால், கங்கையில் நீராடிய புண்ணியம் நீ விரும்பாவிடினும் உனக்குக் கிட்டும். இதுவும் அது போன்றது" எனப் பரமஹம்சர் நம்பிக்கையின் அவசியத்தை உணர்த்தினார். स्वल्पमप्यस्य धर्मस्य त्रायते महतो भयात् – சிரத்தையோடு பின்பற்றினால் சிறிதளவு பயிற்சியும் பெரும் பலனைத் தரும். துவக்கத்தில் வாதிட்டு, அவநம்பிக்கை மேலிட்டுப் பேசிய நரேந்திரனைத் தமது உத்தம சீடனாகப் பரமஹம்சர் மாற்றியமைத்தார். குருவினிடம் அவர் காட்டிய பக்தியே அவர் உன்னத நிலை எய்த உதவியது.

'சிரத்தையே வடிவாக உள்ள சாதகர்களுக்குப் பல இலக்கணங்கள் உரித்தாகின்றன. தான் அடையவேண்டிய இலட்சியத்தில் அவன் தெளிவு பெற்றவன். அவன் மனம் அலையாது, ஒருமுனைப்பட்டு இருக்கும். (व्यवसायात्मिका बुद्धि) பெரும் ஆற்றலுடன் (दक्षत्व) வினையாற்றுவான். மனிதர்களிடையே வேற்றுமை காணப்படுகின்றது. ஒவ்வொருவர் மேற்கொள்ளும் 'சிரத்தையின்' அடிப்படையில் இது அமையும். श्रद्धामयोऽयं पुरुषः। योयच्छ्रद्धः स एव सः — மனிதன் சிரத்தை வடிவானவன். எத்தகைய சிரத்தை உள்ளதோ அதற்கேற்ப அவன் அமைகின்றான்" என்பது கீதை. கீதாசாரியன் சிரத்தையினை அளவுகோலாகக்கொண்டு சாத்விக, ராஜஸிக, தாமஸிக என முப்பெரும் பிரிவுகளாக மனிதர்களைப் பிரிக்கின்றார். (கீதை, 17ம் அத்தியாயம்)

சிரத்தைக்கு நல்லுதாரணமாகத் திகழ்பவன் நசிகேதன். கடோபநிஷத் அப்பாலகனின் நற்குணத்தைப் பெரிதும் போற்றுகின்றது. அவன் தந்தை 'விசுவஜித்' என்ற யாகம் செய்தார். தம்மிடம் இருக்கும் அனைத்தையும் தானமாகத் தரவேண்டும் என்பது யாக நியதி. ஆனால் அவர் எதற்கும் உதவாத பசுக்களைத் தானமாக அளித்தார். நசிகேதனின் மனதில் 'தந்தை செய்வது சரியன்று' என்ற எண்ணம் உதித்தது. 'அவன் சிரத்தையை அடைந்தான். श्रद्धाविवेश' என்று உபநிஷத் குறிப்பிடுகின்றது. தந்தையின் யாகம் முறைப்படி பூர்த்தியாக வேண்டும் என்பதற்காக 'என்னை யாருக்குத் தானமாகத் தருகின்றீர்கள்' என்று மும்முறை கேட்டான். 'உன்னை யமனுக்குத் தானமாகத் தருகின்றேன்' என்று தந்தை முனிந்து மொழிந்தார். தந்தையைச் சத்தியவிரதர் ஆக்குவதற்காக யமனுலகம் சென்ற நசிகேதன், மூன்று வரங்களைப் பெறுகின்றான். முதல் வரத்தால் தந்தையின் நலனையும், இரண்டாவது வரத்தால் இம்மை மறுமைப் பலன்களை அளிக்கும் யாக முறையினையும் பெற்ற நசிகேதன், ஆத்மஞான உபதேசத்தை மூன்றாவது வரமாகக் கேட்கின்றான். பலவிதமான சோதனைகளைச் செய்து, பலவித சுகபோக ஆசைகளைக் காட்டி அவன் உள்ளத் திண்மையை யமன் பரிசோதிக்கின்றான். நசிகேதன் விவேகமும் வைராக்கியமும் உடையவனாக இருந்து மோகத்தில் அகப்படாதவனாக விளங்குகின்றான். ஆத்மஞானம் பெறுவதில் சிரத்தையே வடிவெடுத்தவனாக இருக்கின்றான். தன்னுடைய லட்சியத்தை விடாத அவன் உறுதியை, ஆத்மஞான வேட்கையை யமன் பெரிதும் பாராட்டுகின்றான். "विद्याभीप्सितं नचिकेतसं मन्ये– ஆத்மஞான நாட்டமுள்ளவனாக நசிகேதனைக் கருதுகின்றேன்". "सत्यधृति र्बतासि — சத்தியத்தில் உறுதியாக இருப்பவன் நீ". विवृतं सद्म नचिकेतसं मन्ये — சுகபோகங்களைத் துறந்து வைராக்கியம் மேலிட்டு இலங்கும் உனக்குப் பிரம்மத்தின் வாயில் திறக்கப்பட்டுள்ளது எனக் கருதுகின்றேன்". இவை அனைத்தும் யமனுடைய பாராட்டு மொழிகளாகும். ஆசைகளை அகற்றி,

தடைகளால் தயக்கமுருது, உண்மைகளை அறிவதில் தீவிர நாட்டமும், உறுதியும் சாதகனுகிய நசிகேதனுக்கு உயர்ந்த ஆத்மஞானத்தை அடைய உதவின. 'குறிக்கோள் இல்லாது கெட்டேன்' என்ற இழிநிலை அடையாது, குறிக்கோளில், இலட்சியத்தில் பற்று வைத்தல் 'சிரத்தை' எனக் கண்டோம். 'குறிக்கோளை உடையவன் தப்பிழைக்கலாம்; ஆனல் இவன் ஒரு தவறு செய்தால், குறிக்கோள் இல்லாதவன் ஒரு டஜன் தவறு செய்வான்' என்பார் சுவாமி விவேகானந்தர். எனவே 'ஏனே,தானே' என வாழாது, இலட்சிய வாழ்க்கை வாழ்வதே சைதன்ய மயமான ஜீவர்கட்கு ஏற்புடையது. 'சிரத்தை' அதற்குச் சிறந்த உபாயமாகும்.

சித்தார்த்தன் மற்ருெரு ஆதர்ச புருஷன் ஆவார். வாழ்வின் நிலையாமையைக் கண்டதும், வைராக்கியத்தோடு உண்மையை அறிய, தம் சுகபோக வாழ்க்கையை ஒதுக்கி, தவ வாழ்வை மேற்கொண்டார். சாரநாத் என்ற புண்ணிய ஸ்தலத்தை அடைந்து, தவம் இயற்ற அமரும்போது பிரதிக்ஞை செய்கின்ருர்:

ईहासने शुष्यतु मे शरीरम् ।
त्वगस्ति मांसं प्रलयं च यातु ॥
अप्राप्य बोधिं बहुकल्प दुर्लभं ।
नैवासनात् कायं राततु चलिष्यति ॥

"இந்த இருக்கையில் என் சரீரம் உலர்ந்து போகட்டும்.தோல், எலும்பு, நரம்புகள் அழியட்டும். இரத்தம் வற்றட்டும். பல கல்ப காலத்திலும் பெறுதற்கரிய ஞானத்தை அடையாது இந்த ஆசனத்தினின்று என் சரீரம் அசையாது." இத்தகைய மனஉறுதியோடு அவர் போதிமரத்தினடியே தியானத்தில் அமர்ந்தார். மாரன் அவர்மனதில் பல சலனங்களைஉண்டாக்கினுன். ஆயின் அவை பயனற்றன. தம் பிரதிக்ஞையை நிறைவேற்றி 'போதிசத்துவராக' அவர் ஆசனத்தினின்று எழுந்தார். 'शरीरं वा पातयामि, मन्त्रं वा साधयामि—என்னுடைய சரீரத்தை உதறுவேன்' என்ற தீவிர எண்ணம் வெற்றியைத் தரும். இத்தகைய 'சிரத்தை'உடையோரே தீரர் ஆவர்.

நம் உள்ளத்தில் இத்தகைய ஆழ்ந்த நம்பிக்கையும், தீவிர நாட்டமும், பக்தியும், இடையரு உழைப்பும், ஆர்வமும் எடுத்துக்கொண்ட கருமத்தில் மகிழ்ச்சியும், கருதிய கருமம் கைகூடும் வரை மனம் தளராத வலிவும் மேலோங்கி, சிரத்தை வடிவினராய்த் திகழ்ந்து சிறப்பெய்தி வாழ்வோமாக. ஹரி ஓம் தத் சத்.

செய்திகள்

நிகழ்பவை

முக்கிய அறிவிப்பு: அட்டை இரண்டாம் பக்கத்தில் 2—12—79 அன்று கரூரில் மாலை 5-00 மணிமுதல் 7-30 மணிவரை அந்தர்யோகம் நடக்கும் என்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆனல் அன்று கரூரில் அவ்வந்தர்யோகம் முழுநாள் அந்தர்யோகமாக நடக்கும். காலை 10-00மணிக்கு ஆரம்பித்து, மாலை 4-30 மணிக்கு முடிவுறும். மதிய உணவு தேவைப்படுபவர்கள் அன்று காலை 10 மணிக்குள் ரூ. 1-00 செலுத்தி பசுபதி பாளையம் விவேகானந்த கல்வி நிலையத்தில் சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

17–11–79 சனிக்கிழமையன்று இரவு 7 மணி முதல் 9-30 மணிவரை பல்லடம் தாலுகா கேத்தனூர் பெருமாள் கோவிலில் **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** அந்தர் யோகம் நடாத்துவார்கள்.

18–11–79 ஞாயிற்றுக்கிழமையன்று கோவை ஜில்லா உடுமலைப்பேட்டையில் தெய்வ சிகாமணி பட்டணத்திலுள்ள ஸ்ரீ ஸத்திய சேவா ஸமிதிக் கட்டடத்தில் **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** ஒரு நாள் அந்தர்யோகமும், அன்று திருநெல்வேலி ம. தி. தா. இந்து உயர்நிலைப் பள்ளியில் **ஸ்ரீமத் ஆத்மானந்த சுவாமிகள்** ஒரு நாள் அந்தர்யோகமும் நடாத்துவார்கள். அன்று மாலை உடுமலைப்பேட்டை ஆஸ்திக சபையில் 'தாயுமானவர் அருள் வாக்கு' என்னும் தலைப்பில் **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

1–12–79 சனிக்கிழமையன்று மேச்சேரி சன்மார்க்க சங்க ஆண்டு விழாவுக்கு **ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள்** தலைமைதாங்கி சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

10–12–79 திங்கட்கிழமை யன்று அன்னை ஸ்ரீசாரதா தேவியாரின் ஜயந்தியை முன்னிட்டுக் குருகுல மாணவர்கள் இருபத்து நான்கு மணி நேரம் அகண்ட நாம பஜனையும் நண்பகல் ஒரு மணி நேரம் ஐக்கிய வணக்கமும் செய்வார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

திருவாசகம்-பிரசார விலை ரூ. 14-00
ஸ்ரீமத் பகவத்கீதை - பிரசார விலை ... 12-00
ஞானயோக விளக்கம் ... 8-00
ராஜயோக விளக்கம் ... 8-00
பக்தியோக விளக்கம் ... 6-00
பரமஹம்ஸரின் பெருமை ... 6-00
விவேகானந்த விவரணம் ... 4-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம் ... 4-00
விவேகானந்த உபநிஷதம் ... 4-00
கடவுளின் வடிவங்கள் ... 4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I ... 3-50
சந்தேகம் தெளிதல் பாகம்-II ... 3 50
தினசரி தியானம் - பிரசாரவிலை ... 3-25
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி
ஏழாம் பதிப்பு-பிரசார விலை ... 3-00
அனுஷ்டான வேதாந்தம் ... 3-00
எதிர்கால இந்தியா ... 3-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரிதம் ... 3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை ... 3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்) ... 2-00
ஸ்ரீ சாரதா தேவியாரது சரிதம் ... 2-00
கண்ணன் என்னும் கடவுள் ... 2-00

தாயுமானவர் இயற்றிய

கருணாகரக் கடவுள் விரிவுரை ... 3-50
பரிபூரணானந்தம் ஷை ... 3-00
சின்மயானந்த குரு ஷை ... 3-00
ஆனந்தமானபரம் ஷை ... 3 00
சுகவாரி ஷை ... 3-00
மௌனகுரு வணக்கம் ஷை ... 3-00
எங்கும்நிறைகின்றபொருள் ஷை ... 2-50
பரசிவவணக்கம் ஷை ... 1-00
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்) ... 1 50
பஜனைப் பாடல்கள் ... 1-50
சந்நியாசி ... 1-25
குழந்தைகளின் களிக்கூடம் ... 1-00
இராவண தத்துவம் ... 1-00
சகோதரி நிவேதிதை ... 1-00
காயத்ரீ ... 1-00
வாலிமோட்சம் (நாடகம்) ... 1-00
தவப்புதல்வர்கள் (நாடகம்) ... 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்) ... 1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்) ... 1-00
பார்வதி லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம் ... 1-00
பிரஹ்லாதன் (நாடகம்) ... 1-00
மார்க்கண்டேயன் (நாடகம்) ... 1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும் ... 1-00

பாண்டவ கௌரவ பெருமை (நாடகம்) ரூ. 0-80
நன்மக்களைப் பெறுதல் ... 0-80
நோய்க்கு இடம் கொடேல் ... 0-80
*ஆத்ம சக்தி ... 0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா? ... 0-75
*மனிதனது நிஜசொரூபம் ... 0-70
*சக்தி தத்துவம் ... 0-70
*சிவ தத்துவம் ... 0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான் ... 0-60
*ஆலய வழிபாடு ... 0-60
*சூரியநாராயணன் ... 0-50
*முருகக்கடவுள் ... 0-50
*விஷ்ணு தத்துவம் ... 0-50
தெய்வீக மகிமைகள் ... 0-50
சைவன் யார்? ... 0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது? ... 0-50
தபோபலன் (நாடகம்) ... 0-40
*கணபதி ... 0-40
வர்ணாச்ரம தர்மம் ... 0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும் ... 0-30
The Bhagavad Gita (9th Imp.) ... 20-00
The Indian National Education ... 8-00
Sri Lalitambika Sahasranama Stotram ... 8-00
Ramakrishna Lives Vedanta ... 8-00
Facets of Brahman or The Hindu Gods ... 5-00
Daily Divine Digest (DELUXE) ... 4-50
Daily Divine Digest (Ordinary) ... 2-50
Mahabharata (with plastic cover) ... 4-00
Ramayana (do) ... 4-00
The Man Making Message of
Vivekananda (with plastic cover) ... 4-00
Sri Vishnu Sahasranama Stotram ... 4-00
Siva Sahasranama Stotram ... 3-50
The Bhagavad Gita (Small Size) ... 3-00
Hinduism Hosts Christianity ... 3-00
Holy Bible—In the Light of Vedanta ... 1-50
*Introducing the Gita ... 1-50
The Garland of Paraaparam ... 1-50
TAT TVAM ASI *(That Thou Art)* IN
Tayumana Swami ... 1-00
*Key to Higher Life ... 0.75
*The Teacher ... 0-60
*The Student ... 0-45

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக ஸ்ரீமத் பகவத்கீதைக்கு ரூ. 3-25ம் தினசரி தியானத்திற்கு ரூ. 2-40ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரை சேர்த்து அனுப்புங்கள்.

* இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

[பொருளடக்கத்தின் பின்பக்கத் தொடர்ச்சி]

M/s. பழனியப்பா டேனிங் கம்பெனி	சோழவரம் நகர், குரோம்பெட்	125
M/s. மீனுக்ஷி ஏஜன்ஸீஸ்	நேருநகர், சென்னை	125
ஸ்ரீ M D. சண்முகம்	L. I. C. பில்டிங்ஸ், ,,	101
ஸ்ரீ P. K. அனந்தராமன்	பிரகாசம் தெரு ,,	101
ஸ்ரீ S. குமரப்பன்	நக்கீரன் தெரு, மேற்கு மாம்பலம் ,,	101
ஸ்ரீ S. பெருமாள் கவுண்டர்	வனவாசி, சேலம்	101
ஸ்ரீமதி M. குப்பம்மாள் மல்லி செட்டியார்	,, ,,	101
ஸ்ரீ R. ராமகிருஷ்ணன்	மேற்கு சந்தைப்பேட்டை தெரு, மதுரை	100
மாதர் சன்மார்க்க சங்கம்	சுப்புராஜ் நகர், போடிநாயக்கனூர்	100
ஸ்ரீ M. V. S. முத்துவேல்	தெற்கு ராஜவீதி, தூத்துக்குடி	100
ஸ்ரீ P. T. இராமலிங்கம் செட்டியார் & சன்ஸ்	அவலூர் பேட்டை	100
ஸ்ரீ ப. பசுவலிங்கம்	கொண்டலாம் பட்டி, சேலம்	100
ஸ்ரீ M. பெரியண்ணன்	அயிலாப்பேட்டை, திருச்சி	100
ஸ்ரீ G. நடராஜன்	ஸ்ரீ காளகஸ்தி, சித்தூர்	100
ஸ்ரீமதி E. விசாலாட்சியம்மாள்	காவிரிப்பட்டணம், தர்மபுரி	100
ஸ்ரீ V. V. L. P. ரத்தினம்	பாலக்கரை, திருச்சி	100
ஸ்ரீ N. அழகியமணவாளன்	பாலக்கரை, திருச்சி	100
M/s. சுவாமி மில்ஸ் ஸ்டோர்ஸ்	திருச்சி	100
செல்வி R. ராதா	காவிரிப்பட்டணம், தர்மபுரி	100
ஸ்ரீ A. முத்தையா	சிவன் கோவில் தெரு, செட்டிநாடு	100
ஸ்ரீ M. காசிநாதன்	ரைஸ்மில், பள்ளத்தூர்	100
ஸ்ரீ ப.ந.ப.செ. பழனியப்ப செட்டியார்	புது அரிமளம், புதுக்கோட்டை	100
ஸ்ரீ A. P. R. பழனியப்ப செட்டியார்	,, ,,	100
ஸ்ரீ T. வள்ளியப்ப செட்டியார்	P. அழகாபுரி, கீழச்சிவற்பட்டி	100
ஸ்ரீ மு.ப.அ.சொ. முத்துபழனியப்ப செட்டியார்,	குருவிக்கொண்டான்பட்டி	100
ஸ்ரீ K. M .A. M. லெக்ஷ்மண செட்டியார்	கோனாப்பட்டு	100
ஓர் அன்பர்	பலவான்குடி, இராமநாதபுரம்	100
ஸ்ரீ அன்பு நாச்சியப்ப செட்டியார்	கண்டனூர் ,,	100
ஸ்ரீ N.M.A.RM. ராமசாமி செட்டியார்	சண்முகநாதபுரம் ,,	100
ஸ்ரீ வெ. சுப்பிரமணியம் செட்டியார்	A. சிறுவயல் ,,	100
ஸ்ரீ T. சுப்பையா செட்டியார்	கல்லல் ,,	100
ஸ்ரீமதி P. ருக்மணி அம்மாள்	ஆலத்துடையான்பட்டி, திருச்சி	100
ஸ்ரீ M.K.P. வெங்கடேச செட்டியார்	வனவாசி, சேலம்	100
ஸ்ரீ M. பெரியசாமி	திருநீர்மலை ரோடு, நாகல்கேணி, சென்னை	100
ஸ்ரீ K. ராதாகிருஷ்ணன்	படேல்நகர், தாம்பரம்	100
ரூ. 100க்குக் கீழ்வந்த நன்கொடைகளும் மற்றவையும்		8 416
	ஆகக் கூடுதல் ரூ.	4 15 168

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sambarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.